
# திருக்கோயில்

நவம்பர் 1976 ரூ. 1

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
14 பிப் 1977
EGMORE, MADRAS-8.





திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில், தமிழக ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்களும், முன்னாள் முதல்வர் மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் அவர்களும், விழா நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்ளுதல். தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்களும், உதவியாணையர்—நிர்வாக அதிகாரி திரு. என். எஸ். இராமச்சந்திரன், B.A., B.L., அவர்களும் உடனுள்ளனர்.



முகப்பு :

அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி (உற்சவர்),
திருவல்லிக்கேணி

COMMISSIONER OF TAMIL NADU ARCHIVES AND HISTORICAL RESEARCH EGMORE, MADRAS-8. 14/8/197

# திருக்கோயில்

மாலை : 20 நள ஆண்டு—கார்த்திகைத் திங்கள் நவம்பர்—1976 மணி : 2

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்,
அறநிலைய ஆட்சித் துறை,
சென்னை—600 034

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

## பொருளடக்கம்

இருபேச்சுடையான்
—நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயீல்

சச்சிதானந்தம்
—சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர், தேவகோட்டை.

சாரங்கி —திரு. மீ. ப. சோமசுந்தரம்

ஆட்கொள்ளும் வித்தகர்—ஆசிரியர்

மணிவண்ணன்
—ஸ்ரீமத் அண்ணங்கராசார்ய சுவாமிகள்

சீவக சிந்தாமணி
—திரு. க த. திருநாவுக்கரசு, M.A., M.Litt.

கடலூர் கருத்தரங்கச் சிறப்புரை
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S.,

காஞ்சிமாநகரில் கவின்மிகு கோயில்கள்
—திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

இளங்கோவடிகள்
—திரு. கி. வா. ஜகந்நாதன், M.A.,

திருக்கழுக்குன்றத்தில் நால்வர் கோயில்
—அருட்டிரு அடிகள் அடிகளார்

அருமையில் எளிய அழகே போற்றி—ஆசிரியர்

அடைக்கலம்
—டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனாபதி, M.A., Ph.D.,

திருமூழிக்களத்து விளக்கு
—டாக்டர் திரு. ந. சுப்பு ரெட்டியார், M.A., Ph.D.,

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

# இரு பேச்சுடையான்

நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயீல்

158618

'தன் அன தம்பியும்,
தாயர் மூவரும்,
சொன்னதேர் வல்லனும்,
தூய தோழனும்,
துன்னிளர் ஏறலும்
துழா துடுப்பு எனும்
நல் நயக் காலினால்
நடத்தல் மேயினான்

''தன் அன தம்பி'' என்பது சத்துருக்கனைக் குறிக்கும் சொற்றொடர். இதற்கு இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். தன்னைத் தானே ஒத்த—அதாவது, தனக்கு வேறு உவமையில்லாத தம்பி என்பது ஒரு பொருள், இரண்டாவது பொருள், தன்னை ஒத்த—அதாவது, பரதனை ஒத்த தம்பி என்பது. எப்படிப் பொருள் கொள்ளினும் அது சத்துருக்கனுடைய சிறப்பை எடுத்துக் காட்டுவதாகவேஅமையும்.

கடைசியாக, பரதன் சேனையை நிறுத்தி விட்டு, இராமன் இருக்கும் இடத்திற்குச் சத்துருக்கனுடன் சென்று, இராமனை அணுகுகிறான். இதனைக் கம்பன்,

''. . . . . . . . . . . .
. . . . . . . . . . . .
. . . . . . . . . . .பரதனும்
நிமிர்ந்த சேனையை,
'பின் தருக' என்று தன்
பிரிவு இல் காதலின்,
தன் துணைத் தம்பியும்
தானும் முந்தினான்''

என்று குறிப்பிடுவான். 'தன் பிரிவு இல் காதல் தன் துணைத் தம்பி' என்ற சொற்றொடரிலேயே பரதனிடத்துச் சத்துருக்கன் வைத்திருந்த எல்லையற்ற ஈடுபாடும் அளவற்ற அன்பும், பரதனுக்குத் தம்பியாக மட்டுமின்றித் துணைவனாகவும் சத்துருக்கன் இருந்தான் என்பதும் நன்கு வெளிப்படுகின்றன. இதற்குப் பின் திருவடி சூட்டுப் படலத்தில் நிகழ்ந்த எந்த நிகழ்ச்சியிலும் பேச்சிலும் சத்துருக்கனைப் பற்றிக் கவிஞன் எதுவுமே தனியாகவோ பரதனோடு சேர்த்தோ சொல்லவில்லை.

பாலகாண்டம், அயோத்தியா காண்டம் ஆகிய இரு காண்டங்களில் இப்படியாகக்காணப் படுகிற சத்துருக்கனைப் பற்றிய எந்தப் பேச்சுமே ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் ஆகிய மூன்று காண்டங்களிலும் அறவே இல்லை. யுத்த காண்டத்தில் கூட, இறுதியாக மீட்சிப் படலத்தில்தான் அவன் காட்சியளிக்கின்றான். இடையே பரதனைப் பற்றியாயினும் ஓரிரு பேச்சுக்கள் வருகின்றன. சுக்கிரீவன் போருக்கு அழைக்க, அவனோடு பொருதற்காக வருகின்ற வாலியின் தோற்றத்தை வியந்து கூறிய இராமனிடத்து, தன் தமையனைக் கொல்வதற்காக, இராமனைக் கொண்டு வந்து நிறுத்திய சுக்கிரீவனைப் பற்றிச் சற்று இழிவாக இலக்குவன் சொன்னபோது,

'அத்தா! இது கேள்' என,
ஆரியன் கூறுவான், 'இப்
பித்து ஆய விலங்கின்
ஒழுங்கினைப் பேசல் ஆமோ?
எத்தாயர் வயிற்றினும், பின்
பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால், பரதன் பெரிது
உத்தமன் ஆதல் உண்டோ?

என்று இராமன் இலக்குவனிடத்துச் சொல்லும் போது பரதனைக் குறிப்பிடுகிறான். அசோக வனத்தில் சிறையிருக்கும் சீதை பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்கிறாள். சடாமுடியுடன் இராமனைத் திரும்பியழைத்துப் போவதற்காகப் பரதன் சித்திரகூடத்திற்கு வந்ததையும், அவன் தோற்றத்தைக் கண்டு இராமன் இரங்கி ஏங்கியதையும் நினைத்துப் பார்க்கிறாள். இங்கும் பரதனைப் பற்றிய பேச்சுக் காணப்படுகிறது. இந்திரஜித்து மாயா சீதையைக்கொன்று விட்டு அயோத்தி நோக்கிச் செல்வதாக வடக்கு நோக்கிப் போக்குக் காட்டியதை உண்மை என்று நம்பிய அனுமன், இராமனிடம் அதைச் சொல்ல, இராமன் பெருந்துயரில் ஆழ்கிறான். அப்போது இலக்குவன், இந்திரஜித்தால் பரதனை வெல்ல முடியாது என்றும்,

'தீக் கொண்ட வஞ்சன் வீச,
திசைமுகன் பாசம் தீண்ட,
வீக் கொண்டு விழ
யானோ பரதனும்?'

என்று கேட்கிறான். ஆக, இங்கும் பரதன் பேசப்படுகிறான். இம் மாதிரியாக, பரதனைப் பற்றிய பேச்சுக்கள் ஒன்றிரண்டு இங்குமங்குமாக இருக்க, சத்துருக்கனைப் பற்றிய எந்தப் பேச்சுமே இல்லை. என்றாலும், இறுதியாகச் சத்துருக்கனை மீட்சிப் படலத்தில் கவிச்சக்கரவர்த்தி காட்டும்போது, அவனை மாபெரும் உத்தமனாகக் காட்டிவிடுகிறான். இதுவரையி

லும், அவனைப் பற்றிப் பேசாத பிழைக்கும் பரிகாரம் செய்தாற்போல, வான்மீகி படைக்காத ஒரு புதிய காட்சியைப் படைத்து அதில் சத்துருக்கனுக்கு ஓர் உன்னதமான இடத்தைக் கொடுத்துவிடுகிருன்.

நந்தியம்பதியில் இருக்கும் பரதன், இராமன் திரும்பி வருவதற்கான நாள் எது என்று ஆலோசிக்கிருன். இராமன் திரும்பி வர வேண்டிய நாள் இதுதான் என்று சோதிடர்கள் கூறுகிருர்கள். அதைக் கேட்டு, பரதன் மூர்ச்சித்து விழுகிருன். பின்பு பலவாறு புலம்புகிருன். இறுதியாக 'மனத்து மாசு என் உயிரொடும் வாங்குவேன்' என்ற முடிவுக்கு வருகிருன். உடனே சத்துருக்கனை அழைத்து வரச் சொல்கிருன். மூவர்க்கும் பின்னுளான் வந்து சேர்கிருன். தொழுது நின்ற தன் தம்பியைத் தோய் கணீர் எழுது மார்பத்து இறுகத் தழுவினுன் பரதன். தழுவி, அழுது, ''நான் உன்னிடம் வரம் ஒன்று வேண்டப் போகிறேன். அது நின்ஞல் தரற் பாற்று'' என்று கூறி, தொடர்ந்து ''அவ் வரம் என்னவென்று கேட்பாயாகில், சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்; மின்னு தீயிடை யான் இனி வீடுவென்; நீ மன்னன்ஆதி, என் சொல்லை மறுக்காதே'' என்கிருன். இப்படி, பரதன் சொன்னவுடன் சத்துருக்கன் என்ன செய்தான்; என்ன சொன்ஞல் என்பதை மிக அற்புதமாகக் கம்பன் எடுத்துக் காட்டுவான். பரதனுடைய இவ் வார்த்தைகளைக் கேட்ட சத்துருக்கன் தன் கைகளால் தன் காதுகளைப் பொத்திக் கொண்டு, துணுக்குற்று, ஊட்டப்பட்ட நஞ்சினை உண்டவனின் நிலையை ஒத்தான். கண்களும் மனமும் நடுங்கத் தொடங்கிவிட்டன. இந்த இடத்தில் கம்பன் சத்துருக்கனைத் 'தோன்றல்' என்று குறிப்பிடுவான். கீழே விழுகிருன்; தொடர்ந்து விம்மிக் கொண்டிருக்கிருன்; பெருமூச்சு விடுகிருன். பின்னர் எழுந்து பரதனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிருன். அதுதான், 'நான் உனக்கு என்ன பிழை செய்தேன்? என்ற கேள்வி. இது வெறும் கேள்வியாக மட்டும் வரவில்லை. அரற்றலாகவே வருகிறது. அக்கணத்தில் கொழுந்து விட்டெரியும் கோபத்தையுடையவனுகச் சத்துருக்கன் தோன்றுகிருன். 'உனக்கு நான் என்ன பிழை செய்தேன்?' என்ற கேள்வியிலேயே சத்துருக்கனுடைய உத்தம குணங்கள் அனைத்தும் ஒருங்கே வெளிப்படுகின்றன. 'மன்னன் ஆதி' என்றுதான் பரதன் சொன்ஞன். அந்தச் சொல்லே சத்துருக்கனுடைய உயிரை உண்ணும் நஞ்சாகிறது. அது தனக்கு விதிக்கப்பட்ட மாபெரும் தண்டனை என்று அவன் கருதுகிருன். இந்தத் தண்டனையை நான் அடைவதற்கு—இந்தத் தண்டனையை நீ எனக்கு அளிப்பதற்கு-நான் என்ன பிழை செய்தேன்?' என்று பரதனைக் கேட்கிருன். இந்த நிகழ்ச்சியைக் கவிஞன் எப்படி எடுத்துக் காட்டுகிருன் என்று பாருங்கள்.

''கேட்ட தோன்றல், கிளர் தடக் கைகளால்
தோட்ட தன் செவி பொத்தி, துணுக்குரு
ஊட்டு நஞ்சம் உண்டான் ஒத்து உயங்கினுன்,
நாட்டமும் மனமும் நடுங்கா நின்ருன்''

''விழுந்து, மேக்கு உயர்
விம்மலன், வெய்து உயிர்த்து,
எழுந்து, 'நான் உனக்கு
என்ன பிழைத்துளேன்?
அழுந்து துன்பத்தினுய்!
என்று அரற்றினுன்
கொழுந்துவிட்டு நிமிர்கின்ற
கோபத்தான்''

'நான் உனக்கு என்ன பிழை செய்தேன்?' என்று தான் கேட்ட கேள்வியின் பொருளை சத்துருக்கனே விளக்குகிருன். ''தசரதனுக்குப் புத்திரராக நால்வர் பிறந்தோம். முறைப்படி தனக்குக் கிடைக்க வேண்டிய ஆட்சியை விட்டு விட்டு ஒருவன் வனத்துக்குச்சென்ருன். அவனைக் காத்துப் பின் போனுன் அவன் தம்பியருள் ஒருவன். அப்படிக் காட்டுக்குச் சென்ற அண்ணன் திரும்பி வருவதற்குரிய காலம் கடந்து விட்டது என்று துன்பப்பட்டு இறக்க முயல்கிருன் இன்னெரு தம்பி. மற்ருெரு தம்பியாகிய நானே வெட்கம் கெட்டு இந்த அரசை ஆள்வேன்? என்ன இவ்வரசாட்சி'' என்கிருன். இராமன் பரதன் இலக்குவன் ஆகியவருக்குப் பின் பிறந்த தம்பியாகிய தனக்கு மற்றவர்களுக்கு இருக்கிற உடன் பிறப்பன்பு இல்லையா? அவர்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட ஆட்சியை ஏற்றுக் கொள்வதற்குத் தான் என்ன அவ்வளவு கேவலமானவனு? குறித்த காலத்தில் இராமன் திரும்பி வரவில்லை என்பதற்காகப் பரதன் உயிர்விடத் துணிந்திருக்கும்போது தம்பியாகிய தானே ஆட்சியை ஏற்றுக்கொண்டு மகிழ்ந்திருக்கப் போகிறவன்? இராமனிடத்துப் பரதனும், இலக்குவனும் வைத்திருக்கின்ற அன்பும் பாசமும் தனக்கும் இல்லையா? இந்த இராச்சியமானது அத்தகைய அன்பையும் பாசத்தையும்விட இனிமையானதா? என்றெல்லாம் சத்துருக்கனன் தன்னுடைய உணர்ச்சிகளைக் கொட்டி விடுவதாகப் பரதனுக்கு அவன் அளிக்கும் இந்த விடை அமைந்திருக்கிறது. சத்துருக்கனுடைய இந்த விடையை எடுத்துக் கூறும் கம்பனின் பாட்டு,

''கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனுனைக் காத்து, பின்,
போனுனும் ஒரு தம்பி; 'போனவன்
தான் வரும் அவதிபோயிற்று' என்ஞ
ஆனுத உயிர்விட என்று அமைவானும்
ஒரு தம்பி; அயலே நாணுது
யானும் இவ்வரசு ஆள்வென்? என்னே,
இவ் அரசாட்சி இனிதே அம்மா!''

என்பது. சுருங்கச் சொன்ஞல், 'இராமனுக்குப் பின் பிறந்தாரில் இராமனைப் பிரிந்திருக்க முடியாமல் ஒரு தம்பி அவனேடு காட்டுக்கு ஏக, அவன் திரும்பி வரவில்லையே என்று மற்ருெரு தம்பி உயிரை விடத் துணிய, அரசை ஏற்றுக் கொள்வதாகிய இந்த வெட்கங்கெட்ட செயலைச் செய்ய என்னைத்தான் நீ தேர்ந்தெடுத்தாயோ? என்று சத்துருக்கன் பரதனைக் கேட்குமாப்போல் இந்தக் கூற்று அமைந்திருக்கிறது.


இதுவரையிலும் தசரத புத்திரர் முதல் மூவரோடு தன்னையும் சேர்த்துச் சத்துருக்கன் பேசுகிறான். அந்தப் புதல்வர் நால்வரில், இராமனை என்றும் எங்கும் விட்டுப் பிரியாமல் இலக்குவன் இருந்ததைப் போல, பரதனை என்றும் எங்கும் விட்டுப் பிரியாமல் சத்துருக்கன் இருந்தான் என்பதைக் கவிஞன் முன்னமே எடுத்துக் காட்டியதைக் கண்டோம். பரதனுக்கும் தனக்குமுள்ள இந்தப் பிறப்புறவை அடிப்படையாக வைத்துச் சத்துருக்கன் தொடர்ந்து பேசுகிறான், ''இராமன் காட்டிற்குச் சென்ற பிறகே வளமிக்க அயோத்தி நகரில் மகிழ்ச்சியோடு பரதன் வாழ்ந்தான்'' என்று உலகம் சொல்லும் என அஞ்சி, அந் நகருக்குப் புறம்பாக நந்திக்கிராமத்தில் அரச வேடம் தாங்காது தவவேடம் தாங்கி நீ அரிய தவம் செய்து கொண்டிருந்தாயே! உனக்குப் பின் பிறந்தவன் இந்தச் சத்துருக்கன் என்ற எண்ணம் உனக்கு இருந்தால் நீ இறந்ததற்குப் பின் நான் உயிர் வாழ்வேன் என்று எப்படிக் கருதினாய்? உனக்குப் பின் நான் உயிர் வாழவே மாட்டேன். அப்படி உயிர் வாழ்ந்திருப்பதும் வெண்கொற்றக் குடைக்குக் கீழ் இருந்து அரசாட்சி செய்வதும் ஒன்றுதான்'' என்று கூறுகிறான். அதாவது 'உனக்குப் பின் நானும் மாய்வது திண்ணம். ஆகையால், நான் ஆட்சியை ஏற்றுக் கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. அப்படி நான் உயிர் வாழ்வதும் ஆட்சியை ஏற்றுக் கொள்வதும் ஒன்றேதான்'' என்கிறான். ''நாணாது யானும் இவ்வரசாள்வேன்?'' என்று முன்னர்க் கூறினானல்லவா? ''நாணாது யானும் உயிர் வாழ்வேன்?'' என்று சத்துருக்கன் கேட்பதை வற்புறுத்துவதற்காகவேதான் உயிர் வாழ்வதும் ஆட்சியை ஏற்றுக்கொள்வதும் ஒக்கும் என்று கவிஞன் கூறுகிறான். இதனைக் கம்பன்,

''மன்னின் பின் வள நகரம் புக்கு
  இருந்து வாழ்ந்தானே பரதன் என்னும்
சொல் நிற்கும்'' என்று அஞ்சி, புறத்து
  இருந்தும், அருந்தவமே தொடங்கினாயே!
''என்னின் பின் இவன் உளனாம்'' என்றே
  என் அடிமை உனக்கு இருந்ததேனும்,
உன்னின் பின் இருந்ததுவும், ஒரு குடைக்கீழ்
  இருப்பதும் ஒக்கும்' என்றான்.''

என்ற பாட்டிலே எடுத்துக் காட்டுவான். இதுதான் கம்பனுடைய இராம காதையில் சத்துருக்கன் இரண்டாம் முறையாகவும் இறுதி முறையாகவும் பேசும் பேச்சு. இப் பேச்சிலே அவனுடைய உத்தம உயர் குணங்கள் அத்தனையும் ஒருங்கே தோற்றமளிக்கின்றன. இந்தப் பேச்சினைக் கவிஞன் எடுத்துக் கூறுகின்ற முறை சத்துருக்கனை, ஓர் உயர்ந்த, பவித்திரமான பாத்திரமாகக் காட்டி விடுகிறது. கதையிலே அவன் ஒரு சிறு பாத்திரம்; அவனை மிகச் சிறிய அளவிலேயே பார்க்கிறோம் என்பதை அறவே மறக்கச் செய்து விடுகிறது. இத்தகைய உத்தம குணங்கள் நிறைந்திருந்தமையால்தான் சத்துருக்கன் பிறப்பினால், பூமியும் வேதங்களும் மகிழ்ச்சியினால் துள்ளி ஆடின என்று கவிஞன் முன்னர்ப் பாடினான் என்று கொள்ள முடியும்.

சத்துருக்கனுடைய இந்தப் பேச்சுக்குப் பிறகு, தான் இறப்பதற்கு எரியமைக்குமாறு பரதன் அவனை ஏவுகிறான். செய்தியறிந்த கோசலை விரைந்தோடி வந்து விலக்க முயன்றும் கேளாமல், அக்கினியை அடுத்துப் பரதன் பூசை செய்கிறான். அந்த வேளையில் அனுமன் வந்து எரியை அவிக்கிறான். இராமன் வந்து சேர்ந்த பிறகு பரதனோடு சத்துருக்கனும் இராமனை வணங்குகிறான். பரத சத்துருக்கருக்கு இராமன் தன்னுடன் வந்த துணைவர்களை அறிமுகப்படுத்தி வைக்கிறான். கடைசியாக முடிசூட்டு விழாவின்போது சேர்ந்து சத்துருக்கனும் கவரி வீசுகிறான். இவ்வளவுதான் சத்துருக்கனுடைய கதை.

வால்மீகி செய்யாத ஒரு பெரும் செயலை, பரதனுடைய தீக்குளிப்பு நிகழ்ச்சியில் கம்பன் செய்து விடுகிறான். கம்பனுடைய இந்தக் காட்சியினால் இராம காதையின் பல முக்கியப் பாத்திரங்களுடைய பெருமை பன்மடங்கு பெருகுகிறது. பரதன், தன்னுடைய அண்ணன் குறித்த நாளில் மீளாமை கண்டு தன் உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றதில் தன் பெருமையை உயர்த்திக் கொள்கிறான். அவனை, அச் செயலிலிருந்து தடுக்கும் முயற்சியில் 'நீ இறந்தால் இப்பொழுதே உலகு இறக்கும்; புண்ணியம் எனும் நின்னுயிர் போயினால், மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ? எண்ணில் கோடி இராமர்கள் எண்ணினும் அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவாரோ? என்றெல்லாம் கூறுவதன் மூலம், கோசலை தன் பெருமையை எண்ணில் கோடி மடங்காகப் பெருக்கிக் கொள்கிறாள். தந்தை வேகமும், தன் நாயகன் தனிச் சிலையின் முந்து சாயகக் கடுமையும், பிற்பட முடுகி, சிந்தை பின்வர, வேகமாக, சரியான சமயத்தில் வந்து எரியை அவித்துப் பரதனுடைய உயிரைக் காத்து அதன் மூலமாக இராமனது உயிரையும் உலகையும் காத்த அனுமன் தன் திறனையும் பணியின் சிறப்பையும் பன்மடங்கு பெருக்கிக் கொள்கிறான். இம் மூவரையும் ஒத்து அவர்களுடைய வரிசையில் சத்துருக்கனும் குணத்தின் குன்றாகவும் உத்தமத் தம்பியாகவும் பண்புப் பெட்டகமாகவும் பொலிந்து நிற்கிறான்.



# சச்சிதானந்தம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்.
தேவகோட்டை.

பரம்பொருளாகிய சிவபெருமானது பேரருட் குணங்கள் எட்டனுள், முதற்கண் வைத்துப் போற்றப் பெறுவன மூன்று குணங்கள். அவை தோற்றக் கேடின்மை, பேரறிவுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாகும். சிவபெருமான் ஒருவனையல்லாத மற்ற உயிர்த் தொகுதியெல்லாம் தோற்றக்கேடுகளை உடையனவாய் உழன்றுகொண்டிருப்பனவாகும்.

'ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி' என்றும், 'மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்' என்றும், 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம்' என்றும், திருவாசகம் சிவபெருமானைத் துதிக்கின்றது. எப்பொழுதும் நிலையாயிருக்கிற பொருள், எந்த வேளையிலும் எதிலிருந்தும் தோன்றமாட்டாது. அங்ஙனம் தோன்றாமையே, அதன் அழியாமைக்கும் காரணமாயிருக்கும். தோன்றுவதனைத்தும் அழிந்தே தீருமென்பதைத், 'தோற்றம் உண்டேல் மரணம் உண்டு' என்ற சுந்தரமூர்த்திகள் திருவாக்கு உணர்த்துகின்றது.

எந்தப் பொருள், பிறிதொரு பொருளால் தோற்றுவிக்கப் பெறாமல் என்றும் நிலையாயிருக்கின்றதோ; அந்தப் பொருளே அனைத்துப் பொருள்களையும் தோற்றுவிப்பதாகவும், தோன்றிய அவற்றை உரிய கால எல்லைவரை நிலைநிறுத்துவதாகவும், பின்னர் ஒடுக்குவதாகவும் இருக்கும். இதனையே சிவஞானபோத முதற் சூத்திரம், ''ஒடுங்கி உளதாம்'' என்று கூறிச் சிவபெருமானை ''ஒடுங்கி'' என்ற வினையாலணையும் பெயராற் குறித்துச், ''சங்கார காரணனாகிய முதலே முதல்'' என்று தெளிவுபடுத்தி வலியுறுத்துகிறது.

திருவெம்பாவையின் இறுதித் திருப்பாடலில் ''போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம், போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள், போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்'' என்று மணிவாசகப் பெருந்தகையார் அருளிச் செய்து, 'ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதியின் அடிமலர்களே, திருமால் பிரமனாகிய அனைத்துயிர்களின் தோற்றநிலை இறுதிகளைச் செய்து கொண்டிருக்கின்றன' என்பதை விளக்க வைத்தருளினார். சிவபுராணத்தில் ''ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும், ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்'' என்ற பகுதியும் இங்கே நினைவு கூரத் தக்கதாகும்.

தோற்றக் கேடுகளில்லாத சத்துப் பொருளாய் விளங்கும் சிவபெருமான், பேரறிவுப் பிழம்பாகவும் வீற்றிருந்து எல்லா உயிர்களுக்கும் நல்லருள் புரிந்து வருகின்றார். என்றும் அழியாது ஒரேபடித்தாய் இலங்கிக் கொண்டிருக்கும் இறைவன், அவ்வழியாத் தன்மையொன்றினால் மட்டும் ஆன்மாக்களுக்கு அநுக்கிரகம் செய்துவிட முடியாது. ஆன்மாக்களும் இறைவனோடொப்ப அழியாத் தன்மை உடையனவேயாயினும், அவற்றிற்கு முதற்படைப்புக் காலத்தில் வந்த அழியும் பொருள்களின் அத்துவிதத் தொடர்பு முத்திக் காலம் வரை நீங்காது நின்று, தோற்ற ஒடுக்கங்களுக்கு உட்படுமாறு அவற்றைச் செய்து வருகின்றது. நிலைபேறுடையதாகிய சிவம், நிலைபேறுடையனவாகிய உயிர்களுக்கு, நிலைபேறுடையதாகிய திருவருளைப் புரியவே, மெய்ஞ்ஞானமாகி மிளிர்ந்து கொண்டிருக்கின்றது'' என்பது உணரத் தக்கதாகும்.

பதி, பசு, பாசங்களாகிய அநாதி நித்தியப் பொருள்கள் மூன்றனுள், பதி எதனையும் அறிவிக்காமலே அறியவல்லது. பசு அறிவித்தால் அறிவது. பாசம் அறிவித்தாலும் அறியாதது. அதனால் பதியாகிய சிவபெருமான் வழங்கும் நல்லருளை, அவர் செலுத்துகின்ற அளவுக்குச் சென்று நுகரும் வாய்ப்பு, பசுக்களாகிய ஆன்மாக்களுக்கே உண்டு என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். பசு வர்க்கத்தினராகிய நம்மவரது நலத்தில் நாட்டங் கொண்டு, ஞானப் பெருங்கடலாகத் திகழும் சிவபெருமானது திருவருட் சக்திகளை இச்சை, ஞானம், கிரியை என மூவகைப்படுத்தி அருள் நூல்கள் கூறும். உமாதேவி என்று சொல்லப் பெறும் சிவசக்தி மெய்ஞ்ஞான வடிவமானது. ''சத்தி தன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்'' என்பது சிவஞானசித்தியார்.

சத்துப் பொருளாகி அழியாது விளங்கும் சிவபெருமான், சித்துப் பொருளாகி அறிவுப் பிழம்பாகவும் விளங்குவதனாலேயே உயிர்களுக்கு வேண்டுவனவற்றை யறிந்து உதவி புரிபவராக வீற்றிருக்கின்றார். '-நன்றெலாம் ஞானசக்தியால் நயந்து அறிவன் நாதன்'' என்பது அருணந்தி சிவத்தின் திருவாக்கு. உயிர்களின் உய்திக்குக் கருவியாய் இருந்து உதவு

கின்ற, சித்துப் பொருளாகிய ஞானசக்தியை உடைமையினால் மட்டும், சிவத்தின் உதவி உயிர்களுக்கு வந்துவிடமாட்டாது. அறிந்து உதவுகின்ற சிவம், உதவும் பொருளாகிய இன்பத்தையும், உடையதாய் இருத்தல் வேண்டும் அல்லவா? அதனாலேயே அது சத்தும், சித்தும் ஆனந்தமுமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

மாகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்தனுள், ''சோமாஸ்கந்த'' மூர்த்தமும் ஒன்று. அம் மூர்த்திக்குரிய ஒரு அருச்சனை நாமம் ''சச்சிதானந்த விக்கிரகம்'' என்று அவரைக் குறிக்கும். சத்து சித்து ஆனந்தம் என்ற மூன்று சொற்களும் சேரும்போது ''சச்சிதானந்தம்'' எனவரும். உண்மை அறிவு இன்பம் என்பது இதன் பொருள். சிவபெருமானது திருவுருவம் உண்மையறிவின்ப வடிவினது என்பது இதனால் விளங்கும். சோமாஸ்கந்த மூர்த்தத்தில் சிவபெருமான், உமாதேவி, முருகன் ஆகிய மூன்று மூர்த்திகளும் இடம் பெற்றிருப்பர். சிவபெருமானைச் சத்து மூர்த்தியென்றும், அவரின் வேறு அல்லாத உமாதேவியாரைச் சித்து மூர்த்தியென்றும், அவர்களின் வேறல்லாத முருகப் பெருமானை ஆனந்த மூர்த்தியென்றும் ஞான நூல்கள் கூறுகின்றன.

''சத்தெனச் சொலும் தாவில் சிவத்திலும்
சித்தெனச் சொலும் தேவி யிடத்திலும்
புத்தி ரப்பெயர் பூண்டிலகு ஆனந்த
வத்து வின்கழல் வாழ்த்தி வணங்குவாம்''

என்று பாம்பன் சுவாமிகள் முருகப்பெருமானைத் துதிக்கின்றார். எண்ணிக்கையால் மூன்றாக இருக்கும் இம்மூர்த்திகள் மூவரும் பொருளால் ஒருவரே என்பது, சித்தாந்த சைவ பாரம்பரியத்தில் அறிவும், அநுபவமும் பெற்றவர்களுக்கு நன்கு விளங்குவதாகும். ''பூவண்ணம் பூவின்மணம்போல மெய்ப்போத இன்ப, மாவண்ண மெய்கொண்டவன்'' என்பது திருவிளையாடற் புராணம். பூவும் அதன் வண்ணமும், மணமும் எண்ணிக்கையால் மூன்றாக அறியப் படுவனவேனும் கலப்பு நிலையால் ஒன்றாகக் காணப்படுவது கண்கூடு. அதுபோலவே சத்துப் பொருளாகிய சிவபெருமானும், சித்துப் பொருளாகிய உமாதேவியாரும், ஆனந்தப் பொருளாகிய முருகப்பெருமானும் எண்ணிக்கையால் மூவராக இருந்து பொருளால் ஒன்றாக விளங்கி உயிர்களுக்கு அருள் புரிவார்கள்.

அங்ஙனம் அருள் புரிந்து வருகின்ற திருத்தலங்கள் பலவற்றுள் ''புள்ளிருக்கு வேளூர்'' என்ற வைத்தீசுவரன் கோயில் முன்னணியில் இருப்பது. இங்குச் சிவபெருமான் 'வைத்திய நாதர்' என்ற திருப்பெயருடனும், உமாதேவியார் 'தையல்நாயகி' என்ற திருப்பெயருடனும் முருகப்பெருமான் 'செல்வமுத்துக்குமாரர்' என்ற திருப்பெயருடனும், பிரார்த்தனை மூர்த்திகளாக எழுந்தருளியிருந்துவேண்டுவார் வேண்டுவனவற்றை வழங்கி அருள் புரிந்து வருகின்றார்கள். இத்தலத்திற்கு வந்து செய்யும் வழிபாடு, நிலையான சிவஞானத்தை வழங்கிப் பேரின்பத்தில் திளைக்கும் வண்ணம் வைக்கும் என்பது உறுதி.

. . . . . சர்க்கரைக்கின்
றின்புருவ மன்றிஎழிலுருவம் வேறுண்டோ
இன்புருவ மேயிறைக்கும் என்''
—துகளறு போதம்.


# அருள்மிகு
# பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்

திருவல்லிக்கேணி, சென்னை-5.

தொலைபேசி எண் : 844168

## அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி இலட்சார்ச்சனை

நாளது நள வருடம் தை மாதம் 8-ம் தேதி முதல் 27-ம் தேதி வரையில் (21—1—77 முதல் 30—1—77 தேதி வரையில்) தினந்தோறும் இலட்சார்ச்சனை நடைபெறும். டிக்கட் ஒன்றுக்கு ரூ. 15/- திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

பக்தர்கள் இதிற் பங்கு கொண்டு அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி அனுக்கிரகத்திற்கு பாத்திரராக வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

E. பொன்னப்பபிள்ளை, B.Com., B.L.,

நிர்வாக அலுவலர்/தக்கார்

# சாரங்கி

திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள்

சிறு பையனாக இருந்தபோது திருநெல்வேலியில் என்னுடைய உறவினர் ஒருவர் வீட்டின் மேல் முகட்டிலே, ஏதோ செருகி வைத்திருந்ததைப் பார்க்க நேரிட்டது. தை மாதப் பொங்கற் பண்டிகையை முன்னிட்டு வீட்டை வெள்ளையடித்தபோது முகட்டிலிருந்து அந்த 'ஏதோ ஒன்றை' வெளியே எடுத்தார்கள். அதற்குப் பெயர் 'சாரங்கி' என்றார்கள்.

இந்த உறவினருடைய குடும்பம் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் ஸ்தானிகராக இருந்து வருகிற பரம்பரை ஓதுவார்களின் குடும்பம். வழிபாட்டின்போது வழிவழியாக வழங்கி வருகிற பண் முறைப்படி, கோயிலிலே தேவாரம் ஓதுகிற சிவதேசிகர்களின் குடும்பம் அது. இந்தக் குடும்பத்தில் சாரங்கி என்ற இசைக்கருவி எப்படி வந்தது? அது எதனால் வீட்டின் முகப்பிலேயே உட்கார்ந்து கொண்டது என்ற கேள்விகள், அந்தச் சிறு வயதில் என்னை அத்தனை தூரம் தொந்தரவு செய்யவில்லை.

சில ஆண்டுகள் கழித்துச் சுந்தர ஓதுவா மூர்த்திகளிடம் இந்தப் பழைய இசைக் கருவியைப் பற்றிக் கேட்டேன். ''சாரங்கி வட நாட்டுக் கச்சேரிகளில் அல்லவா பக்க வாத்தியமாக வாசிக்கப்பட்டு வருகிறது. இது எப்படி நம்மவர் வீடுகளுக்கும் வந்தது?'' என்று கேட்டேன். அப்போது சுந்தர ஓதுவா மூர்த்திகள் சில சுவையான செய்திகளைச் சொன்னார்கள்.

சாரங்கி என்பது நம்முடைய தமிழகத்துப் பழைய இசைக் கருவி என்றும், பரம்பரை பரம்பரையாகத் தேவாரம் ஓதுகிற குடும்பங்களில் தேவார இசைக்கு இந்தச் சாரங்கி வாத்தியத்தையே முக்கியமான பக்க வாத்தியமாக வழங்கி வந்தார்கள் என்றும், தம்முடைய பாட்டனார் ஒரு பெரிய சாரங்கிப் புலவர் என்றும், தமக்கும் ஓரளவு சாரங்கிப் பயிற்சி உண்டென்றும் சொல்லி, இப்போது 'வயலின்' வந்த பிறகு, இந்தச் சாரங்கி வாத்தியத்தின் இடத்தை வயலின் வாத்தியமே பிடித்துக் கொண்டது என்பதையும் சொன்னார்கள் சுந்தர ஓதுவா மூர்த்திகள். அதோடு தாமுமே சாரங்கியை மேற்கொண்டு பயில்வதற்குப் பதில் வயலினை பயிலத் தொடங்கியதையும் இந்தப் பயிற்சிக்காகவே எட்டயபுரத்தில் சில நாட்கள் தங்கியிருந்த வரலாற்றையும் அவர்கள் எனக்குச் சொன்னார்கள்.

இந்த நிகழ்ச்சி நடந்து பல ஆண்டுகளுக்குப் பின்னர், திருவாளர் தண்டபாணி தேசிகர் அவர்கள் தமது குடும்பத்திலும் சாரங்கியில் தேர்ந்த பல முன்னோர்கள் இருந்தனர் என்று எனக்குச் சொன்னதோடு, தமது தாய் வழிப்பாட்டனார் ஒரு புகழ் பெற்ற சாரங்கி வித்துவானாக விளங்கினார் என்பதையும் கூறினார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய வேறு சில உறவினர்களின் பழைமையான வீடுகளிலும் இந்தச் சாரங்கி வாத்தியம் கவனிப்பாரின்றிக் கிடப்பதை நான் பார்க்க நேரிட்டது. இவர்கள் எல்லோருமே தேவார இசைக்கு வயலின் கருவியையே பக்க வாத்தியமாகக் கையாளத் தொடங்கிவிட்டதால், நம்முடைய பழைமையான சாரங்கி வாத்தியம் இப்போது நமது தமிழகத்தில் பயிற்சியிலேயே இல்லாது போய்விட்டது. வட நாட்டில் மட்டிலுமே இன்னும் அந்த வாத்தியம் பழைய மரபைக் காத்துக் கொண்டு உயிர் வாழ்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய உண்மையாகும்.

சாரங்கி என்ற பெயரை ஆராய்ந்தால் இதற்கு அந்தக் காலத்தில் வழங்கிய தமிழ்ப் பெயர் என்ன என்பது புலனாகும். 'சார்ங்கம்' என்ற சமஸ்கிருத சொல்லுக்கு 'வில்' என்று பொருள். 'சாரங்கி' என்றால் வில்லையுடையது என்று அர்த்தம். வீணை போன்ற தந்தி வாத்தியத்துக்கு, 'வில்' கிடையாது. இந்த வாத்தியத்துக்கு 'வில்' உண்டு. எனவே, வீணையிலிருந்து மாறுபடுகிற இந்த வாத்தியத்தை, சாரங்கி வீணை அல்லது 'சார்ங்க வீணை' என்றும், 'வில்லி யாழ்' அல்லது 'வில் யாழ்' என்றும் வழங்கினார்கள்.

ஆம்; நம்முடைய பழந் தமிழ் நூல்களில் காண்கிற 'வில்லி யாழ்' என்பது இக்காலத்துச் சாரங்கியே யாகும். இதில் சந்தேகமே யில்லை என்பது இந்த வாத்திய அமைப்பைப் பற்றிய இலக்கணத்தில் இருந்து நன்கு புலனாகிறது. அதோடு இந்தச் சாரங்கி வாத்தியம் ஓதுவார்களின் குடும்பத்தில் வழிவழியாக வழங்கிவந்து, நூறு, நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ் நாட்டுக் கோயில்களில் எல்லாம் மிகுந்த செல்வாக்குடன் இன்னொலி பரப்பி வந்திருக்கிறது. வயலின் வந்த பிறகு, அது பல இடங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கு வசதியாக இருப்பதோடு, சாரங்கியின் மரபுகளைக் கையாளுவதற்குரிய ''வில் முறை''யும் அதில் இருப்பதால், புதுமை நாகரிகப் புனலிலே சாரங்கி மிதந்து சென்று விட்டது. சென்ற நூற்றாண்டில் இந்த மாறுதலைக் கண்டு வருந்திய அறிஞர்களும் சிலர் இருந்தார்கள். வயலினிடத்தில்

அவர்களுக்குக் கோபம் இல்லை. என்றாலும், அது படையெடுத்து வந்ததால், சாரங்கி ஓடி விட்டதே என்று இந்த அறிஞர்கள் வருந்தினார்கள். இவர்களுள் ஒருவர் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் அவர்கள். அவருடைய ஊரின் பெயரிலேயே யாழ் ஒலிக்கிறது அல்லவா! அவர் தமிழ்நாட்டுக் கோயில்களில் வில் யாழ் என்ற சாரங்கி வாத்தியம் வழக்கத்திலிருந்து மறைவது கண்டு வருந்தி, அந்த வாத்தியத்தின் பயிற்சிக்கு ஒரு புனர் வாழ்வு கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாராம். பலன் இல்லை. பின்னர் அவர் சிதம்பரத்தில் தமிழும் சைவமும் வளர்வதற்கு என்றே ஒரு பெரிய வித்தியாசாலை அமைக்க முனைந்தபோது, செல்வந்தர்களிடம் பணம் கோரி ஒரு பெரிய வேண்டுகோள் விடுத்தார். இந்த வேண்டுகோளின் அச்சுப் பிரதி ஒன்று என்னிடம் இருக்கிறது. இற்றைக்கு நூற்று ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, *1860*-ஆம் ஆண்டில் ரௌத்திரி வருஷம் வைகாசி மாதம் விடுத்த அந்த வேண்டுகோளில் தமது வித்தியாசாலையின் நோக்கங்களையும், தம்முடைய வாழ்வின் ஆசைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார் ஆறுமுக நாவலர். அதில் ஒரு பகுதி :

> ''சாமர்த்தியர்களாகிய ஓதுவார்களை நியோகித்துச் சில பிள்ளைகளுக்குத் தேவாரமும் திருவாசகமும் ஆகிய தமிழ் வேதத்தைப் பற்றுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும் பழகுவிக்க வேண்டும்.
>
> சாயங்காலத்திலே சிவ தரிசனம் பண்ணுகிறவர்களுக்குச் சிவ பக்தி விளையும் வண்ணம், இந்தஓதுவார்களைக்கொண்டு சிவ சந்நிதானத்திலே தேவாரத்தைப் பாடுவிக்கவும், சாரங்கியில் வாசிப்பிக்கவும் வேண்டும்''

ஆறுமுக நாவலர் அவர்களின் உள்ளத்தில் சாரங்கிக்கு எத்தகைய தெய்வீகமான ஓர் இடம் இருந்தது என்பதற்கு நூறு ஆண்டுகளுக்கு முந்திய இந்த விண்ணப்பம் ஒரு சான்றாகும்.

சாரங்கி ஒரு தெய்விகமான வாத்தியம் என்பதற்குத் தருமபுர ஆதீனத்துச் சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் இன்னொரு சான்று கிடைக்கிறது.

சைவத் திரு மடங்களிலே தேவாரப் பண்ணிசைக்கு அளிக்கப்பட்டு வந்துள்ள முக்கியம் நமது வரலாற்றிலேயே சிறப்புடையதாகும். அத்தகைய தருமபுர ஆதீனத்தில் பதினைந்தாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஆசாரிய சுவாமிகள் காலத்தில், மழையின்றிக் கடும் பஞ்சம் ஒன்று வந்த போது, சாரங்கி வாத்தியத்தில் மேகராகக் குறிஞ்சி என்ற பண்ணை வாசிக்கும்படிச் செய்து, மகாசந்நிதானம் அவர்கள் தமிழகத்திலே மழை பெய்வித்தார்கள் என்ற செய்தி, தருமை ஆதீன சரித்திரத்தில் காணப்படுகிறது. எந்தெந்த ஆதீனத் தலைவரின் காலத்தில் என்னென்ன முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதைத் தொகுத்து,வரிசைப்படுத்தி, அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள் நமது மதிப்பிற்குரிய கயிலைக் குருமணி அவர்கள். அந்த வெளியீட்டில் சாரங்கி வாத்தியத்தின் இந்தத் தெய்விகமான சிறப்புப் பற்றிய செய்தியும் முக்கியம் பெற்றுத் திகழ்கிறது.

மனிதக் குரலின் ஒலிக்கு ஒரு தனியான பண்பு இருக்கிறது. கடவுள் செய்த இசைக் கருவியல்லவா இது! கிட்டத்தட்ட இந்த மனிதக் குரலைப் போலவே ஒலிக்கக் கூடிய நாதப் பண்பு சாரங்கி வாத்தியத்திற்கு உண்டு. ஒலியின் கனம், குழைவு, விரைவு, உள்ளத்தை ஈர்க்கின்ற கவர்ச்சி ஆகிய பல நயங்கள், ஒருங்கே அமைந்த இந்தச் சாரங்கி வாத்தியத்தை நம்முடைய தமிழ் முன்னோர்கள் ஆராய்ந்து தேர்ந்து, வாய்ப்பாட்டுக்குரிய பக்க வாத்தியமாகப் பயின்று வந்ததின் காரணம் இதுவே.

வில்லும் யாழும் இருந்தால் போதுமா ? இன்றைக்கும் நமது தமிழகத்தில் சில வீடுகளில் பழைய சாரங்கி வாத்தியத்தைக் காணலாம்! ஆனால் அந்த வாத்தியங்களில் விளையாடுவதற்குரிய விரல்களை எங்கே தேடுவது?

**

---

பெருங்கடல் மூடிப்பிரளயம் கொண்டு பிரமனும்போய்
இருங்கடல் மூடிஇறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமும்கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின்று எம்மிறைநல்வீணை வாசிக்குமே.

பாதந் தனிப்பார் மேல்வைத்த பாதர்
பாதாளம் ஏழுருவப் பாய்ந்தபாதல்
ஏதம் படாவண்ண நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற ஏகபாதர்
ஓதத் தொலிமடங்கி ஊருண்டேறி
ஒத்து உலகமெல்லாம் ஒடுங்கிய பின்
வேதத்து ஒலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்தனரே.

# "ஆட்கொள்ளும் வித்தகர்"

**முன்னுரை :**

திருவாசகத்தின்கண் வரும் சிறந்த அழகிய இனிய பற்பல தொடர்களில், 'ஆட்கொள்ளும் வித்தகர்' என்பது ஓர் அரும்பெறற் பெரும் பொருட்டொடர். திருவெம்பாவையில் 15ஆம் செய்யுளில்,

''ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்
ளும் வித்தகர்?''

எனவரும் வரியில், இவ்வினிய நல்ல தொடர், செவ்விதிற் பயின்றிருத்தல் காணலாம். ஆட்கொள்ளும் வித்தகர், சிவபெருமான். ஆட்கொள்ளப்பட்ட வித்தகர் மணிவாசகர். ஆட்கொள்பவரைத் தலைவர் அல்லது எஜமானர் என்றும், ஆட்கொள்ளப்படுபவரை அடியவர் அல்லது பணியாளர் என்றும் குறிப்பது வழக்கம்.

இங்கு மணிவாசகர் இறைவனை ''ஆட்கொண்ட வித்தகர்'' என்னுமல், 'ஆட்கொள்ளும் வித்தகர்' எனத் திருவாய் மொழிந்தருளிய அருமைப்பாடு, பெரிதும் போற்றுதற்குரியது. தம் ஒருவரை ஆட்கொண்டது மட்டுமேயன்றி, எல்லா உயிர்களையும், எல்லாக் காலத்தும், எல்லா இடத்தும் ஆட்கொண்டு அருள்புரியும் இயல்பினன் சிவபெருமான் என்பதனை, மணிவாசகர் இவ்வாற்ருற் புலப்படுத்தியருளினர். இதன்கண், உலகில் பிறரை ஆட்கொள்ளும் தலைவர்களுக்கும், தம்மை ஆட்கொண்டருளிய தலைவருக்கும் இடையேயுள்ள, வேறுபாடுகளைக் குறிப்பிற் புலப்பட விளக்கியருள்கின்ருர் மணிவாசகர். நினைத்தொறும் நினைத்தொறும் அரிய பல உண்மைகளை உணர்த்திக் கொண்டு நிற்கும் இத்தொடரின் பொருள் நுட்பங்களை, இங்கு நாம் ஒரு சிறிது சுருக்கமாகச் சிந்தித்து இன்புறுவோமாக!

*(1)* உலகத்தில் ஆட்கொள்ளுபவர் அனைவரும், தாம் ஆட்கொள்ளும் அடிமைகளால் தமக்கு விளையும் பலதிற நலங்களையும் வசதிகளையும் எண்ணியே, அடிமைகளை அமர்த்திக் கொள்வர். இதுதான் உலகியல் தலைவர்களின் இயல்பு. ஆனல் குறைவிலா நிறைவினன் ஆக விளங்கும் இறைவனுகிய அருளியல் தலைவனே, அடியவர்களால் தனக்கு ஏதேனும் வசதியும் நலமும் விளையும் என்று எதிர்பார்க்கின்றிலன். தன்னை அடைந்தவர்களுக்குத் தான் இன்பம் தருதலை விரும்பியே, அவன் அடியவர்களை ஆட்கொள்கின்ருன். ''தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவான்,'' ''சங்கரனுர் தம்மைப்போலத் தம் அடியவர்கட்கும் இன்பம் அளிப்பவர்'' என்பது சம்பந்தர் தேவாரம். ''இன்பமே என்னுடைய அன்பே'' என்பர் மணிவாசகர்.

*(2)* உலகியல் தலைவர்கள் தமக்கு ஆட்செய்ய, அனைவரையும் ஏற்றுக் கொள்வதில்லை. ஒரு சிலரை மட்டுமே மிகவும் ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொண்டு, மற்றவர்களை நீக்கி விடுவர். ஆனல் இறைவனே தன்னை அடைந்தவர்கள் அனைவரையுமே விரும்பி ஆட்கொண்டு அருள்புரிகின்ருன். ''ஆரேனும் தன்னடைந்தார் தம்மையெல்லாம் ஆட்கொள்ள வல்ல நம் ஈசனுர்'' என்பது, திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகம். தன்னை அடையாதவர்களுக்கும் அருள் செய்தலை விரும்பி, அவர்களை எதிர்நோக்கிக் காத்திருக்கின்ருன் இறைவன். ''ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள் நல்கிச் சேண் நின்றவர்க்கு இன்னம் சிந்தை செய்ய வல்லான்'' என்பது சம்பந்தர் தேவாரம்.

*(3)* உலகத்துத் தலைவர்கள் தமக்குப் பணி செய்தற்குரிய ஆட்களைத் தேர்ந்தெடுக்குங்கால், மிக்க தகுதியும் திறமையும் உடையவர்களை மட்டுமே, தேர்ந்தெடுத்து அமைத்துக் கொள்வர். ஆனல் இறைவனுகிய தலைவனே, அங்ஙனம் இன்றி, மிக மிகத் தகுதி குறைந்தவர்களையும், ஒரு தகுதியும் இல்லாதவர்களையும், தானே தன் அருளால் விரும்பி வந்து ஆட்கொள்ளுகின்ருன். ''நாயிற்கடையாம்நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்'', ''யாவருக்கும் கீழாம் அடியேனை யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்'', ''என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்'', ''வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்'', ''பொற்றவிசு நாய்க்கு இடுமாறு அன்றே நின் பொன்னருளே'' என்றெல்லாம் மணிவாசகர் அருளிச் செய்திருத்தலைக் காணலாம்.

''நான் நின் அடியேன்; நீ என்னை
ஆண்டாய் என்ருல், அடியேற்குத்
தானும் சிரித்தே யருளலாம்
தன்மையாம் என் தன்மையே''
—திருச்சதகம், 58.

*(4)* உலகத்திலுள்ள தலைவர்கள், தாம் தமக்கு ஊழியம் செய்தற்கு அமர்த்திக் கொள்ளும் பணியாளர்களுக்கு, அவர்கள் விரும்பும் அளவு ஊதியம் தர உடன்படார். பணியாளர்கள் விரும்பும் ஊதியத்திலும் சிறிது குறைவாகவே கொடுப்பர். குறைந்த ஊதியத்தில் நிறைந்த பல வேலைகளை வாங்கிக் கொள்ள விரும்புவதே உலகத்தில் உள்ள எசமானர்களின் இயல்பு! ஆனல் இறைவனுகிய எசமானனே, தனக்கு ஊழியம் செய்யும் அடியவர்கள் வேண்டுவன எல்லாம் தருவான்; அவர்களின் ஆசை தீரும்படி அவர்கள் கேட்பதனைக் காட்டிலும் கூட, மிக அதிகமாகக் கொடுப்பான்; ''வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்', என்பது அப்பர் தேவாரம்.

‘‘வேண்டத் தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ’’ என்பது மணிமொழியாரின் திருவாசகம். ‘‘ஆசை தீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்’’ என்பது திருஞானசம்பந்தர் திருமொழி.

(5) உலகத்துத் தலைவர்கள், தமக்குரிய ஊழியர்களை அமைத்துக் கொண்டால், அவர்களுக்கு இடையே நிலவும் உறவு—தலைவர் என்னும் உறவு ஒன்றேயாகும். ஆனால் இறைவன் தன் அடியவர்களுக்கு வெறும் தலைவனாக மட்டுமில்லாமல், தந்தையாகவும் தாயாகவும் நண்பனாகவும் குருவாகவும் மற்றும் எல்லா உறவுமாகவும் அமைந்து நலம் புரிகின்றான். ‘‘ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்’’ என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ‘‘தாயும் நீயே தந்தை நீயே’’ என்பர் சம்பந்தர். ‘‘நண்பா என் உயிர் நாதா!’’ “எந்தை எம்தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடை பந்தம் அறுத்து என்னை ஆண்டு கொண்ட பாண்டிப் பிரான்’’ என்பர் மணிவாசகர்!

(6) உலகத்துத் தலைவர்களில் பெரும்பாலோர், தம் ஊழியர்களின்பால் போதிய அன்பு காட்ட மாட்டார்கள். அவர்களிடம் நல்லவர்களாக இருக்கமாட்டார்கள். தம் ஊழியர்களைக் கடுமையாகவும், கொடுமையாகவும் நடத்துதல் பலரிடம் காணப்படும் பொதுவான இயல்பு. ஆனால் இறைவனாகிய தலைவனோ அத்தகையவன் அல்லன். அவன் அடியார்களுக்கு மிகவும் நல்லவன். அடியவர்களிடம் அன்பும் பரிவும் அருளும் காட்டுபவன். ‘‘கண்ணுளார் கருவூருள் ஆனிலை அண்ணலார் அடியார்க்கு நல்லரே’’ என்பது சம்பந்தர் தேவாரம்.

(7) உலகத்துத் தலைவர்களில் பலர், தம் ஊழியர்கள் தம்மை அணுகமுடியாதபடி அரியராக இருப்பர். அத்தகையவர்களை நினைக்கும் போதெல்லாம் ஊழியர்களுக்கு அச்சமே மிகுதியும் ஏற்படுவதுண்டு. ஆனால் இறைவனாகிய தலைவனோ அத்தகையவன் அல்லன். அவன் அடியவர்களுக்கு மிக மிக எளியவன். ‘‘அடியார்க்குஎளியன் சிற்றம்பலவன்’ என்று, தன்னைத் தானே இறைவன் சுட்டிக் கொள்வதாக ஒரு தனிப் பாடலும் உண்டு. சிவபெருமான் ஆகிய தலைவன், அடியவர்களிடம் அச்சத்தைப் போக்கி ஆட்கொண்டு அருளுவான். ‘‘அச்சம் தீர்த்து ஆட்கொண்டான், அமுதம் ஊறி அகம் நெகவே புகுந்து ஆண்டான் அன்பு கூர’’ ‘‘அறம் பாவம் என்றிரண்டு அச்சம் தவிர்த்து என்னை ஆட்கொண்டான்’’, ‘‘அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க’’ என்பர் மணிவாசகர்.

(8) உலகத்துத் தலைவர்கள் பலரிடத்தில் ஊழியம் செய்வது மிக மிகக் கடினமாக இருக்கும். தமது ஊழியர்களைப் பலவகைகளில் அலைக்கழித்து, இடையறாது கடினமான வேலைகளைத் தொடர்ந்து செய்யும்படி, ஏவிக் கொண்டேயிருப்பர் சிலர் (Sadism). ஆனால் இறைவனாகிய தலைவனோ, தன் ஊழியர்களுக்கு எவ்விதகடினமான வேலைகளையும் அளிப்பதில்லை. தனது அடியவர்கள் எவ்வகையான வேலையையும் செய்ய வேண்டாம் என்றே, அவன் பணித்தருள்கின்றான்.

சமயத்துறையில், அருளியல்வாழ்வில், ‘‘சும்மா இருத்தல்’’* என்பது ஒரு சிறந்த பெரும் பேறு. ‘‘இன்று வருமோ? நாளைக்கே வருமோ? மற்று என்று வருமோ? சும்மா இருக்கும் சுகம்’’ என்று ஏங்கி இரங்குகின்றார் இராமலிங்கர். ‘‘சும்மா இரு’’ என்பதே முருகன் அருணகிரிநாதருக்குச்செய்த அருளியல் உபதேசம். அதன் அருமை பெருமைகளைப் பாராட்டிச் ‘‘சும்மா இரு சொல்லற என்றலுமே, அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே’’ என்று, அருணகிரிநாதர், தமது கந்தர் அநுபூதியில் வியந்து கசிந்து உருகுகின்றார். அருணகிரிநாதரின் இத்திருமொழியில் மிகவும் ஆழ்ந்து ஈடுபட்டு, ‘‘அருணகிரிநாதர் அநுபவம் நாயேற்குக் கருணை பொழி போரூரா காட்டு’’ என்கின்றார் சிதம்பர சுவாமிகள். இதனையே மாணிக்கவாசகர் ‘‘என்னுடைய செயல் மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ’’’ என்கின்றார். திருக்களிற்றுப்படியார் ஆசிரியர், ‘‘செய்தற்கு அரிய செயல் பலவும் செய்து சிலர், எய்தற்கு அரியதனை எய்துகின்றார்; ஐயோ! நாம் செய்யாமைசெய்து செயலறுக்கலாய் இருக்கச் செய்யாமை செய்யாதவாறு’’ என்று சிந்தை நொந்து உரைக்கின்றார். உலகத்திலுள்ள தலைவர்கள் வற்புறுத்திப் பற்பல வேலைகளை வாங்குபவர்களாக இருக்க, இறைவனாகிய தலைவனோ தன் அடியார்களைச் ‘‘சும்மா இருங்கள்’’ என்று சொல்லி ஆட்கொள்ளுகின்றான் எனின், அவ்வித்தகனின் வியக்கதக்க பெருமையினை என்னென்பது.

(9) உலகத்தில் தலைவர்கள் தங்களுக்குப் பலதிறப் பணிவிடைகளைச் செய்வதற்கென்றே ஏவலர் பலரை அமர்த்திக் கொள்வது வழக்கம். ஆனால் இறைவனோ தன் தொண்டர்களைச் ‘‘சும்மா இரு’’ எனச் சொல்வதோடன்றி, அவர்களுக்குத் தானே வலிந்து வந்து பலதிறப் பணிகளையும் செய்து மகிழ்கின்றான். கண்ணபிரான் பாண்டவர்களுக்குத் தூது போனான்! பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்து பணியாற்றினான்! சிவபிரான் சுந்தரர் பொருட்டுப் பிச்சை எடுத்துழன்றதும், பரவையார்பால் தூது சென்றதும், பாணபத்திரர்க்காக விறகு சுமந்ததும், வந்தியம்மைக்குக் கூலியாளாய் வந்து மண் சுமந்து பிரம்படி பட்டுப் புண் சுமந்ததும் போன்ற வரலாறுகள், இங்கு எண்ணி இன்புறத்தக்கன.

(10) எசமானர்களின் மூட்டை முடிச்சுக்கள் ஆகிய பாரங்களைத் தூக்கிச் சுமந்து கொண்டு உடன் செல்லுதல், உலகத்து வேலைக்

*“ There is a stage in life when a man does not need even to proclaim his thoughts, much less to show them by outward action. Mere thoughts act. They attain that power. Then it can be said of him that his seeming INACTION constitute his ACTION. I must confess that I am far from that state. All I can say is that my striving is in that direction.”

—MAHATMA GANDHI.

காரர்களுக்குரிய இயல்பு. ஆனால் இறைவனே ''வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுடைய பாரத்தைச் சுமந்து கொண்டு உங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றேன்'' என்று, தன் அடியவர்களின் பாரங்கள் பலவற்றையும்தானே வலிந்து வந்து ஈர்த்து ஏற்றுச் சுமந்து கொள்கின்றான். 'தமக்கு அன்புபட்டவர் பாரமும் பூண்பர், ஆரூர் அரநெறியாரே' என்பர் திருநாவுக்கரசர். சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவராகிய உமாபதிசிவமும், இறைவனுக்கு ''எடுத்துச் சுமப்பான்'' (Porter) என்னும் ஒரு பெயரைப் புதிது படைத்துத் தமது திருவருட்பயன் என்னும் நூலில் வழங்கியிருத்தல் காணலாம். ''செம்மலர் நோன்தாள்'', ''மதனுடை நோன்தாள்'' என்னும் ஆன்றோர் அருந்தொடர்களும், இவ்வுண்மையினை வலியுறுத்தும்.

(11) ஒரு சில எசமானர்கள், தம் கீழ்ப் பணியாற்றும் வேலைக்காரர்கள் செய்யும் செயல்களில், எப்போதும் குற்றம் குறைகளையே கண்டு பிடித்துச் சுட்டிக் காட்டிச் சீறிச் சினந்து வைது பழிப்பர். கடுந்தண்டனைகளும் கொடுப்பர். ஒரு சிலர், பணியாட்கள் நல்லதே செய்தாலும் கூட, குற்றமாகவே பிறழ உணர்ந்து வெகுள்வர். இறைவனோ தன் அடியவர்களின் குற்றங் குறைகளைக் குறிக்கொண்டு நோக்கமாட்டான். கண்டும் காணாததுபோற் பெருந்தன்மையாக இருந்து விடுவான். அடியவர்கள் செய்யும் பிழைகளுக்காக அவர்களுக்குத் தீங்கு எதுவும் செய்யமாட்டான். அன்பர்கள் செய்யும் பிழைகளை மறப்பதிலும், மன்னித்துப் பொறுமை காட்டுவதிலும், இறைவனுக்கு இணையாவார் இலர். ''குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார் இடர்களைவாய் நெடுங்களம் மேயவனே'' என்பது சம்பந்தர்தேவாரம். ''பின்னை என் பிழையைப் பொறுப்பான், பிழைஎலாம் தவிரப் பணிப்பான்'' என்பது சுந்தரர் திருப்பாடல். ''பேயேனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமையன்'' என்பது திருவாசகம். 'ஏது பிழை செய்தாலும் ஏழையேனுக்கு இரங்கித் தீது புரியாத தெய்வம்'' என்றும், ''போரிப் பிரான் எம் பிழை பொறுத்தால் என்ன, யார் இப்படி பொறுப்பார்?'' என்றும் வியந்து வினவித் துதிப்பர் சிதம்பர சுவாமிகள்.

(12) ஊழியர்பாற் குற்றங் கண்டால் கடிந்து தடிவது, எசமானர்களின் இயல்பு. தமது ஊழியர்கள் தவறு செய்யின், உலகத்து எசமானர்களுள், தலையாயினர் பிழையை உட்கொண்டு அமைதலும் இடையாயினர் அவரைத் துறத்தலும், கடையாயினர் அவரைக் கெடுத்தலும் செய்யக் காண்கின்றோம். (கோவையார் 25). இம்மூவகையும் செய்யாது இரங்கிக் காத்தருள்பவன் இறைவன்.

உலகத்துத் தலைவர்களின் மனமும் முகமும் அவ்வப்போது மாறிக் கொண்டேயிருக்கும்; அவர்கள் காட்டும் அன்பு எப்போதும் ஒரே நிலையில் இராது. ''காலையில் ஒன்றாவர்; கடும்பகலில் ஒன்றாவர்; மாலையில் ஒன்றாவர் மனிதரெல்லாம்'' என்று ஒரு தனிப்பாடல் கூறுவதுபோல, அடிக்கடி உலகியல் தலைவர்களின் மனமும் குணமும் மாறிமாறி வேறுபட்டுக் கொண்டே இருக்கும். ஆனால் அருளியல் தலைவனாகிய இறைவனோ அத்தகையவன் அல்லன். அவன் என்றும் மாறாத நிலைபேறான இயல்புகள் உடையவன். தன் அடியவர்களிடம் அவன் எப்போதும் இனியவனாகவே விளங்குவான். இதனை நமது திருநாவுக்கரசர் ''எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே'' என்று தமது கச்சித் திருவேகம்பம் பற்றிய தேவாரப் பாடலிற் குறித்திருத்தல் காணலாம்.

**முடிவுரை :**

இங்ஙனம், இன்னும் எத்தனையோ பல வகைகளில் எண்ணியுணர்ந்து இன்புறுதற்கு ஏற்ற நிலைகளில், 'ஆட்கொள்ளும் வித்தகர்' என்னும் அழகிய இனிய அரிய தொடர், அமைந்திருக்கின்றது. இத்தகைய எத்தனையோ பற்பல அரும்பெருந் தொடர்கள், திருவாசகத்தின்கண் ஏராளமாகப் பயின்றுவரக் காண்கின்றோம். அவற்றினையெல்லாம் ஓதியுணர்ந்தும், நீள நினைந்து ஆழ்ந்தறிந்தும் மகிழ்தல், நம்மனோர் இறையருள் நெறியில் தலைப்பட்டு உய்தி பெறுதற்குப் பெரிதும் துணை புரியும் என்பது திண்ணம்.

—**ஆசிரியர்**

# கவிதை இன்பம்

அரியநல் இயற்கை அழகினை ஆராய்ந்து
அகங்களித் தின்புறு வோர்க்கும்,
மருவும்இவ் வாழ்க்கை மறைபொருள் பலவும்
மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்,
விரிவுறு சமய மெய்யுணர் வொளியில்
விரும்பிமேன் மேற்படர் பவர்க்கும்,
திருவருள் ஒழுக்கம் செறிந்ததூ யவர்க்கும்
சிறந்தநற் கவிதையே இன்பாம்!

—தமிழாக்கம், **ந. ரா. முருகவேள்.**

# "மணிவண்ணன்"

**(நுண்பொருட் சிறப்புரைகள்)**

*[பத்மவிபூஷண் 'மகாவித்வான்' ஸ்ரீமத் அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]*

''மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா வென்றழைத்துப்
பல்லாண்டு பாடியநம் பட்டர்கோன்-சொல்லால்
மணிவண்ண னென்றறியும் மாலிடத்தே தோன்றும்
மணிவண்ணஞ் சொல்லுகேன் வாய்ந்து.''

'மணியை வானவர் கண்ணனை' என்று நம்மாழ்வாரும், 'மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா' என்று பெரியாழ்வாரும், 'மாலே மணிவண்ணா' என்று ஆண்டாளும் இங்ஙனே மற்றும் பலரும் எம்பெருமானை மணிவண்ணனாகக் கூறியுள்ளார்கள். இதற்கு, இந்திர நீலக் கல்லின் நிறம் போன்ற அழகிய நிறம் உடையவன் என்று ஒரு பொருள். (மணி-ரத்தினம்). ரத்தினத்தின் தன்மை போன்ற தன்மையுடையவன் என்பது மற்றொரு பொருள். ரத்தினத்திற்கும் எம்பெருமானுக்கும் ஒப்புமை பலபடிகளாலே சொல்லத் தகுதியுண்டு. எங்ஙனமென்னில் :

(1) ரத்தினமானது தன்னைப் பெற்றவர்களையும் பெற விருப்பமுடையாரையும் இரவும் பகலும் கண்ணுறங்க வொட்டாது. ரத்தினமென்பது மிகச் சீரிய பொருளாதலால் அதனை ஆர்ஜிக்க வேண்டிய காலத்தில் அதுவே சிந்தையாகக் கண்ணுறங்காமையும், ஆர்ஜித்தபின் அதனைக் காப்பதற்காகக் கண்ணுறங்காமையும் உலகில் பிரசித்தம் ; எம்பெருமான் திறத்திலும் இது காணலாம். எம்பெருமானைப் பெற நினைக்கும் முமுட்சுகள் 'கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடியே கண்ணுறங்கார்கள். அப்பெருமானைப் பெற்ற முக்தர்களும் நித்யர்களும் 'ஸதா பச்யந்தி ஸூரய' என்ற சுருதியின்படியும், 'உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே சங்கே' என்கிற பெரியாழ்வார் திருமொழியின்படியும் இமையாத கண்ணினராய்க் கண்துஞ்சாமே காப்பிடுவார்கள்.

(2) ரத்தினமானது எவ்வளவு விலையுயர்ந்ததாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம்படி அடங்கியிருக்கும். எம்பெருமானும்எவ்வளவோ பரத்துவம் பொலிய நிற்பவனாயினும், ''பத்துடையடியவர்க்கு எளியவன்'' என்கிற நம்மாழ்வார் திருவாக்கின்படியே ஆச்ரிதர்களுக்குளெளியனாய்ப் பரம விதேயனாயிருப்பன். 'ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம் பாயசீருடைப் பண்புடைப்பாலகன் மாயன் என்று மகிழ்ந்தனர்' (பெரியாழ்வார் திருமொழி) என்னும்படியான பரத்துவம் விளங்கா நிற்கச் செய்தேயும்' உரலிலே கட்டி அடிக்கலாம்படி அடங்கியிருந்தமை முதலான சௌலப்பிய காரியங்கள் பலவும் நினைக்கத்தக்கன.

(3) ரத்தினமானது கடல் மலை முதலிய இடங்களில் உள்ளது. கடல் ரத்நாகரமென்றே பெயர் பெற்றதாதலால் கடலில் ரத்தினமிருப்பது சித்தம். 'ஊரும்வரியரவ மொண்குறவர் மால்யானை பேரவெறிந்த பெருமணியை'(முதல் திருவந்தாதி) என்பது முதலான பாசுரங்களினால் மலையில் ரத்தினமிருப்பதும் சித்தம். எம்பெருமானும் திருப்பாற்கடலிலும் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலான மலைகளிலும் விளங்குபவன். 'மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய்' என்ற திருவாய்மொழியும் இங்கே நினைக்கத்தக்கது.

(4) ரத்தினமானது தன்னை உடையவனை மார்பு நெறிக்கப் பண்ணும். ரத்தினமுடையவர்கள் மஹாதனிகர்களாதலால் செருக்குற்றிருப்பார்களன்றோ. எம்பெருமானும் தன்னையுடையவர்களை 'எனக்காரும் நிகரில்லையே', 'மாறுளதோ இம் மண்ணின்மிசையே', 'எனக்கென்னினி வேண்டுவதே', 'இனியாவர் நிகரகல்வானத்தே' என்று மார்பு நெறித்துப் பேசப் பண்ணுவன். நாலு நாளில் அழிந்து போகக் கூடிய ரத்தினத்தைப் பெற்றவர்கள் மார்பு நெறிக்கக் கண்டால், என்றும் அழியாத சாசுவத (ராம ) ரத்தினத்தைப் பெற்றவர்கள் மார்பு நெறிக்கச் சொல்ல வேணுமோ!

(5) ரத்தினமானது தன்னைக் கைக்கொண்டவனைப் பலரும் அநுவர்த்திக்கும்படிபண்ணும். மஹா தனிகர்களைப் பலரும் அநுவர்த்தித்துக் கிடப்பர்களன்றோ. எம்பெருமானும் தன்னை உடையார்களை உலகமெல்லாம்அநுவர்த்திக்கும்படி பண்ணுவன். 'மைத்ரேயன்: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச', 'தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சின:' இத்யாதிகள் காண்க. பகவானைக் கைக்கொண்ட மகான்களை உலகமெல்லாம் அநுவர்த்திக்கக் காணாநின்றோமே.

(6) ரத்தினமானது இடையில் ஒரு புருஷனைக் கொண்டே வாங்கப்படும் (தரகர்கள் என்று சிலருண்டே: அவர்கள் மூலமாகவே பெரும்பாலும் ரத்ன வியாபாரம்நடைபெறும்). எம்பெருமானும் புருஷகாரமுகமாகவே பெறப்படுவன். 'வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து' என்றார் நம்மாழ்வார். ஸ்ரீராம ரத்தினத்தைப் பெற வந்த விபீஷணாழ்வான் 'நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம்' என்று புருஷகார புரஸ்காரங் கொண்டமை ஸ்ரீ ராமாயண யுத்தகாண்டத்தில் அறியத்தக்கது.

(7) ரத்தினமானது மோதிரம், தோடு, ஹாரம் முதலான, சிலசில ஆச்ரயங்களில் அதிகமான மதிப்புப்பெறும். எம்பெருமானும் ஆழ்வார்களின் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட திருப்பதிகளிலே அதிகமான மதிப்புப்பெறுவன்.

(8) ரத்தினமானது ஒளியை விட்டிராது ; எப்பொழுதும் ஒளியோடு கூடியே யிருக்கும். எம்பெருமானும் பிராட்டியை விட்டு இரான். 'தேவத்வே தேவதேஹேயம் மனுஷ்யத்வே ச மாநுஷ்', 'அநுஜநுரநுரூபரூப சேஷ்டா . . . . இந்திரா' இத்யாதி பிரமாணங்களின்படியே பிராட்டியோடு கூடியே இருப்பான் எம்பெருமான். 'அநந்யா ராகவேணுஹம் பாஸ்கரேண ப்ரபா யதா' என்கிற சீதாபிராட்டியின் வசனத்தாலும், 'அநந்யா ஹி மயா சீதா பாஸ்கரேண ப்ரபா யதா' என்கிற ஸ்ரீராகவன்வசனத்தாலும் பிராட்டியை ஒளியின் ஸ்தானத்திலே உணரலாம்.

(9) ரத்தினத்திலே ஒளியானது சில சமயங்களிலே உத்பூதமாயிருக்கும். சில சமயங்களிலே அநுத்பூதமாயிருக்கும். அப்படியே பிராட்டி எம்பெருமானிடத்திலே சில சமயங்களில் ஸ்பஷ்டமாகத் தோன்றியிருப்பாள் ; வாமநாவதாராதி ஸமய விசேஷங்களில் மறைந்திருப்பள். 'க்ருஷ்ணுஜிநேந ஸம்வ்ருண்வந் வாமநோ வக்ஷச்ரியம்' என்ருர்கள் மகரிஷிகள். வேதாந்த தேசிகன் தேஹளீசஸ்துதியில் 'பிக்ஷோசிதம் ப்ரகடயந் ப்ரதமாச்ரமத்வம் க்ருஷ்ணுஜிநம் யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா: வ்யக் தாக்ருதேஸ் தவ ஸமீக்ஷ்ய புகாந்தரே தாம் த்வாமேவ கோப நகரீச! ஜநா விதுஸ் த்வாம்'' என்றருளிச் செய்த சுலோகரத்நமும் இங்கே அநுஸந்தேயம்.

(10) ரத்தினமானது ஒளியால் மேன்மை பெறும், ஒளிமிக்க ரத்தினத்திற்கே யன்ருே மதிப்பு அதிகம். எம்பெருமானும் பிராட்டியிஞலேயே பெருமேன்மை பெறுகிருன். 'திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு' என்கிருர் திருமழிசைப்பிரான். ''வேதாந்தாஸ் தத்வ சிந்தாம் முரபிதுரஸி யத்பாத சிஹ்நைஸ் தரந்தி' என்றும், 'அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரஹ்ம ததபூத்' என்றும், அருளிச் செய்கிருர் பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்திலே. 'ச்ரத்தயாதேவோ தேவத்வமச்நுதே' என்கிருன் வேதபுருஷன். இந்த வேத வாக்கியமானது 'ச்ரத்தயா அதேவ : தேவத்வம் அச்நுதே' என்று பதவிபாகமுடையது. தேவ : என்று பதவிபாகம் பண்ணுவது இவ்விடத்து ஸ்வரமர்யாதைக்குச் சிறிதும் சேராது. ச்ரத்தா என்பது பிராட்டியின் திருநாமங்களில் ஒன்று. எம்பெருமான் பிராட்டியின் ஸம்பந்தம் பெறுவதற்கு முன்பு தேவத்வமில்லாதவனுயிருந்து பிராட்டியின் சேர்க்கையினுலேயே தேவத்வம் பெறுகிருனென்கிறது இந்தச் ச்ருதி. 'அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா' என்கிற மாரீச வசனமும், ஸ்ரீராமபிரானுக்குப் பிராட்டியினுலேயே பெரு மேன்மை என்று நன்கு விளக்குகின்றது. இராவணன் மாரீசனிடம் வந்து 'இராமனை அடர்க்க நீ துணை நிற்க வேணும்' என்று வேண்ட, அப்போது மாரீசன் சொன்ன அற்புதமான மொழி இது. இராமன் சீதாபிராட்டியைக் கைப்பிடிப்பதற்கு முன்னம் விச்வாமித்திரனது வேள்வியிலே என்னுல் காணப்பட்டான் ; அப்போதே அவன் அநபிபவநீயனுயிருந்தான்; பின்னை அவன் சீதா பிராட்டியைக் கைப்பிடித்தவனுமாயினன் ; அதனுல் அப்பெருமானுக்கு விளைந்த புகழ் பேசத் தரமோ? என்ருன். 'ஸ்வயா தீப்த்யா ரத்னம் பவதபி மஹார்க்கம்' என்கிற ஸ்ரீ குண ரத்ந கோச ஸ்ரீஸூக்தியும் இங்கே சேர்த்து அநுஸந்தேயம்.

(11) ரத்தினமானது தன்னை இழந்தவனைக் கதறிக் கதறி அழப்பண்ணும். உயர்ந்த ரத்தினத்தை இழந்தவன் கதறிக் கதறியழுவது தவிர வேறென்ன செய்ய முடியும்? எம்பெருமான் படியும் அப்படியே. ஸ்ரீராமரத்நத்தை இழந்த பரதாழ்வான் சபையிற் புரண்டு கதறியழுதமை 'விலலாப ஸபா மத்யே' இத்யாதிகளில் பிரசித்தம். 'ஏரார்ந்த கருநெடுமால் இராமனுய் வனம் புக்கவதனுக்காற்ருத் தாரார்ந்த தடவரைத் தோள் தயரதன்தான்' புலம்பிய வப்புலம்பலும் ஸ்ரீராமாயணுதி ப்ரஸித்தம். 'பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சியழுதேன்' என்கிருர்கள் அறிவிற் சிறந்தவர்கள். 'எழில்கொள் நின்திருக்கண்ணிணை நோக்கத் தன்னையும் இழந்தேன் இழந்தேனே' 'இன்பத்தை இழந்த பாவியேன் என தாவி நில்லாதே' என்று தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல் பிரசித்தம். 'உன்னைக் காண்பான் நானலப்பாய் ஆகாயத்தை நோக்கியழுவன்' என்று கதறுகிருர் நம்மாழ்வார். 'ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே, தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தம் ஆக்ரந்திதும் ந்ருணும்' என்று எம்பெருமானுடைய சிந்தனையை ஒரு நொடிப் பொழுது இழந்தாலும் கதறிக் கதறி அழவேணும் என்கிருர்கள் மகரிஷிகள். ஆகவே இழவில் கதறி அழப்பண்ணுந் தன்மை ஒக்கும்.

(12) ரத்தினமானது அதமன் கையிலே கிடைத்த அளவில் அற்ப விலைக்கு மாறும். மத்யமன் கையில் கிடைத்த அளவில் உள்ளபடியான விலைக்கு மாறும். உத்தமன் கையில் கிடைத்த அளவில் விலைக்கு ஆட்படாமல் ஸ்வயம்போக்யமாகும். (இதன் விவரணம்). மீன் பிடிக்கிற செம்படவன் கையிலும் விலையுயர்ந்த ரத்தினம் கிடைப்பதுண்டு. அவன் அதன் மதிப்பை அறியாதவன் ஆகையாலே அற்ப விலைக்கு அதை விற்று விடுவான். ''மாமதியம் திளைக்குங்கொடி மாளிகைசூழ் தெருவில் செழு முத்து வெண்ணெற்கெனச் சென்று முன்றில் வளைக்கை நுளைப்பாவையர்மாறும் நாங்கூர்'' என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் இது அறிய எளிது. அதே ரத்தினம் ஒரு வியாபாரியின் கையில் கிடைத்தால் அவன் அதன் மதிப்பை அறிந்தவனுகையாலே உள்ளபடியான விலைக்கே விற்பன். அதே ரத்தினம் ஒரு மஹாராஜன் கையில் கிடைத்தால் அவனுக்கு அதை விற்று ஆகவேண்டியது ஒன்றுமில்லாமையாலே விலை கோராமல் அதை ஹாரத்திலே யழுத்தி ஸ்வயம்போக்யமாக அணிந்து கொள்ளுவன். இம் மூன்று படிகளையும் உலகில் எளிதாகக் காண்கிருேம். எம்பெருமான்படியும்

இப்படியே. க்ஷுத்ரர்கள் எம்பெருமான் பக்கலிலே ஐச்வர்யம் ஸந்தானம் என்றிங்ஙனே அற்ப பலன்களைப் பெற்றுப் போவார்கள். சிலர் மோட்சத்தை வேண்டிப் பெற்றுப் போவார்கள். அவன் பக்கலில் நாம் வேண்டுவதொன்றுண்டோ என்று அற்ப பலன்களையும் விரும்பாமல் உயர்ந்த பலனான மோட்சத்தையும் விரும்பாமல், 'இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றும், 'எம்மாவீட்டுத் திறமும் செப்பம்' என்றும், 'வைகுண்ட வாஸேபி ந மேபிலாஷ:' என்றும் பரமபதத்தையும் வெறுத்துத் தள்ளி, 'எனக்குத் தேனேபாலே கன்னலேயமுதே' என்று ஸ்வயம் போக்யமாக அநுபவித்து அத்தலைக்கு மங்களாசாஸனம் செய்வது தவிர வேறொரு பேறில்லை என்று அதுவே போது போக்காயிருப்பர்கள் உத்தமாதிகாரிகள். 'த்வ்யயேகஸ்மிந் நபி விஜஹதோ முக்தவத்ஸாதநத்வம்' என்று தேசிகன் பணித்த கணக்கிலே எம்பெருமானிடத்திலுங்கூட உபாயத்வ புத்தியைப் பண்ணாதே உபேயத்வ புத்தியையே பண்ணியிருக்கும் ஸத்ஸம்ப்ரதாய ரஸிகர்கள் மஹாராஜஸ்தானத்திலே மதிக்கப்படுவர்கள். அநுபாயங்களானவற்றிலுங்கூட உபாயத்வ புத்தியைப் பண்ணி நிற்குமவர்கள் வியாபாரிகளின் ஸ்தானத்திலே எண்ணப்படுவர்கள்.. க்ஷுத்ரபலார்த்திகள் செம்படவன்போல்வாரான நீசர்களின் ஸ்தானத்திலே நினைக்கப்படுவர்கள். மேலே விவரித்த மூன்றுபடிகளுக்கும் ரத்தினம் இணங்கியிருப்பதுபோல எம்பெருமானும் இணங்கியிருத்தல் நன்கு உணரத்தக்கது.

(13) ரத்தினமானது சேற்றிலே கிடந்தால் மதிப்பறியாதவர்களாலே நிஹீநமாகக் கருதப்பட்டு, மதிப்பறியுமவர்களாலே உள்ளபடியே கருதப்படும். எம்பெருமான்படியும் இப்படியே. 'மாயவன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடியே சேற்றுநிலமாகிய இவ்விருள்தருமாஞாலத்திலே எம்பெருமான் வந்து சேர்ந்தால் மதிப்பறியாத மாபாவிகள் 'அவஜாநந்தி மாம் மூடா: மாநுஸம் தநுமா ச்ரிதம்' என்று கீதையில் அவன்தானே அருளிச் செய்தபடியே குறைய நினைப்பர்கள். அந்த கீதையிலேயே 'தத்வதர்சிந: என்று போற்றப்பட்ட மாஞானிகள் ''எத்திறமுரலினோடிணைந்திருந் தேங்கிய வெளிவெ!'' என்றும், 'பிறந்தவாறும் வளர்ந்தவாறும்' என்றும் மோஹித்துக்கிடந்து பேசி மதிப்பறிவில் குறையாதேயிருப்பர்கள்.

(14) க்ருத்ரிமமான கல்லும் ரத்னமென்று பேர்சுமந்து போலியாக நின்றாலும், வாசியறியமாட்டாதவர்களே பிரமிக்கும்படியாய் விலட்சணர்கள் அதில் கால்தாழாதேயிருப்பர்கள். அதுபோலவே, தேவதாந்தரங்களும் பகவானென்று பேர்சுமந்து போலியாக நின்றாலும் ராஜஸ தாமஸர்கள் அவற்றிலே பிரமித்திருப்பர்களேயன்றி, சுத்த ஸாத்விகர்களான விலக்ஷணர்கள் அவற்றை அடுப்பிடு கல்லோபாதியாக நினைத்துக் கண்ணெடுத்தும் பாரார்கள். ''நீயாய் நீ நின்றவாறு'' என்றது காண்க. இங்ஙனமே மற்றும் பலபல உவமைப் பொருத்தங்கள் கண்டுகொள்க.

**

# முதலாழ்வார் பாடல்கள்

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன்சொன் மாலை,
இடராழி நீங்குகவே என்று.

—பொய்கையாழ்வார்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு,
ஞானத் தமிழ்புரிந்த நான்.

—பூதத்தாழ்வார்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

—பேயாழ்வார்.

# சீவக சிந்தாமணி

திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள், M. A., M. Litt.

**முன்னுரை :**

இந்திய மொழிகளுள் தமிழ் தொன்மையான இலக்கிய வளமுடையது. பிற இந்திய மொழிகளுக்கில்லாத சிறப்பியல்புகள் பல தமிழிற்கு உண்டு. இந்தியாவில் தோன்றிய சமயங்கள், வந்து குடி புகுந்த சமயங்கள் ஆகியவற்றின் சார்பாகப் படைக்கப் பெற்ற இலக்கியங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் உள்ளமை அதற்குரிய சிறப்புக்களில் ஒன்றாகும். பல்வேறு சமயங்கள், பல்வேறு காலங்களில் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கின. அக்காலங்களில் புதிய சமயத்தின் சார்பாகப் பல புதிய தமிழ் இலக்கண இலக்கியங்களை அறிஞர்கள் தமிழில் படைத்துள்ளனர்.

தமிழகத்திற்குச் சமண சமயம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே வந்தது எனலாம். அக்காலம் முதற்கொண்டு கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை சமண சமயப் பெரியோர்கள், தமிழ் அன்னைக்குப் பல்வேறு துறைகளில் பணி புரிந்து வந்துள்ளனர். தென்னாட்டில் சமண சமயம் தழைத்தோங்கிய காலத்தில் எழுந்த நூல்கள் எண்ணற்றவை. அவற்றில் ஒன்றான சிந்தைக்கு இனிய சீவக சிந்தாமணி, பெருங்காப்பியங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் சிறப்புடையதாகும். சமண சமயத்தைச் சேர்ந்த சீவகன் என்ற ஓர் அரசனின் வரலாற்றை எடுத்துரைப்பதன் மூலம், சமண சமயத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அழகு உணர்ச்சி தோன்ற, இனிமை கனியும்படி செய்யுட்களாகப் பாடியவர் திருத்தக்க தேவர் என்ற சமணத் துறவியாவார்.

**காப்பிய மரபு:**

தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரத்திற்கு அடுத்த நிலையில் சிறப்புற்று இலங்குவது செந்தமிழ்க் காப்பியமாகிய சிந்தாமணியாகும். காதலும் கற்பனையும் கலந்துறவாடுமாறு இன்பச் சுவை சொட்டச் சொட்டக் காப்பியம் இயற்றிய பெருமையும் சிறப்பும் தேவருக்கே உரியதாகும். 'காப்பியக் கலித்துறை' எனப்படும் விருத்த யாப்பில், ஓசை இனிமை என்ற உயிரோட்டத்தோடு கூடிய சொல்லழகும், சொல்லினிமையும் வாய்ந்த செய்யுட்களைப் படைத்ததன் மூலம் தமிழ் இலக்கிய வானில் 'பொங்கி வரும் பெரு நிலவாக'த் தேவர் பொன்றாப் புகழ் பெற்றுவிட்டார்.

கவிகள் இயற்றுவன காப்பியம் எனப் பொதுவாகக் கூறப்படுவது மரபு. ஆனால், கவிஞர்கள் இயற்றும் எல்லாப் பாடல்களும் நூல்களும் காப்பியமாகப் போற்றப்படுவதில்லை. காப்பியத்தைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர், 'தொடர் நிலைச் செய்யுள்' என்பர். சிந்தாமணியில் வரும்,

''கருதுவ தங்கொன் றுண்டோ
காப்பியக் கவிகள் (1585)

என்ற அடிகளுக்கு உரை விளக்கம் தந்த நச்சினார்க்கினியர், ''நால்வகை உறுதிப் பொருள்களையும் கூறுவதாய்க் கதை பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுள்'' என்று குறிப்பிட்டுள்ளமை இங்கு கருதத் தக்கதாகும்.

இக்காப்பியம் அமைப்பு முறையில் எளிமையானது. கதையினைப் படிப்போர், எளிதில் அதன் குறிக்கோளை உணரும் வகையில் நெகிழ்ச்சியுடைய இனிய சொற்களினால் அரிய கருத்துக்கள் அழகுறச் சிந்தாமணியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆயினும், அதனுடைய கதையமைப்பு—கட்டுக்கோப்பு நெகிழ்ச்சி உடையதாகக் காணப்படுகிறது.

**காப்பியக் கட்டுக்கோப்பு:**

காப்பியம் என்பது கலையழகு வாய்ந்தது. அக்கலையழகும் சுவையுணர்வும் பெருக வேண்டும் என்றால், காப்பியக் கதை நிகழ்ச்சிகளைக் காலமுறைப்படி (வரலாறு எழுதுவதைப் போன்று) ஒன்றன் பின் ஒன்றாக அமைத்துக் கூறக்கூடாது. காப்பியத் தலைவனுடைய வாழ்க்கையின் குறிக்கோளாய் அமைந்த பெருஞ்செயலை எடுத்துக் கொண்டு, அதன் தோற்றம், வளர்ச்சி, உச்ச நிலை, முடிவு நிலை என்பனவற்றை வரையறுத்து அம்முறைப்படி கதையைக் கவினுற அமைத்தால், 'கதையொருமை' என்ற உணர்ச்சி, கற்பவர் உள்ளத்தில் களிப்பினையூட்டும். இக் கதையொருமை என்னும் காப்பியத் திறன், சிந்தாமணியில் சிறிதளவும் இடம் பெறவில்லை என்றே நாம் கூறலாம். தன்னிகரற்ற தலைவன் ஒருவனுடைய வாழ்க்கை வரலாற்றை முதலில் இருந்து முடிவு வரையில் கூறுவதோடு, அவன் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றைத் திரட்டிப் பட்டியல் அமைத்ததைப் போன்று சிந்தாமணி இயற்றப்பட்டுள்ளதால், அதனுடைய கலையழகு குன்றிவிட்டது.

காப்பியத் தலைவனாகிய சீவகன் வாழ்க்கையில் நிகழ்ந்த பத்திற்கு மேற்பட்ட சுவை மிக்க நிகழ்ச்சிகளைச் சிந்தாமணி சித்தரிக்கிறது. அந்நிகழ்ச்சிகள் பல வண்ண மலர்களால் தொடுக்கப்பட்ட கவர்ச்சி மிக்க மாலையாகத் தோன்றவில்லை. உதிரிப் பூக்களாகவே சிதறிக் காணப்படுகின்றன. ஒரு நிகழ்ச்சிக்கும் மற்றொரு நிகழ்ச்சிக்கும் நெருக்கமான பிணைப்பு இல்லை. எடுத்துக் காட்டாக, காந்தருவதத்தையார் இலம்பகத்தையும், குணமாலையார் இலம்பகத்தையும் குறிப்பிடலாம். இவ்விரண்டிற்கும் இடையே நெருக்கமான பிணைப்பு இருப்பதாகத் தோன்றவில்லை. சீவகன் என்ற காப்பியத் தலைவனுடைய வாழ்க்கையில் அடுத்து நிகழும் நிகழ்ச்சி என்பதைத் தவிர, முன்னதன் வளர்ச்சியாக அடுத்து வரும் நிகழ்ச்சி அமையாமல் போனது வருந்தத் தக்கதாகும்.

''காப்பியம் என்பது பல உறுப்புக்களையுடைய ஒரு விலங்கு. அதனுடைய பல்வேறு உறுப்புக்களும் தக்க முறையில் இணைந்தும், இழைந்தும், படிப்போருடைய உள்ளத்தில் ஒரு விதப் புத்துணர்ச்சியை ஊட்டுவதோடு, சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைய வேண்டும்'' என்பர் அரிஸ்டாட்டில்.

இதனால் காப்பியம் என்பது தனிப்பட்ட நிகழ்ச்சிகளின் விரிவுரையாகவோ குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் பண்பு நலனைப் புனைந்துரைப்பதாகவோ அமையக்கூடாது என்பது புலனாகிறது. இதனைத் தொல்காப்பியர் 'வனப்பு' என்பர்,

''வனப்பியல் தானே வகுக்குங்குங் காலைச்
சின்மென் மொழியால் தாய பனுவலோ(டு)
அம்மை தானே அடிநிமிர் பின்றே'' (செய்யு. 235)

''வனப்பு என்பது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகாதலின்... பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர் நிலையதே வனப்பு என்னும் பெயர்ப் பகுதியான் ஏற்பதென்பது'' என்று பேராசிரியர் வரைந்துள்ள உரை விளக்கம் இங்குக் கருதத் தக்கதாகும். எனவே, வனப்பு என்னும் சொல்லிற்குத் 'திரண்ட அழகு'

என்று தொல்காப்பியனார் பொருள் கொண்டுள்ளமை தெரிய வருகிறது. இந்தத் திரண்ட அழகினையே, அரிஸ்டாட்டில் காப்பியத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் பண்பு என்று கூறுகிறார். நம்முடைய சிந்தாமணியில் இப்பண்பு சிறிது அளவுகூட இடம் பெறவில்லை.

தனித் தனிச் செய்யுட்களில் காணப்படும் கற்பனை வளம், கருத்தாழம், பொருள் நயம், சொன்னயம், இழுமெனும் ஓசையின்பம் என்பனவற்றால் சிந்தாமணிக்கு ஒரு வகையான சிறப்பு உண்டாகியிருக்கிறது. ஆனால், அப்பண்புகள் ஒன்றாக இணைந்து, மாண்புமிக்க முழு வடிவம் பெற்ற தொரு காவியத்தை உருவாக்கவில்லை. ஒரு பெரிய மாளிகையின் அமைப்பும் தோற்றமும் அழகுற்று விளங்க வேண்டுமானால் அதைக் கட்டுவதற்கு நல்ல கற்கள், சுதை போன்றவை வேண்டும். ஒரு வரையறைக்குட்பட்டு, கற்களைச் சீராகவும் முறையாகவும் அடுக்கி, அவற்றிடையே சாந்தினைப் பெய்து, புறத்தே சுதையினைப் பூசினால் காண்பவர் கருத்தைக் கவரும் மாளிகையாக அது தோன்றும். அவ்வாறு செய்யாமல், ஒரு பக்கம் செங்கற்களையும், மற்றொரு பக்கம் சுண்ணாம்பையும், பிறிதொரு பக்கம் வேறு பிற பொருள்களையும் குவியல் குவியலாகக் கொட்டி வைத்தால், அக்காட்சி எவ்வாறு இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? அதைப் போன்று சிந்தாமணி, கொட்டப்பட்ட செங்கற்களாகக் காட்சி தருகிறதேயொழிய, கட்டப்பட்ட மாளிகையாகத் தோன்றவில்லை என்று கூறலாம். இதனை வேறு வகையாக சி.எஸ். லியூயிஸ் என்னும் திறனாய்வாளர் குறிப்பிடுகிறார் : 'தனித் தனிச் செய்யுட்களின் அழகைக் கண்டு களித்தல், கட்டி முடிக்கப்பட்ட மாளிகையிலே ஒரு தனிக் கல்லின் அழகிய அமைப்பினைக் கண்டு மகிழ்வதோடு ஒக்கும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளமை இங்குச் சிந்திக்கத் தக்கதாகும்.

சிந்தாமணியின் செய்யுட்களைப் படிப்போமானால் இவ்வுணர்ச்சியே மேலெழுகிறது. தனிப்பட்ட செய்யுளின் அழகும் இனிமையும் இந்த உணர்ச்சியைத்தான் மிகுவிக்கின்றன. இதனால் ஆசிரியரின் கவித் திறனில் மிக முக்கியமானதோர் குறைபாடு நமக்குப் புலனாகின்றது. கதை முழுவதையும் மனக்கண் முன் நிறுத்தி, அதன் பல்வேறு பகுதிகளையும் உறுப்புக்களையும் முறைப்பட உணர்ந்து, அவையனைத்தையும் ஒன்று சேர்த்து, அழகுறக் கற்பித்து அமைக்கும் சிறந்த படைப்புத் திறன் தேவரிடம் அமையவில்லை. மாண்புமிகு கட்டமைப்பினையுடைய காப்பியத்தைப் படைக்கத் தக்க அறிவாற்றல் நிறைந்த பெரும் சிற்பியாகத் தேவர் விளங்காமற் போனது தமிழருடைய தவக் குறையேயாகும்.

## பாத்திரப் படைப்பு:

கவின்மிகு காப்பியங்களுக்குப் பாத்திரப் படைப்பு என்பது உயிர் நாடியாகும். இளங்கோ வடிகள், கம்பர் முதலியோர் படைத்துள்ள பாத்திரங்கள் உயிர்த் துடிப்பும் கலையழகும் வாய்ந்தவை. இளங்கோவின் 'கண்ணகி', என்றென்றும் நம்முடைய இதயக் கோயிலில் வீறுடன் விளங்கக்கூடிய பாத்திரமாகும். கம்பரின் இராமன், இராவணன், கும்பகருணன் போன்றோர் அழகு மிக்க அரிய பாத்திரங்கள் என்பதில் யாரும் ஐயுறவு கொள்ளுவதற்கு இடமேயில்லை. இப்பாத்திரங்களின் குறையும் நிறையும் வாய்ந்த பண்பு நலன்கள் கற்பாருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிடுகின்றன. ஆனால், சிந்தாமணியில் வரும் பத்திற்கு மேற்பட்ட பாத்திரங்களுள், ஒன்றுகூட உளவியல் நெறிகளைப் பின்பற்றிப் படிப்படியாக வளர்ச்சியுறும் பண்பு நலனைப் படம் பிடித்துக் காட்டுவதாகஅமையவில்லை. சீவகன் முதற்கொண்டு, அவனுடைய தாய் விசயை ஈறாக உள்ள பாத்திரங்கள் எல்லாம் ஆழ்ந்ததும், அகன்றதுமான மனித இயல்புகளைப் பிரதிபலிக்கும் பாத்திரங்களாகத் தோன்றவில்லை. உள்ளத்தைத் தொடும் உண்மையான உயிர்த் துடிப்பினை இப்பாத்திரங்களில் சிறிதும் காண முடியவில்லை. பொதுவாக, நோக்குமிடத்து, இக்காப்பியம், 'நெஞ்சை அள்ளும்' சிந்தாமணியாக அமையவில்லை.

இத்தகைய குறைகள் சில சிந்தாமணியில் காணப்படுகின்றன என்பது மறக்க முடியாத உண்மை. எனினும், 'சிந்தாமணி' தமிழ்க் காப்பிய உலகில் சிறப்புற்று விளங்குவதற்குரிய காரணம் என்ன?' என்ற ஐயம் எழலாம்.

## சிறப்பியல்புகள்:

திருத்தக்க தேவர் தம்முடைய காப்பியத்தைக் கற்பவருக்குச் சலிப்புத் தோன்றாமல் இருப்பதற்குச் சில இலக்கியத் திறன்களைக் கையாண்டுள்ளார். அவற்றுள் முதன்மையானது யாப்பு நடையாகும். உணர்ச்சிச் சூழல்களுக்கு ஏற்பவும், இடம், பருவம் முதலியவற்றிற்குகந்த முறையிலும் கருத்துக்களை எடுத்துரைக்கும் முறைக்குத் தக்கபடியும் செய்யுட்கள் வேறுபட்ட யாப்பு அமைதியை உடையனவாக அழகுற்று விளங்குகின்றன. நூல் முழுவதிலும் இனிய தமிழ் நடையில், தேவர் பல்வேறு வகையான செய்யுட்களை இயற்றி யமைத்துள்ளமை பாராட்டத் தக்கதாகும்.

இப்பாடலில் இழுமெனும் இன்னோசையும் கற்பனை வளமும் பெருக்கெடுத்து ஓடுகின்றன. அழகிய அருவியில் நீராடி வரும் அநாகரிக நங்கையரை இச்செய்யுள் நமது மனக்கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறது.

''கூந்தலை ஒருகை யேந்திக்
குங்குமத் தாரை பாயப்
பூந்துகில் ஒருகை ஏந்திப்
புகுமிடங் காண்டல் செல்வார்
வேந்தனைச் சரணென் றெய்த
விம்முறு துயரம் நோக்கிக்
காய்ந்துபொற் சிவிறி யேந்திக்
கார்மழை பொழிவ தொத்தான்''—2660

பந்தாடும் பாவையினைப் படம் பிடித்துக் காட்ட முனையும் தேவர், பந்தாடுகின்ற பொழுது எழும் இனிய ஒலியினை—ஓசையை,

''குழல்மலிந்த கோதைமாலை
பொங்கவெங் கதிர்முலை
நிழல்மலிந்த நேர்வடம்
நிழற்படப் புடைத்தர
எழில்மணிக் குழைவில்வீச
இன்பொனோலை மின்செய
அழல்மணிக் கலாபமஞ்
சிலம்பொடார்ப்ப ஆடுமே'' —1752

என்ற செய்யுளில் அழகுற அமைத்துள்ளதை நாம் பாடியுணர்ந்து மகிழலாம்.

அணைகடந்த வெள்ளம் போல் பெருக்கெடுத்தோடும் இன்பச் சுவை, இக்காப்பியம் சிறப்புற்று விளங்குவதற்கு மற்றொரு காரணமாகும். காம நூலாரின் விதி முறைகளைப் பின்பற்றிக் கூடலைப் பற்றிய தொழில் நுட்பக் கருத்துக்களும், மகளிரின் உடலழகினையும் உறுப்பு நலன்களையும் உச்சி முதல் உள்ளங்கால் வரை அணு அணுவாகப் புனைந்துரைக்கும் கற்பனைத் திறனும் கற்பவருடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுகின்றன.

பெருங்காப்பிய நெறியின் பண்புகளாகிய தன்னிரகற்ற தலைவன், நாற்பொருள் பயத்தல், மலை, கடல், நாடு, வளநகர் வருணனை, இருசுடர்த் தோற்றம், மறைவு, நன்மணம் புணர்தல், புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தல், மந்திரம், தூது போன்ற பல கூறுகள் சிந்தாமணியில் இடம் பெற்று உள்ளமையால், பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் இதனைப் போற்றிப் பாராட்டினர் எனலாம்.

# கடலூர்க் கருத்தரங்கச் சிறப்புரை

**திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S.,**

ஆணையர், அறநிலையத்துறை, சென்னை-34.

**முன்னுரை:**

ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணைக்கு இணங்க ஏற்பாடு செய்துள்ள இக்கருத்தரங்கத்தில் ( Seminar ), கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தமை குறித்து, மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தக் கருத்தரங்கு பலருக்கு ஒரு பயிற்சி முகாமாகவே அமையும் என நான் நம்புகிறேன்.

புராதனமான நம்முடைய சனாதன மதம் என்னும் இந்து மதத்தின் வளர்ச்சிக்காக, நமது ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகள் அவர்கள் ஆற்றி வரும் அரும் பெரும் பணிகள் பற்பல. அவைகளுள் ஒன்றாக, இங்கே கடலூரில் சிவாசாரியர்கள்—பட்டாசாரியர்கள்—கிராம தேவதைப் பூசாரிகள்—ஓதுவார்கள் ஆகிய பலருக்கும் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ள இக்கருத்தரங்கமும் ஒன்றாகும். இந்தச் சிறந்த கருத்தரங்கம் அல்லது பயிற்சி வகுப்பினை, மிக்க பெருமுயற்சி எடுத்து, நல்லமுறையில் நடப்பதற்கு உதவிய அனைவருக்கும், நம் எல்லோருடைய நன்றியும் பாராட்டும் உரியனவாகும்.

சான்றாண்மை என்னும் பெரு மாளிகையை ஊன்றித் தாங்கிக்கொண்டிருக்கும் சிறந்த தூண்களாக, அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்னும் ஐந்து குணங்களைத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

''அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்''

என்னும் திருக்குறளினால் இவ்வுண்மையை உணரலாம். அதுபோல நமது சமயம் இன்றளவும் நல்ல முறையில் சிறப்புற உயிர்ப்புடன் இருந்து விளங்கி வருவதற்கு, நம்முடைய சிவாசாரியர்களும், பட்டாசாரியர்களும், கிராம தேவதைப் பூசாரிகளும், ஓதுவார்களும், சிறந்த பெரும் தூண்களாக அமைந்து தொண்டாற்றி வருதலே காரணமாகும்.

**சிவாசாரியர்கள்:**

சிவாசாரியர்கள், ஆதிசைவர்கள் எனச் சிறப்பித்து வழங்கப்படுவர். அப்பெயரே அவர்களின் சிறப்பை உணர்த்தப் போதிய சான்றாகும். சைவசமய ஆசிரியர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், சிவாசாரியர் ஆகிய ஆதிசைவ மரபைச் சேர்ந்தவர்.

''அருமறை நாவல் ஆதி
சைவன் ஆரூரன் செய்கை,
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கு யானும் என்பால்,
வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கிவை என் எழுத்து''

எனவரும் பெரியபுராணப்பாடல், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆதிசைவ மரபில் தோன்றிய உண்மையைப் புலப்படுத்தும். இவ்வாறே சிவஞானசித்தியார் என்னும் சிறந்த நூலை இயற்றியவரும், திருவெண்ணெய்நல்லூருக்கு அருகிலுள்ள திருத்துறையூரில் வாழ்ந்திருந்தவரும், ''சகலாகம பண்டிதர்'' என்னும் சிறப்பைப் பெற்றவரும் ஆகிய அருள்நந்தி சிவாசாரியரும், சிவாசாரிய மரபைச் சேர்ந்தவரே யாவர். கஞ்சனூரில் அவதரித்துச் சுருதி சூக்தி மாலை முதலிய நூல்களை அருளிச் செய்த அரதத்தரும், சிவாசாரிய மரபினரே யாவர். சிவாசாரியர்கள் திருக்கோயில்களிலுள்ள சிவ லிங்கத் திருமேனியை முப்பொழுதும் தீண்டி வழிபடும் முழு உரிமையும் சிறப்பும் பெற்றவர்கள் ஆவர். அதனாலேயே திருத்தொண்டத் தொகையில் ''முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள், சிவாசாரியரின் பெருமையைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

**பட்டாசாரியர்கள்:**

இவ்வாறே பட்டாசாரியர்களின் அருமை பெருமைகளும் அளப்பரியனவாகும். வேதாகம சமய தத்துவ சாத்திரங்களில் எல்லாம், மிகச் சிறந்த புலமையும் தேர்ச்சியும் பெற்றவர்களுக்கு உரிய சிறப்புப் பெயரே, பட்டர்—பட்டாசாரியர்—பட்டாரகர் என்பனவாகும். ''ஆல நிழல் பட்டனுக்கே, பல்லாண்டு கூறுதுமே'' என்றும், ''பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான்'' என்றும் வரும் பாடல்கள், இவ்வுண்மைக்குச் சான்று பகரும். குமாரில பட்டர்,

---

ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாதரவில், கடலூரில் ''சிவாசாரியார்-பட்டாசாரியார்-கிராமதேவதைக்கோயிற் பூசாரியர்-ஓதுவார் பயிற்சி வகுப்புக் கருத்தரங்கத்தில்'' நமது அறநிலைய ஆணையர் **திரு. எம். கே. பாலசுப்பிரமணியம்**, I.A.S. அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை, இங்கு வெளியிடப்பெறுகின்றது.

**—ஆசிரியர்.**

பாரசர பட்டர், வேதவியாசபட்டர் முதலிய பெயர்களும், இவ்வுண்மையை விளக்கும்.

தொன்றுதொட்டு நம் தமிழகத்தில் நிலவி வரும் சிவாலயங்களில் சிவாசாரியர்களும், விஷ்ணு ஆலயங்களில் பட்டாசாரியர்களும் சிறந்த முறையில் பணியாற்றி, இக்கோயில் களின் சிறப்பினைப் பாதுகாத்து வருகின்றனர்.

**கிராமதேவதைப் பூசாரிகள்:**

நமது நாட்டில் ஏராளமான கிராமங்கள் உள்ளன. அக் கிராமங்களில் கோயில் கொண்டு உள்ள கிராமதேவதைகளைக் கிராம மக்கள் பெரிதும் பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வருகின்றனர். நமது சமயம் நன்ருக வளர்ந்து பரவ வேண்டுமானுல், கிராம மக்களின் பக்தியுணர்வு, மேலும் மேலும் வளர்ந்து பெருகும் படி செய்வது நமது கடமையாகும். நகரங்களிலுள்ள நம்மைப் போன்றவர்களைக் காட்டிலும், கிராம மக்களுக்குத்தான் மிகுந்த பக்தியுணர்வும், கடவுள் நம்பிக்கையும், பிரார்த்தனைச் செயல்களும், மிகுதியாகவும் அழுத்தமாகவும் இருந்து வருகின்றன. கிராம மக்களிடையில் நல்ல பக்தியும், கடவுள் நம்பிக்கையும், மேன் மேலும் நன்கு வளர்ந்து பெருகுமாயின், நம் இந்துசமயம் நல்ல வளர்ச்சி பெற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் கிராம தேவதைப் பூசாரிகள் அனைவரும், எளிய இனிய முறைகளில் செய்துவரும் தொண்டுகள் மிகவும் போற்றிப் பாராட்டுதற்குரியனவாகும்.

**ஓதுவார்கள்:**

நம்முடைய கோயில்களும் அறநிலையங்களும் தோன்றுவதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும், சிறந்த மூலகாரணமாக அமைந்தவை, சைவத் திருமுறைகளும், வைணவத் திவ்வியப் பிரபந்தங்களும் போன்ற பக்தி இலக்கியங்களே யாகும். அவைகளின் திருவருட் பொலிவும், தெய்விக நலங்களும், நம்மால் அளவிட்டுக் கூறுதற்கரியவை. எத்தனையோ பல நூற்றுண்டுகளாக, தொன்றுதொட்டு எத்தனையோ கோடிக் கணக்கான மக்களின் உள்ளங்களைப் பக்திப் பரவசம் அடையும்படி செய்து மகிழ்வித்துத் திருமுறைகளும், திவ்வியப் பிரபந்தங்களும், நம் மனித சமுதாயத்திற்கு விளைவித்துள்ள நன்மைகளுக்கு அளவேயில்லை. இத்தகைய பக்தி இலக்கியப் பாடல்களை இன்னிசையுடன் பாடி, பொது மக்களிடையில் இறையுணர்வை வளர்த்து வரும் ஓதுவார் பெருமக்களின் தொண்டும், மிக மிகப் போற்றிப் பாராட்டத் தக்கதாகும்.

**தொண்டின் சிறப்பு:**

சிவாசாரியர்களும், பட்டாசாரியர்களும், பூசாரியர்களும் ஓதுவார்களும் ஆகிய உங்களின் தொண்டுகளினுலேயே, இன்றும் நம்முடைய சமயம் நிலை பெற்ருேங்கி வளர்ந்து வருகின்றது. நமது சமுதாயத்தையும், சமயப் பண்பாடுகளையும், சமய ஆசாரங்களையும், சமய சம்பிரதாயங்களையும், சமயக் கலைகளையுமெல்லாம், பெரிதும் போற்றி அழியவிடாமல் பாது காத்துவரும் உங்கள் அனைவரின்தொண்டிற்கும், மனித சமுதாயம் முழுவதும் நன்றியும் வணக்கமும் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

**கடவுளின் பிரதிநிதிகள்:**

நமது இந்து சமயத்தின் உயிர் நாடிகளாக இருந்து விளங்கி வரும் நீங்கள் அனைவரும், ஒரு சில நேரங்களில் சிறிது தளர்ச்சியும், சோர்வும் குறைபாடுகளும் இடர்ப்பாடுகளும் அடைந்திருத்தல் கூடும். அவைகளையெல்லாம் காலப்போக்கில் நேர்ந்த நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட விளைவுகளாகக் கொள்ளல் வேண்டும். காலநிலைகள் எப்படியிருப்பினும், நம் சமய வளர்ச்சி குறித்து நீங்கள் அனைவரும் முனைந்து முன்வந்து மேலும் சிறந்த முறைகளில் பணியாற்றுதல் வேண்டும் என்று, சமய உலகம் உங்கள் அனைவரையும் எதிர்நோக்கி நிற்கின்றது. நமது இந்து தர்மத்தினை, மிகச் சிறப்பான முறையில் வளர்த்துப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும், முக்கியமாக உங்கள் கையிலேயே உள்ளன. நீங்கள் அனைவரும் தெய்வத் தொண்டு ஆற்றுபவர்களாக, தெய்விக இயல்பும் சிறப்பும் உடையவர்களாகப் பொது மக்களால் பெரிதும் மதித்துப் போற்றிக் கௌரவிக்கப்பட்டு வருகின்றீர்கள். இத்தகைய சிறப்பும் பெருமையும், வேறு எவருக்கும் இல்லை எனலாம். கடவுளின் பிரதிநிதிகளாக உங்களைப் பெரிதும் மதித்துக் கௌரவித்து, உங்கள் திருவடிகளில் மிக்க பக்தியுடன் பொது மக்கள் வீழ்ந்து வணங்கிப் போற்றுகின்ருர்கள் என்ருல், இந்தச் சிறப்பும் கௌரவமும் வேறு எத்தகையவராய் இருப்பினும், அவர்களுக்கு வாய்க்குமோ? ஒருபோதும்வாய்க்காது என்பது நிச்சயம்.

**வேதம்:**

நமது இந்து சமயம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது. வேதம்தான் இந்து மதத்திற்கு உரிய ஆணி வேர் போன்றது. பண்ணிற்குப் பயன் இன்னிசை. பாலுக்கு பயன் இன்சுவை. கண்ணிற்குப் பயன் பார்வை தரும் ஒளி. கருத்திற்குப் பயன் செபிப்பதற்குரிய திருவைந்தெழுத்து. (பஞ்சாட்சரம்). வானத்தின் பயன் மழை. இவைகளைப் போல வேதத்தின் பயன், சைவ வைணவம் போன்ற நமது சமயங்கள். இக் கருத்தை,

''பண்ணின் பயனும் இன்னிசையும்,
பாலின் பயனும் இன்சுவையும்,
கண்ணின் பயனும் பெருகொளியும்,
கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் பொழிமழையும்
வேதப் பயனும் சைவமும் போல்,
மண்ணின் பயனும் அப்பதியின்
வளமும் சிறப்பும் வரம்புடைத்தோ?''

எனப் பெரிய புராணத்தில், சேக்கிழார் சுவாமிகள் அழகுற விளக்கியிருத்தல் காணலாம்.

### ஆகமம்:

வேதங்களைப் போலவே, ஆகமங்களும் நம் இந்து சமயத்தில் சிறப்பிடம் வகிக்கின்றன. ''ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்றும்,

> ''மன்னும் மாமலை மகேந்திரம் அதனில்
> சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளி''

என்றும், மணிவாசகர் அருளிச் செய்திருத்தல் காணலாம். வேதம் பொது நூல். ஆகமங்கள் சிறப்பு நூல்.

> ''வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
> ஓதும் பொதுவும் சிறப்பும் என்று உள்ளன''

எனவரும் திருமூலர் திருமந்திரப் பாடல், வேத ஆகமங்களின் சிறப்பினை உணர்த்துதல் காணலாம். சைவத்திற்குக் காமிகம் காரணம் வாதுளம் முதலிய 28 சிவாகமங்களும், வைணவத்திற்குப் பாஞ்சராத்திரம் வைகானசம் என்னும் ஆகமங்களும், பிரமாண நூல்களாக இருந்து வருகின்றன. இவ்வேதாகமங்களின் விதிப்படியே நமது திருக்கோயில்களும், பூசைகளும், விழாக்களும் நன்கினிது நடைபெற்று வருகின்றன.

### கருத்தரங்கின் நோக்கம்:

இத்தகைய வேதாகம சாத்திரங்களையும் தத்துவங்களையும் சம்பிரதாயங்களையும் எல்லாம், உங்களைப் போன்ற பெருமக்கள் வாழையடி வாழையாகப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து வரும் கடமையும், பொறுப்பும் உடையவர்கள் ஆவீர்கள். இத்துறையில் உங்களுக்கு மேன் மேலும் அன்பும் ஆர்வமும் அறிவும் புலமையும் ஆசார சீலங்களும் வளர்ந்து ஓங்குதல் வேண்டும் என்னும் நோக்கமும் குறிக்கோளும் கொண்டே, நமது காஞ்சி ஆசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாணைப்படி, இக் கருத்தரங்குகளையும், பயிற்சி வகுப்புகளையும் அவ்வப்போது நடத்தி வருகின்றோம். இப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டதன் பயனாக, நீங்கள் அனைவரும் மேன்மேலும் அதி தீவிரமான பக்தி சிரத்தையுடன், நமது கோயில்களையும் கடவுள் வழிபாட்டினையும், கடவுள் நம்பிக்கைப் பக்தி ஆசாரங்களையும், சிறந்த முறையில் பொது மக்களிடையில் வளர்ப்பதற்கு உங்கள் வாழ்க்கையைச் சமர்ப்பணம் செய்து கொள்ளுவீர்கள் என நம்புகின்றேன். புராதனமான நமது இந்து தர்ம சமயப் பணிகளுக்காக நீங்கள் உங்கள் வாழ்க்கையை முழுதாகச் சமர்ப்பணம் செய்தல் வேண்டும் என்று, பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

### டாக்டர் இராதாகிருஷ்ணன்:

நமது குடியரசுத் தலைவராக விளங்கியிருந்த பேரறிஞர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், தம் நூலொன்றில் ஓரிடத்தில் எழுதியுள்ள சில கருத்துக்களை, இங்கே நான்குறிப்பிட விரும்புகின்றேன். நமது இந்துமதத் தத்துவங்களின் வளர்ச்சிக்காகப் பேரறிஞர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், ஆற்றியுள்ள அரும் பெரும் தொண்டுகளை அனைத்துலகும் நன்கறியும். அத்தகையவர் நம்முடைய நன்மை கருதி, நம்முடைய சமய வளர்ச்சியின் பொருட்டு, நம்பாற் கொண்ட அன்பாலும் பரிவாலும், நம்மிடமுள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டித் திருத்த விரும்பியிருக்கின்றார். நம்மிடம் அன்பினாலும், நம்மிடம் கொண்ட நல்லெண்ணத்தாலும், அவர் கூறியுள்ள சில கருத்துக்கள் நமக்குச் சிறிது மன வருத்தம் அளிப்பதாக இருந்தாலும், அவை நம்மைத் திருத்தி நன்மை பயக்கக் கூடியவையாக இருத்தலால், அவர் எழுதியிருப்பனவற்றில் சில வரிகளை இங்குப் படித்துக் காட்ட உங்கள் அனுமதியை வேண்டுகின்றேன்.

''தற்போதைய புரோகித பூசக வகுப்பினர், ஏதோ ஒரு சிலரைத் தவிர, தம்முடைய நல்ல குல ஆசாரங்களையும், அன்பு பண்பு முதலிய நலங்களையும் இழந்துவிட்டனர். தம்முடைய அறிவாற்றல், கல்வி நலம், உலகத்தோடு ஒட்ட ஒழுகும் திறம் ஆகியவற்றிலும், அவர்கள் போதிய ஆக்கம் பெறவில்லை. சம்பிரதாய ஒழுக்கம், தீவிர முற்போக்கு வாதங்களையும், அளவு கடந்த தனி மனிதத் தன்மைகளையும், தடுத்து நிறுத்தக் கூடிய தடை கல்லாகப் பயன்படும் என்பதை மட்டுமே, அவர்கள் அறிந்துள்ளனர். புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டுக் கொந்தளிப்புகள் நிகழ்வதற்கு, அவர்களே காரணமாக அமைகின்றனர். அவர்களின் முகமூடி ஆகிய திரையைப் பறித்து விடுவோமானால், சந்தேகப்படுகின்ற அவர்களின் உண்மையான நிலை, பல துறைகளில் வெளிப்படுகின்றது.

தாங்கள் பரப்புகின்ற கருத்துக்கள் யாவை என்பது குறித்து, அவர்களே ஒரு தெளிவும் உறுதியும் இல்லாமல் இருக்கின்றனர். இன்னதென்று உணர முடியாமல் உறுத்துகின்ற ஒருவகைத் திகைப்பின் காரணமாக, அவர்கள் தம்மைத் தாமே சரிவர அறிந்து கொள்ளாமல், வெறும் சந்தர்ப்ப வாதிகளாக விளங்குகின்றனர். தற்போது நிலவி வரும் ஆன்மீகத் தளர்ச்சிக்கும் சோம்பலுக்கும் ஓரளவு அவர்கள் பொறுப்புடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நம்முடைய மூளைகளில் ஏதோ சில தத்துவக் குறியீடுகளையும், சொற்களையும், சுலோகங்களையும் திணிக்கின்றனர். அவைகளின் உண்மைப் பொருள் இன்னதென்று தெரிந்து கொள்ளாமல், அவற்றை நாம் இயந்திரம் போலத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

ஒரு சில சடங்குகள் நம்முடைய புகழைக் கருதியும், அல்லது நம்முடையஉறவினர்களைக் கருதியும், அல்லது ஏதோ ஒரு வகையில் பழக்கமாகிவிட்ட காரணம் பற்றியுமே, நம்மாற் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் எதற்காக? ஏன் செய்யப்படுகின்றன? என்று நமக்குத் தெரிவதில்லை. சமூக நலங் கருதியோ, அல்லது உண்மையிலேயே நம் உள்ளத்தில் எழும் துடிப்பின் காரணமாகவோ, அச்சடங்குகளை நாம்

செய்வதில்லை. வாழ்க்கைப் போக்கின் சட்ட திட்ட அமைப்பின் காரணமாகவும், நாம் வாழ்கின்ற, வாழ்க்கையில் பெற்றுள்ள சூழலுக்குள் துன்பமுறாமல் சுகமாக இருக்க விரும்பும் சுய நலம் காரணமாகவும், நாம் ஏதோ ஒருவாறு இந்துக்களாகப் பெயரளவில் மட்டும் இருந்து வருகின்றோம்.

சுறுசுறுப்பான இளைஞர்களில் உள்ளத்தில் பொங்கி எழுகின்ற, மறைந்துள்ள ஒரு பெரும் சோதியாக, மதம் என்பது விளங்கி வருகின்றது. ஆனால் நம்மில் பெரும்பாலோருக்கு, உண்மையான மதத்தின் இயல்பு யாதென்று, சிறிதளவு கூடக் கருத்து எதுவுமில்லை. இளைஞர் உலகம் சமயத் துறையில் ஒரு புதிய அழுத்தத்தை ஏற்படுத்தவும், ஒரு புதிய நல்ல மனித சமுதாயத்தை உருவாக்கவும் விரும்பி, விடுக்கும் அழைப்பையும், அறைகூவலையும், நாம் கேட்டுணர முடிகிறது. இளைஞர்கள் தம்முள் ஆர்வமும் உணர்ச்சியும் காரணமாக மனித இயல்பு குறித்து, ஒருபோதும் முழுதாகத் திகைப்பும் கலக்கமும் கொள்ள மாட்டார்கள். தம்முடைய உயரிய சிறந்த இலட்சியக் கனவுநிலைக் காட்சிகளில், நம்பிக்கை இழப்பதைக் காட்டிலும், இளைஞர்கள் தம்மைத் தாமே இழித்து மாய்த்துக் கொள்ள முற்படுவர். நமக்கு இப்போது நேர்ந்துள்ள தொல்லையெல்லாம், பொதுவாக நம் அனைவரது தோல்வியாலும், குற்றங் குறைகளாலும் நேர்ந்தனவேயாகும் என்று, திண்ணமாகவும் தெளிவாகவும் புலப்படுகின்றது.''*

நமது பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் எடுத்துக் காட்டியனவும், இடைக்காலத்தில் சில நூற்றாண்டுகள் ஏற்பட்ட நாட்டு நடப்புகளால் விளைந்தனவும் ஆகிய, நம்முடைய குறைபாடுகள் பலவற்றை, நமக்குள் நாமே தற்சோதனை செய்து உணர்ந்து கொண்டு, நம்மை நாமே திருத்திக் கொண்டால்,

''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

என்றாற்போன்ற நிலையை, எளிதில் நாம் அடைவது திண்ணம். அதன் மூலம் நமது மதமும், பண்பாடும், நாட்டு மக்களின் நல்வாழ்வும் செழிப்புற்று வளர்ந்தோங்கிச் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே, அத்தகைய அத் தீவிர ஆர்வமும், இலட்சியமும், நம்மிடையே ஏற்படச் செய்வதற்குத்தான், இத்தகைய பயிற்சி வகுப்புக்களும் கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. இவற்றின் நோக்கங்களும் இலட்சியங்களும் நிறைவேறவும், நாம் நமது மத வளர்ச்சிக்காக நம்மால் இயன்ற எல்லாப் பணிகளையும் முற்ற முடிய முழுதாக முனைந்து செய்யவும், இறைவன் திருவருள் துணை புரிய வேண்டுமென்று, மன மொழி மெய்களால் பணிந்துவணங்குகின்றேன்.

**திருநாவுக்கரசரின் சிறந்த ஞானோபதேசம்:**

இறுதியாக, இக்கடலூருக்கு அருகே உள்ள, திருவதிகையில் திருவருள் பெற்ற சிவ ஞானப் பெருஞ்செல்வர் ஆகிய திருநாவுக்கரசர் பெருமான், நமக்கு உபதேசம் செய்துள்ள ஒரு தேவாரத் திருப்பாடலை மட்டும், இங்கு உங்களுக்கு நினைவூட்டி அமைகின்றேண்.

''மெய்ம்மையாம் உழவைச் செய்து,
விருப்பெனும் வித்தை வித்திப்,
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்,
தம்மைஉள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பிர் ஆகில்,
சிவகதி விளையும் அன்றே!''

''உண்மையான தொண்டு புரிதலாகிய உழவைச் செய்யுங்கள். சமயப் பணிகளில் உள்ளார்ந்த விருப்பங் கொள்ளுதல் ஆகிய விதையை விதையுங்கள். சோம்பியிருத்தல், கடமை தவறுதல், கடமையைத் தட்டிக் கழித்தல் முதலிய பலவகைப் பொய்ம்மையைக் களைகளாகப் பறித்து எறியுங்கள். பொறுமை, உழைப்பு, சகிப்புத் தன்மை முதலிய நீரைப் பாய்ச்சுங்கள். உங்களை நீங்களே தற்சோதனை செய்து கொண்டு உள்முகமாக நோக்கிப் பாருங்கள். நியாயம் அநியாயம்—தக்கது தகாதது—சரி பிழை—குற்றம் நற்றம் என்பவற்றை எண்ணிப் பார்த்து, மறந்தும் தவறு செய்துவிடாதபடி, உங்களுக்கு நீங்களே கட்டுப்பாடு ஆகிய வேலியைப் பாதுகாவலாக அமைத்துக் கொள்ளுங்கள். உண்மை நேர்மை தூய்மை செம்மை ஆகிய நெறிகளிலேயே நின்று, தவறாமல் ஒழுகுங்கள். இங்ஙனமெல்லாம் விழிப்பாகவும் பொறுப்பாகவும், சிறப்பாகவும், நாம் நடந்து வருவோமாயின், நமக்கு எல்லா நன்மைகளும் (சிவ கதி) விளையும் என்பது திண்ணம்''

என்று, திருநாவுக்கரசர் பெருமான் நமக்குச் சிறந்ததொரு ஞானோபதேசம் செய்தருள்

---

*"The present class of priests, with rare exceptions have lost their good breeding, kindliness and polish and have not gained in sureness of intellect, learning or adaptability. They know only that the discipline of tradition erects a barrier against radicalism and excessive individualism. They think that they are safeguarding the community against revolutionary changes but are only fomenting it. If we pull off their masks, doubters stand revealed in many cases. They are not sure of what they preach and are more opportunists by reason of a dumb gnawing despair whose nature they themselves do not understand. They are to some extent responsible for the prevalent spiritual sluggishness. They thrust formulas into our heads which we repeat mechanically, without any real knowledge of what they mean. A few ceremonies are observed more out of regard for our reputation or our relatives or as a matter of habit than out of any inward urge or sense of community. We are Hindus simply because of the legal framework of life and the individual feeling of security within which we live and have our being. Many of us have not the slightest idea of the true nature of religion, that hidden flame, which is more active among the young whose minds are in ferment. We can hear the call and the challenge of the youth for a new emphasis in religion, a new mankind. It is of the spirit of youth that it can never entirely despair of human nature. It will debase itself rather than cease to believe in its dream visions. It is convinced that the affliction that is visited on us is the return for our common failure.''

—Dr. S. Radhakrishnan,
Contemporary Indian Philosophy, P. 477.

கின்றார். இதனை நாம் நம் உள்ளத்தில் என்றும் மறவாமல் பதித்து வைத்துக் கொண்டு பணி புரிதல், நலம் பயக்கும்.

**வேண்டுகோள் :**

*(1)* காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் முருகனைப் பூசித்தவரும், சிவாகமங்களைக் கற்றுத் தேர்ந்தவரும், கந்த புராணம் பாடியருளியவரும் ஆகிய கச்சியப்பர், சிவாசாரிய மரபினரேயாவர். சிவாசாரியர்கள் ஒவ்வொருவரும், அவரைத் தமக்கு முன்னோடியாகவும் குருவாகவும் கொண்டு, அவரைப்போல விளங்க முயலுதல் வேண்டும்.

*(2)* உலகம் புகழும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்குச்சிறந்த உரை வரைந்த பரிமேலழகர், வடமொழி தென்மொழிக் கலைகள் பலவும் கற்றுத் தேர்ந்தவர். காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலில் பட்டராகத் திகழ்ந்தவர். பட்டாசாரியர்கள் ஒவ்வொருவரும் பரிமேலழகரைப் போன்று, கல்வி கேள்வி ஆசார சீலங்களில் சிறந்து விளங்குதல் வேண்டும்.

*(3)* கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர், காளி கோயில் பூசகராக விளங்கியவர். அவரது தந்தையாகிய ஆதித்தன் என்பவர், உவச்சர் (பூசாரி) மரபினர் என்பது, தொன்றுதொட்டுக் கூறப்பெற்று வரும் வரலாறு. ஆதலின் பூசாரிகள் அனைவரும், கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானைப் போலப் பல துறைகளிலும் மேம்பட்டுச் சிறந்து விளங்க முயலுதல் வேண்டும் என்பது, எனது விருப்பமும் அன்பு மிக்க வேண்டுகோளும் ஆகும்.

*(4)* இங்ஙனமே, ஓதுவா மூர்த்திகள் ஒவ்வொருவரும் சீலத்தாலும், கோலத்தாலும், ஞானத்தாலும் உயர்ந்தோங்கி, நமது அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் போன்ற சான்றோர்களை நினைவூட்டிடத் தக்க நிலையிற் சிறந்து விளங்குதல் வேண்டும்.

நமது இந்து மதத்தின் வளர்ச்சிக்கும்; நமது நாட்டுப் பண்பாட்டின் உயர்வுக்கும் ; நமது புராதன சமய சம்பிரதாய, தத்துவ சாத்திர, ஞானானுபவங்கள் புத்துயிர்பெற்றுப் பொலிந்தோங்குவதற்கும்; நீங்கள் அனைவரும் மிகவும் நல்ல முறையில் தொண்டாற்றிட வேண்டும் என்று, மீண்டும் மீண்டும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

உங்களிடையே கலந்துகொள்ளவும், யான் எண்ணிய சில கருத்துக்களை உங்கள்பால் கூறவும், எனக்கு இந்த இனிய நல்ல வாய்ப்பினைத் தந்த ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகள் அவர்களுக்கும், உங்கள் அனைவருக்கும், என் அன்பும் வணக்கமும் நன்றியும் உரியன என்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கின்றேன்.

வாழ்க நம் இந்து மதம்!
வளர்க நமது இந்துமத கலாசாரம்!

* *

## பொறுத்தருள்க !

நமது அறநிலையத்துறையின் சார்பில், கடந்த பதினெட்டு (18) ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த முறையில் வெளிவந்துகொண்டிருக்கும் **''திருக்கோயில்''** திங்கள் இதழ், தவிர்க்க இயலாத சில காரணங்களால் சில மாதங்களாக உரிய காலத்தில் வெளிவர இயலாமல், சிறிது கால தாமதம் நேர்ந்துவிட்டது. அது குறித்து அன்பர்களைப் பொறுத்தருள வேண்டிக் கொள்வதுடன், இனிமேற் கூடிய வரையில் இதழ்கள் உரிய காலத்தில் வெளிவரத் தக்க முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பெற்றுள்ளன என்பதையும், அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**—ஆசிரியர்.**

# காஞ்சிமாநகரில் கவின்மிகு கோயில்கள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**காஞ்சிபுரம் :**

இது சென்னைக்குத் தென்மேற்கே 45 கல் தொலைவில், வேகவதி ஆற்றின் கரையில் உள்ளது. ''மலர்களில் முல்லையும், தேவமாதர்களில் அரம்பையும், அறங்களில் இல்லறமும் போல, நகரங்களில் காஞ்சிபுரம் தலைசிறந்து விளங்குகின்றது'' எனக் காளிதாசர் இதனைப் புகழ்ந்துள்ளார். 'கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்' என்பது அப்பர் தேவாரம். கி.மு. 2-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இந் நகரம் பெரும் புகழ்பெற்று விளங்கியுள்ளது. பதஞ்சலி முனிவரின் மகாபாஷ்யத்திலும், மணிமேகலை, பெரும்பாணாற்றுப்படை என்னும் சங்க நூல்களிலும், இந் நகரம் புகழப்பெற்றுள்ளது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் தொண்டைமான் இளந்திரையன் என்னும் அரசனின் தலைநகராக விளங்கியது. கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரையில், இது பல்லவர்களின் தலைநகராக விளங்கியிருந்தது. கி.பி. 642-ஆம் ஆண்டில் யுவான்சுவாங் என்னும் சீன யாத்திரிகர் இந்நகரைப் பார்வையிட்டு இதனைப் புகழ்ந்துள்ளார். நலாந்தா பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்களாக விளங்கியிருந்த திக்கநாகர், போதிதருமர், தருமபாலர் முதலியவர்களும், சந்திரகுப்த மௌரியரின் அமைச்சராக விளங்கி அர்த்த சாத்திரம் எழுதிய சாணக்கியர் என்னும் கௌடில்யரும், காஞ்சிமாநகரில் தோன்றியவர்களேயாவர். 10 முதல் 13 வரையுள்ள நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சியிலும், 14 முதல் 17 வரை விஜய நகர அரசர்களின் ஆட்சியிலும், பின்னர்ப் படிப்படியே ஆங்கில ஆட்சியின் கீழும் இந்நகரம் இருந்து வந்தது.

பொய்கையாழ்வார், வேதாந்த தேசிகர் (கி.பி. 1268) ஆகியவர்களின் அவதாரத் தலம். திருமழிசை யாழ்வார்; கணி கண்ணர், ஆளவந்தார், திருக்கச்சி நம்பிகள், இராமாநுஜர் முதலிய வைணவச் சான்றோர்கள் வாழ்ந்த தலம். திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர், உலகளந்த பெருமாள் கோயிலில் அருச்சகராக விளங்கியவர் ஆவர். கந்த புராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார் குமரகோட்டத்தில் அருச்சகராக விளங்கினார். சிவஞான சுவாமிகள், தமது சிவஞான போதப் பேருரையை இங்குத் தங்கி இருந்த பொழுதே இயற்றினார். ஆதிசங்கரர் இங்குக் காமகோடி பீடத்தை நிறுவியருளினார். இங்குப் பெரிய காஞ்சிபுரத்தில் நிமந்தகாரத் தெருவில், தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்களின் திருமடம் அமைந்திருக்கின்றது.

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், அருணகிரிநாதர் முதலிய சான்றோர்கள் பலரும் இத்தலத்தைப் பாடிப் போற்றியுள்ளனர். க-பிரமன்; அஞ்சித்தல்-பூசித்தல். பிரமன் பூசித்ததினால் இதற்குக் காஞ்சி எனப் பெயர் அமைந்தது என்பர். காஞ்சி என்னும் ஒரு வகை மரம், வளர்ந்து நிறைந்த இடம் என்றும், நிலமகளுக்குக் காஞ்சி என்னும் இடையணிகலனைப் போன்று திகழுவது என்றும், பொருள் கூறப்படுவதுண்டு. காஞ்சிபுரத்திற்குப் புவனசாரம், மும்மூர்த்திவாசம், விண்டுபுரம், கலிசித்து, இலயசித்து, தபோமயம், பிரமபுரம், ஆதிபீடம், கன்னிகாப்பு சிவபுரம் என வேறு பல பெயர்களும் உண்டு. இங்குள்ள பாலிமேடு என்னும் இடத்தில், பல்லவர்களின் அரண்மனை இருந்தமைக்குரிய வரலாற்று அறிகுறிகள் காணப்படுகின்றன.

**காமாட்சியம்மை கோயில் :**

மதுரையில் மீனாட்சியம்மை போன்று, காஞ்சியில் சிறப்புற்று விளங்கும் அம்பிகை, காமாட்சி யம்மையாவர். கா-கலைமகள்; மா-திருமகள்; அட்சம்-கண். கலைமகளையும் திருமகளையும் தனக்குக் கண்களாகக் கொண்டவள் ஆதலின், காமாட்சி என அம்பிகை இங்குப் பெயர் பெற்று விளங்குகின்றாள். ஏனைய தலங்களைப்போல இல்லாமல்இங்குஅம்பிகை அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கின்றாள். அந்நிலையில், அவளது நான்கு திருக்கைகளிலும் முறையே, பாசம், அங்குசம், மலரம்பு, கரும்பு வில் என்பவற்றை ஏந்தியுள்ளாள். காமாட்சி அம்மையின் கோயில், காஞ்சி மாநகரின் நடுவில் உள்ளது. எல்லாக் கோயில்களுக்கும், திருவிழாக்களுக்கும், காமாட்சியம்மையே நடுநாயகமாகத் திகழ்கின்றாள். கோயிற் கருவறையில் பிலாகாசம் என்னும் ஒரு புனித இடம் உள்ளது. அதன்கண் அம்பிகை, தவம் புரியும் நிலையில் விளங்குகின்றாள். அத்திருவுருவைத் 'தபசு காமாட்சி' என்பர். இவ்விடத்திற்குக் காமகோடி பீடம் என்பது பெயர். தன்னிடத்துச் செய்த காமிய தருமத்தை ஒன்று கோடியாகப் பெருகச் செய்வதினாலும்; விருப்பம் (காமம்) மிக்க செல்வத்திற்குத் தலைவராகிய குபேரர்கள் போன்ற அனேகரைத் தோற்றுவித்து அருள்புரிவதாலும்;

தன்னை வணங்கியவர்க்கு விருப்பம் (காமம்) தரும் பலவகைச் செல்வங்களைக் கோடி கோடியாக வழங்குவதனாலும்; தருமம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் உறுதிப் பொருள் நான்கில் காமத்திற்குக் கோடியிலுள்ள வீடு பேற்றைத் தருவதாலும்; க என்னும் பிரமனையும், அ என்னும் திருமாலையும், ம என்னும் உருத்திரனையும் கோடி முறை இறைவி தன் விழியிற் படைத்ததனாலும்; இதற்குக் காமகோடி பீடம் எனப் பெயரமைந்தது என்று, திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞான சுவாமிகள், தாம் பாடிய காஞ்சிப் புராணத்தின்கண் விளக்கியிருக்கின்றார். இங்குள்ள திருக்குளம்: உலகாணித் தீர்த்தம், பஞ்ச கங்கைத் தீர்த்தம் எனப் பெயர் பெறும். அம்பிகை இறைவன்பால் இரு நாழி நெல் பெற்று, இங்கு முப்பத்திரண்டு அறங்களையும் செய்தருளினள். அதற்கு இடையூறு செய்த பூதம் ஒன்றைத் திருமால் அடக்கினார். அதன் பொருட்டு, அவர் நின்றான்—இருந்தான்—கிடந்தான் என்னும் மூன்றுநிலைகளில், இத்தீர்த்தத்தின் கரையில் மூன்று அடுக்குகளாக உள்ள சந்நிதியில் எழுந்தருளி விளங்குகின்றார். ஒரு சமயம் திருமகள் திருமாலின்பால் ஊடல் கொண்டு, இங்கு வந்து அம்பிகையை நோக்கித் தவம் புரிந்து கொண்டு இருந்தாள். அப்போது திருமால் திருமகளைத் தேடிக் கொண்டு வந்து, ஒரு கள்வனைப் போல மறைந்து நின்று கண்டார். இருவரும் காமாட்சி அம்மையின் அருளைப் பெற்றுக் களித்து மகிழ்ந்தனர். இதற்கு அறிகுறியாகக் காமாட்சி அம்மையின் சந்நிதியின் வாயிலுக்கு அருகில், திருமாலுக்குக் கள்வனூர் என்னும் ஒரு சந்நிதி அமைந்துள்ளது. இது மங்களா சாசனம் பெற்ற ஸ்ரீ வைஷ்ணவத் திருப்பதிகள் நூற்றெட்டனுள் ஒன்று. திருமங்கையாழ்வார் தமது பாடலில் இச்சந்நிதியைக் குறிப்பிட்டுள்ளார் (2059). இக்கோயிலில் உலகாணித் தீர்த்தத்திற்கு அருகிலுள்ள உயரிய சபா மண்டபம் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பியது.

**திருவேகம்பநாதர் கோயில் :**

சைவ சமய ஆசிரியர்கள் நால்வரும் பாடியது. கரிகால் சோழன் அமைத்தது. 'தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்' என மாணிக்க வாசகர் இதனைப் புகழ்ந்துள்ளார். காமாட்சியம்மை மணலால் அமைத்து வழிபட்ட லிங்கமாதலால், இது பிருதிவித் தலம் என்பர். ஏகாம்பரநாதர் என்பதற்கு, ஒற்றை மா மரத்தின் அடியில் வீற்றிருப்பவர். (ஏகம்—ஒன்று; ஆம்பரம்—மாமரம்) என்பது பொருள். வேதங்களே மாமரமாக விளங்குகின்றது என்பது ஐதிகம். கந்தபுராணம் குறிப்பிடும் விகடசக்கர விநாயகர், ஆயிரக்கால் மண்டபத்தில் கோபுரத்தின்கீழ் விளங்குகின்றார். இக்கோயிலினுள் 'நிலாத் திங்கள் துண்டம்' என்னும் வைணவத் தலம் உள்ளது. சிவகங்கை, கம்பை நதி என்னும் இரு தீர்த்தங்கள், கோயிலின் வெளிப்பிரகாரத்தில் உள்ளன. இங்கு ஒரு சந்நிதியில் 1008 இலிங்கங்கள், ஒரே இலிங்கத்தில் அமைந்துள்ளன. ஆட்சன் (Hodgson) என்னும் ஆங்கிலேயர் இக்கோயில் திருமதில் திருப்பணி நடைபெறுவதற்குப் பெரிதும் துணை புரிந்தார். அவரின் நினைவாகத்தான், காஞ்சிபுரத்தில் 'ஆடிசன் பேட்டை' என்று ஒரு பகுதிக்குப் பெயர் ஏற்படுவதாயிற்று. திருவேகம்பர் கோயிலின் கொடி மரத்திற்கு அருகில் கச்சிமயானம் என்னும் பாடல் பெற்ற தலமுள்ளது. அதற்குக் கிழக்கே வாலி வழிபட்ட வாலீச்சரம் உள்ளது. காமாட்சியம்மை வழிபட்ட மூலலிங்கத்திற்குத் தெற்கில், பிரமன் வழிபட்ட வெள்ளக்கம்பம், வடக்கில் திருமால் வழிபட்ட கள்ளக்கம்பம், உருத்திரன் வழிபட்ட நல்லகம்பம் ஆகியவை உள்ளன. கி.பி. 1520-இல் கிருஷ்ணதேவ ராயர் இக்கோயிலின் இராஜகோபுரத்தைக் கட்டினார். முதற்குலோத்துங்கன் (கி.பி. 1070), இரண்டாம் இராசராசன் (கி.பி. 1146), இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178) முதலிய பல அரசர்களின் கல்வெட்டுக்கள் இங்குக் காணப்படுகின்றன.

**வரதராஜப் பெருமாள் கோயில் :**

கஜேந்திரன் என்னும் யானையே மலை வடிவாக அமைந்து நிற்க, அதன்மீது இங்குப் பெருமாள் எழுந்தருளியிருப்பதாக ஐதிகம். ஆதலின் இது அத்திகிரி, அத்தியூர் என வழங்கப் பெறும். 'அத்தியூரான் புள்ளையூர்வான்' என்பது பூதத்தாழ்வார் பாடல். சுவாமி தேவராஜர், தேவாதிராஜர், பிரணதார்த்திஹரர்: பேரருளாளர், அருளாளப் பெருமாள். அம்பாளின் பெயர் பெருந்தேவித் தாயார் என்று வழங்கப்படும். நின்ற திருக்கோலம். படைப்பாற்றலைப் பெறுவதற்காகப் பிரம்ம தேவர் இங்கு வேள்வி புரிந்து அருள் பெற்றார். பிரமன்பால் ஊடல் கொண்ட சரசுவதி, பெரு நீர் வெள்ளமாகப் பெருகி வேள்வியை அழிக்க முயன்றாள். அவள் நதி வடிவம் கொண்டு வேகமாக ஓடி வந்ததனால், ஆற்றுக்கு வேகவதி எனப்பெயர் வந்தது. பிரம தேவரின் வேண்டுகோளுக்கு இணங்கித் திருமால், திருவெஃகா ஸ்ரீயதோக்தகாரி எம்பெருமானாகக் குறுக்கே பள்ளி கொண்டு வேகவதியின் வெள்ளத்தைத் தடுத்துப் பிரமனுக்கு அருள் புரிந்தார். பிரமனின் வேள்வியிலிருந்து புண்ணியகோடிவிமானம் தோன்றியது. அப்புண்ணிய கோடி விமானத்திலேயே வரதராஜர் எழுந்தருளி விளங்குகின்றார். கிழக்கிலும் மேற்கிலும் கோபுரங்கள் உள்ளன. அவைகள் முதலாம் வேங்கடபதி, இரண்டாம் வேங்கடபதி (கி.பி. 1575-1642) அரசர்களால் கட்டப்பெற்றன. கோயிலின் கருவறையை அடைவதற்கு 24 படிகளை ஏறிக் கடந்து செல்ல வேண்டும். 24 தத்துவங்களுக்கு மேல் 25-ஆம் தத்துவமாகப் பரவாசுதேவன் ஆகிய திருமால் விளங்குகின்றார் என்னும் தத்துவ நுட்பத்தை இவ்வமைப்பு உணர்த்துகின்றது. இங்கு ஐந்து பிராகாரங்கள் உள்ளன. வரதர் மேற்கு நோக்கியுள்ளார். அத்திகிரியின் கீழ் உள்ள குகையில் ஸ்ரீ அழகிய சிங்கரும், ஸ்ரீ ஹரிதார்த்த தேவியும் விளங்குகின்றனர். கோயிலின் நூற்றுக்கால் மண்டபம் சிற்ப அழகு மிக்கது. அது விஜய நகர அரசர்களால் கட்டப்பட்டது. அதன் வடக்கே உள்ள குளம் அனந்த தீர்த்தம். கொடிக் கம்பம் ஒரே கல்லில் 100 அடி உயரம்

உடையது. ஐந்து பிராகாரங்களையுடைய இக் கோயில் 23 ஏக்கர் நிலப் பரப்புடையது. கிழக் கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த இராபர்ட் கிளைவ் நவரத்தின மாலையும், லியோனர்ட் பிளேசு நவரத்தின கிரீடமும் போன்ற விலை மிகுந்த அணிகலன்களைச் சுவாமிக்கு வழங்கி யுள்ளனர். ''காசிமுதலாகிய நன்னகரி எல்லாம் கார்மேனி அருளாளர் கச்சிக்கு ஒவ்வா'' என்பர் வேதாந்த தேசிகர்.

**கச்சிநெறிக் காரைக்காடு :**

இத்தலம் இக்காலத்தில் திருக்காலிமேடு என மருவி வழங்கி வருகின்றது. காஞ்சிபுரம் இருப்புப் பாதை நிலையத்திற்குத் தென்கிழக்கே முக்காற் கல் தொலைவில் உள்ளது. இதற்குச் சத்தியவிரதக்ஷேத்திரம் என்றும் பெயர் உண்டு. இங்கே ''மெய்ப் பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபெறுஉய்'' உள்ள சிவபெருமான், சத்திய சத்தியர், சத்திய சோதகர், சத்திய சங்கற்பர், சத்திய காமர், சத்திய விரதர் என்னும் பெயர்களுடன் விளங்குகின்றார். முன் னொரு காலத்தில் சிபி என்னும் அரசன் இத் தலத்தை வழிபட்டு இந்திர பதவி பெற்றான். இந்திர பதவியிலிருந்து அவன் தேவர் உலக இன்பங்களில் திளைத்து மகிழ்ந்த பிறகு, அவ் வின்பம் தெவிட்டி உவர்ப்பு அடைந்து வீடு பேறு எய்த விரும்பி நின்றான். அதனால் தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதி பகவானை அழைத்து வீடு பேறு எய்துதற்குரிய நெறியை அறிவிக்குமாறு வினவி, அவரது அறிவுரையின் படி இங்கு வந்து இறைவனை வழிபட்டு அருள் பெற்றான். அவனால் அமைக்கப் பெற்றதீர்த்தம் 'இந்திர தீர்த்தம்' என வழங்கப்படுகின்றது. முன்னொரு காலத்தில் சந்திரனின் மகனாகிய புதன் இங்கு வந்து சிவபெருமானை வழிபட்டு முதன்மை மிக்க கிரகங்களுள் ஒன்று ஆகும் பேறு பெற்றான். ஆதலின் இந்தத் தலத்திற்குப் புதன் கிழமை சிறப்புடைய ஒரு நாளாகும். இத்தலத்தில் விநாயகர், அம்பிகை, முருகப் பெருமான் முதலியவர்களும், இறைவனை வழி பட்டு மகிழ்ந்தனர். இத்தலத்தைத் திருஞான சம்பந்தர் தமது தேவாரத்தில் பாடிச் சிறப்பித் துள்ளார். ஒரு காலத்தில் காரைச் செடிகள் அடர்ந்து காடுபோல் வளர்ந்திருந்ததனால், இத் தலத்திற்குக் 'கச்சி நெறிக் காரைக்காடு' எனப் பெயர் ஏற்பட்டது.

**மணிகண்டீசுவரம் :**

இது காஞ்சிபுரம் இருப்புப் பாதை நிலையத் திற்கு மிக அருகில், திருக்கச்சி நம்பி தெருவில் உள்ளது. திருப்பாற் கடலினின்று தோன்றிய ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சினை உலகத்து உயிர்களும் தேவர்களும் எல்லாம் உய்வதன் பொருட்டுத் தமது பெருங் கருணையினால் சிவ பெருமான் உண்டருளி, அதனைத் தமது கண்டத் தின்கண் தம்முடைய அருட்டிறனுக்கு அறிகுறி யாக நிறுத்தி வைத்தருளினர். அதனால் அவரது கண்டம் நீலமணிபோலும் நிறமுடையதாயிற்று. எனவே அவருக்கு, மணிகண்டீசுவரர் என்று பெயர் ஏற்படுவதாயிற்று. இத்தலத்தைத் தேவர்கள் அனைவரும் வழிபட்டுத் தொழுது அமுதம் உண்ணும் பேறு பெற்றனர்.

**புண்ணியகோடீசுவரம் :**

இது மணிகண்டீசுவரத்திற்குத் தெற்கே காற்கல் தொலைவில் உள்ளது. திருமால் இங்கு வழிபட்டுக் காத்தற்றொழில் புரிவதற்குமட்டுமே யன்றி, படைத்தற்றொழில் இயற்றவும் ஆற்றல் பெற்றனர். இங்குள்ள திருக்குளத்திலேயே தம்மை வழிபட்டு வந்த கஜேந்திரன் என்னும் யானையின் காலைப் பற்றிய முதலையைத் திருமால் தமது சக்கரப் படையை ஏவிக் கொன்று அருள் புரிந்தார். இங்குள்ள தீர்த்தம் 'கஜேந்திர தீர்த்தம்' எனப்பெயர் பெறும்.

**சிவாத்தான ஈசுவரம் :**

இது புண்ணிய கோடீச்சுவரத்திற்குக் கிழக்கில் அரைக் கல் தொலைவில், மிகவும் பாழ்பட்டுச் சிதைந்த நிலையில் உள்ளது. பிரம தேவர் இத்தலத்திற்கு வந்து பாசுபத விரதம் பூண்டு, பிரமீசர் என்னும் பெயரால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, பிரம தீர்த்தம் என்னும் திருக்குளத்தை அமைத்து, சோமயாகம் செய்து சிவபெருமானை வழிபட்டு, உலகங்களைப் படைக் கும் ஆற்றலைப் பெற்றார். தாம் யாகம் செய்த இவ்விடத்தைச் சிவபெருமான் தமக்குரிய இருப் பிடமாக ஏற்றுக் கொண்டு எழுந்தருளி, அடிய வர்களுக்கு அருள் புரிந்து வருமாறு பிரமதேவர் வேண்டிக் கொண்டதனால், பிரம ஆஸ்தானம் என்பது மாறிச் சிவ ஆஸ்தானம்(சிவாத்தானம்) என வழங்கப் பெறுவதாயிற்று.

**சார்ந்தாசய ஈசுவரம் :**

இத்தலம் சிவாத்தான ஈசுவரத்திற்கு அரைக் கல் தொலைவில் உள்ளது. முன்னொரு காலத்தில், காசியில் வாழ்ந்திருந்த முனிவர்கள், வேத வியாச முனிவரை வணங்கித் தொழுது வேத வடிவாயுள்ள பொருள் எது என்பதனை விளக்கிச் சுருக்கித் தெள்ளத் தெளியச் சொல்லி அருள்க என வேண்டிக் கொண்டனர். அதற்கு அவர் ''நாராயணன் ஒருவனே பரப்பிரம்மம்; ஏனையர் அன்னர் அல்லர்'' என்பதே அனைத்து நூல்களும் ஆராய்ந்து கூறும் உண்மை என்று காசி விசுவநாதப் பெருமானை இகழ்ந்தது போன்ற குறிப்பு அமையக் கூறினர். அப்போது திருநந்திதேவர் அவரைச் சினந்து, விசுவ ரூபன், விசுவாதிகன் விசுவாந்தர்யாமி, விசுவ சேவியன், விசுவநாதன் என விளங்கும் சிவ பெருமானை இகழ்ந்த குற்றம் நீங்க, காசியின் மேம்பட்ட காஞ்சியிற் சென்று சிவபெருமானை வழிபடுமாறு பணித்தனர். அதன் படியே வேத வியாசர் காஞ்சியை அடைந்து, மஞ்சள் நதிக் கரையின் பக்கத்திலுள்ள மணிகண்டீசுவரத் திற்கு நிருதி திக்கில் சார்ந்தாஸ்ரய லிங்க ஈசுவரர் என்னும் பெயரால் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டார். 'சார்ந்தாஸ் ரய ஈசுவரர்' என்னும் தொடர், தம்மைப் புகலிடமாகக் கொண்டு சார்ந்தவர்களுக்குத் துணையாகத் திகழ்பவர் எனப் பொருள்படும் (ஆஸ்ரயம்-புகலிடம்). இஃது இந்நாளில் 'சாந்தாலேசுவரர் கோயில்' என மருவி வழங்கு கின்றது.

**பணாதர ஈசுவரம் :**

இது பணாமணீசம் எனவும் வழங்கும். இது ஆலடிப் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது. இஃது ஆயிரம் பணாமணிகளையுடைய ஆதிசேடன் வழிபட்டு அருள் பெற்ற தலம். (பணம்—படம், மணி—இரத்தினம். ஆயிரம் தலைகளையும், அவற்றில் இரத்தினங்களையும் உடையவன் ஆதிசேடன். ஆதலின் அவனுக்குப் பணாதரன், பணாமணிதரன் என்பது பெயர்.)

**முத்தீசுவரம் :**

இத்தலம், காஞ்சிபுரத்தில் 'ஆடிசன் பேட்டை' என வழங்கியிருந்த, காந்திசாலையில் அறுவை வணிகர் அறச்சாலைக்கு அருகில், பணாதரீசுவரர் கோயிலுக்கு வடகிழக்கிலுள்ளது. காசிப முனிவர்க்குக் கத்துரு, வினதை (சுபருணை) என மனைவியர் இருவர் இருந்தனர். அவ்விருவரும் தங்களுக்குள், அழகிற் சிறந்தவர் யார்? என விவாதித்துப் பூசலிட்டுக் கொண்டனர். தமது கணவராகிய காசிப முனிவரிடம் சென்று, தங்கள் இருவருள் அழகிற் சிறந்தவர் யார் எனக் கூறுமாறு வேண்டினர். அவர் கத்துருவே அழகிற் சிறந்தவள் என்று தீர்ப்புரை வழங்கினார். வினதை தோல்வியுற்றாள். ஒப்பந்த நிபந்தனையின்படி கத்துரு வினதையைச் சிறையிலிட்டாள். அவள் காஞ்சிபுரத்தை அடைந்து, ஆதிபிதேச்சுரத்திற்கு வடகிழக்கிலுள்ள முத்தீசுவரர் கோயிலை வழிபட்டு, கருடனை மைந்தனாகப் பெற்றுச் சிறை நீங்கும் வரத்தைப் பெற்றாள். வினதையும் கருடனும் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டு அருள் பெற்றனர். சைவ சமயத்தைச் சார்ந்தவரும், அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவரும், ஏகாலியர் குலத்தவரும் ஆகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் அன்புடன் வழிபட்டு முக்தி பெற்ற தலம்.

**பராசரேசுவரம் :**

இது காஞ்சிபுரத்தில் காந்தி சாலையிலுள்ள வழக்கறுத்தீசுவரர் கோயிலின் உள்ளே உள்ளது. வசிட்ட முனிவரின் புதல்வராகிய பராசர முனிவர், தமது பாட்டனார் ஆகிய வசிட்ட முனிவர்பால் பகைமை கொண்ட விசுவாமித்திர முனிவர், தமது தந்தைமார்களாகிய சக்தி முதலிய நூற்றுவரைச்சதாசனன் என்னும் அசுரப் பிறப்படைந்த அரசனைக் கொண்டு, கொன்று ஒழித்த செய்தியைத் தன் தாயினால் உணர்ந்தார். அதனால் மிக்க துக்கமும் சினமும் அடைந்து, கொடியவர்களாகிய அசுரர்களை ஒழிக்க உறுதி கொண்டு, அசுரர்களைக் கொல்வதற்குரிய இரட்சோகனம் என்னும் யாகம் புரிந்து, பராசரர் இறைவனை வழிபட்டு அருள் பெற்ற தலம் இது.

**திரிகால ஞானேசுவரம் :**

இக்கோயில், காஞ்சிபுரம் பேருந்துநிலையத்திற்குள், மதுரன் தோட்டம் என வழங்கிய இடத்தில் அமைந்துள்ளது. முனிவர்கள் பலர் தாம் இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்று காலத்திலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் அறிவு பெறுதற் பொருட்டு வழிபட்ட தலம். அண்மையில் இச்சிறிய கோயில் திருப்பணி செய்யப் பெற்று, நன்கினிது நடைபெற்று வருகின்றது.

**சப்த தானம் :**

முற்காலத்தில் அத்திரி, குச்சன், வசிட்டன், பிருகு, கௌதமர், காசிபர், அங்கிரசு என்னும் ஏழு முனிவர்கள் முத்தி பெற விரும்பினர். அவர்கள் தமக்குப் பிரம தேவன் அறிவித்தபடி காஞ்சியை அடைந்து சிவகங்கையில் முழுகி, மஞ்சள் நதிக் கரையில், சார்ந்தாசயத்திற்கு அருகில் தங்கள் பெயரால் ஒவ்வோர் இலிங்கம் தாபித்துப் பூசித்தனர். அந்த ஏழு இலிங்கங்களும் அமைந்துள்ள கோயிலே 'சப்த தானம்' என வழங்கி வருகின்றது. (சப்தம், சத்தம்—ஏழு).

**தக்கேசம் :**

இத்தலம் பிள்ளையார்பாளையத்தில் நடுத்தெரு, என்னும் கச்சியப்பன் தெருவில் உள்ளது. பிரமதேவனின் புதல்வனாகிய தக்கன் என்பவன், அகங்காரத்தினால் சிவபெருமானை இகழ்ந்து அவமதித்து, ஒரு வேள்வி செய்யத் தொடங்கினான். அங்ஙனம் செய்தலாகாது என்று தடுத்து, ததீசி முனிவர் அவனுக்குப் பல அறிவுரைகள் கூறினார். ஆயினும் அவன் கேளாமல் அவ்வேள்வியைச் செய்ய முற்பட்டான். அதனைக் காணுவதற்கு வந்த தன் மகளாகிய அம்பிகையையும் அவமதித்து இகழ்ந்தான். அதனால் வீரபத்திரரும், பத்திரகாளியும் தோன்றி, அவ்வேள்வியை அழித்து, அதற்கு வந்திருந்த தேவர்களையும் தண்டித்தனர். வீரபத்திரர் தக்கனது தலையை வெட்டி வீழ்த்தினர். பின்னர் அவன் ஆட்டுத் தலையைப் பெற்றான். அவன் தனது குற்றமுணர்ந்து, அது திருதற் பொருட்டுச் சிவலிங்கம் தாபித்து வழிபட்டு உய்தி பெற்ற இடமே தக்கேசம் எனப்படும்.

**காயாரோகண ஈசுவரம் :**

இத்தலம் பிள்ளையார் பாளையத்தில், புதுப் பாளையத் தெருவின் கோடியில் வேகவதி ஆற்றின் கரையிலுள்ளது. இக்கோயிலுக்கு அருகே மாத்தூர் சுவாமிகள் மடம், மெய்கண்டார் ஆதீன மடம் முதலியன உள்ளன. காசி விநாயகர் கோயில், சிந்தாமணி விநாயகர் கோயில் என்பனவும், இவ்விரு மடங்களுக்கு அருகில் இருக்கின்றன. மனித வருடங்கள் 17,28,000 கொண்டது கிருதயுகம், 12,69,000 கொண்டது திரேதாயுகம், 8,64,000 கொண்டது துவாபரயுகம், 4,32,000 கொண்டது கலியுகம். ஆக 43,20,000 கொண்டது ஒரு சதுர்யுகம். இத்தகைய சதுர்யுகம் ஆயிரம் கொண்டது பிரமதேவனுக்கு ஒரு பகல். இம்முறையில் நூறு ஆண்டுகள் கழிந்தால் ஒரு பிரமதேவர் இறப்பார். ஒரு பிரமாவின் காலம் திருமாலுக்கு ஒரு பகலாகும். இம்முறையில் நூறு ஆண்டுகள் கழிந்தால் ஒரு திருமால் இறப்பார். இங்ஙனம் இருவரும் இறக்கவரும்

158618

ஒவ்வோர் ஊழியின் முடிவிலும், சிவபெருமான் அவர்களைத் தம்முள் ஒடுக்கி, அவர்களின் உடலைத் தமது தோள் மேல் தாங்கி நடனம் செய்தருளுவார். சிவபெருமான் பிரமவிஷ்ணுக்களின் காயத்தை ஆரோகணம் செய்து கொள்ளும் தலமாதலின், இதற்குக் 'காயாரோகணம்' எனப் பெயர் அமைந்தது. இங்குள்ள தீர்த்தம் 'காயாரோகண தீர்த்தம்', 'காயார் குளம்' என வழங்கும். இத்தலத்தில் மகாலட்சுமி இறைவனை வில்வத்தால் வழிபட்டுத் திருமாலைத் தனக்குக் கணவனாகப் பெற்றாள். தேவகுருவாகிய பிருகஸ்பதி பகவான் இங்கு இறைவனை வழிபட்டார். ஆதலின் வியாழக்கிழமையன்று, காயாரோகண தீர்த்தத்தில் நீராடி, இங்கு வழிபடுபவர்கள் இம்மை மறுமை வீடு என்னும் எல்லா நன்மைகளும் பெறுவார்கள். இயமன் இங்குப் பூசித்துத் தென் திசைக்குத் தலைவனாகும் பேறு பெற்றான். ஆதலின் இங்குள்ள காயாரோகண தீர்த்தத்தில் பிதிரர்கடன் செய்வது மிகவும் சிறப்பாகும்.

**சித்தேசுவரம் :**

இது காஞ்சிபுரத்தில் இராஜாம்பேட்டைத் தெருவில் உள்ளது. காமாட்சியம்மை கம்பையாற்றங்கரையில் தவம் புரியுங்கால், மஞ்சள் காப்பணிந்து முழுகிய நீர், மஞ்சள்நீர் நதியாகப் பெருகியது. சிவபெருமான் மகிழ்ந்து அந்த நதிக்கரையில் இலிங்கமாகத் தோன்றியருளினார். அவருக்கு 'மஞ்சள்நீர்க்கூத்தர்' என்றும் திருப்பெயர் உண்டாயிற்று. அப்பெருமானைப் பற்பல சித்தர்கள் பூசித்து எண்ணிறந்த சித்திகளை அடைந்தார்கள். அதனால் சித்தேசர் என்னும் பெயர் இப்பெருமானுக்கு ஏற்பட்டது. சித்தேசுவரர் திருமுன்பில், கச்சேரித் தெருவில் 'சித்ததீர்த்தம்' என்னும் கிணறு ஒன்று உள்ளது. அதில், ஞாயிறு, சனிக்கிழமைகளில் முழுகி வழிபடுபவர்கள், எல்லா நலங்களும் எய்துவார்கள்.

**அரிசாப பயந்தீர்த்த ஈசுவரம் :**

இக்கோயில் நெல்லுக்காரத் தெருவின் தெற்கு வரிசையில் உள்ளது. முன்னொரு காலத்தில், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் ஏற்பட்டது. திருமால் தேவர்களுக்குத் துணையாகச் சென்று அசுரர்களை எதிர்த்தார். அசுரர்கள் அஞ்சிப் பிருகுமுனிவரின் மனைவியும், இலக்குமி தேவியின் அன்னையுமாகிய, கியாதி என்பவள்பால் அடைக்கலம் புகுந்தனர். அசுரர்களுக்குத் துணை புரிந்ததனால், திருமால் தனது சக்கரப் படையை ஏவிக் கியாதியைக் கொன்றார். அதனால் பிருகுமுனிவர் மிக்க சீற்றம் கொண்டு, நிலவுலகில் பத்து பிறப்புகள் அடையுமாறு திருமாலுக்குச் சாபம் கொடுத்தார். அதனால் திருமால் மிகவும் மனம் வருந்தி, காஞ்சியை அடைந்து திருவேகம்பரைத் தவம் புரிந்து வழிபட்டார். சிவபெருமான் வெளிப்பட்டு, ''எனது அடியார்கள் இட்ட சாபத்தை மாற்றுதல் யார்க்கும் அரிது ; அதனை அனுபவித்தே ஆதல் வேண்டும்; ஆயினும் எம்மை வழிபட்டதனால் நீர் அடையும் பத்துப் பிறவிகளும் உலகுக்கு நன்மை பயக்கும்'' என்று அருளிச் செய்து, திருமாலின் அச்சமும் கவலையும் போக்கினார். அதனால் 'அரிசாப பயந்தீர்த்த ஈசுவரர்' எனப் பெயராயிற்று.

**மதங்கேசம் :**

இக்கோயில் நெல்லுக்காரத் தெருவின் கிழக்குக் கோடியில் இறையூழிய மருத்துவமனைக்கு (மிஷன் ஆஸ்பத்திரி) எதிரில் உள்ளது. இங்கேயுள்ள சிவலிங்கம் மிகப் பெரியது. ஐம்புலன்களை அடக்கி ஆளும் ஆற்றல் பெறுதற் பொருட்டு மதங்க முனிவர் வழிபட்ட தலம். ஆதலின் இதற்கு மதங்கேசுவரம் எனப் பெயர் அமைந்தது.

**அபிராமேசம் :**

இக்கோயில் உலகளந்தார் சந்நிதித் தெருவில், சங்குபாணி விநாயகர் கோயிலுக்கு எதிரில் உள்ளது. திருமால் வாமனராகி மகாபலியை அழிக்கும் பொருட்டு இத்தலத்தை வழிபட்டார். தேவேந்திரனின் யானையாகிய ஐராவதத்திற்குப் பெண் யானையாகிய அபிராமம் பூசித்ததினால், இதற்கு அபிராமேசம் எனப் பெயர் வந்தது.

**ஐராவதேசுவரம் :**

இக்கோயில் நெல்லுக்காரத் தெருவின் மேற்குக் கோடியில், கச்சபேசுவரர் கோயிலின் எதிரில் உள்ளது. இராசசிம்ம பல்லவ மன்னன் (கி.பி. 685—705) கட்டியது. இந்திரனின் வாகனமாகிய ஐராவதம் என்னும் வெள்ளை யானை இங்கு வழிபட்டு யானைகளுக்கெல்லாம் தலைமை பெற்றதுடன், தேவேந்திரனுக்கு வாகனமாகும் சிறப்பும் அடைந்தது.

**இஷ்டசித்தீச்சரம் :**

இந்தத் தலம், பெரிய காஞ்சிபுரம் இராச வீதியில் இருக்கின்ற கச்சபேசுவரர் கோயிலின் உள்ளே இருக்கின்றது. ஒரு காலத்தில் பிருகு முனிவர் குலத்தில் தோன்றிய ததீசி முனிவர், குபன் என்னும் அரசனுடன் நட்புக் கொண்டு வாழ்ந்து வந்தார். ஒரு நாள் இவர்களிடையே அந்தணர்—அரசர் என்னும், இருவரில் யார் சிறந்தவர் என்று சர்ச்சை எழுந்தது. ததீசி அந்தணரே சிறந்தவர் என்றார். குபன் அரசரே சிறந்தவர் என்றார். இருவருக்கும் பூசல் மிகுந்தது. அரசன் வெகுண்டு முனிவரை வாளால் இரண்டு துண்டாக வெட்டினான். வெட்டுண்டு விழுங்கால், ததீசி முனிவர் மந்திர ஆற்றல் வல்ல அசுர குருவாகிய சுக்கிரனை நினைத்தார். சுக்கிரர் தோன்றி வெட்டுண்ட உடலைப் பொருத்தி முனிவரை எழுப்பினர். ''காஞ்சியிலுள்ள இஷ்ட சித்தீசப் பெருமானை வழிபட்டே, இறந்தவரை உயிர்ப்பிக்கும் மிருதசஞ்சீவினி என்னும் மந்திரத்தை யான் பெற்றேன். இஷ்ட சித்தீசுவரத்திற்குத் தென்பால் 'இஷ்ட சித்தி தீர்த்தம்' உள்ளது. அதில் மூழ்கிப் பிரமனும் சரசுவதியும் படைத்தற்றொழிலும், சத்திய லோக வாழ்வும் பெற்றனர். சூரியன், வேத உருவமான உடலும், ஆயிரம் கதிர்களும்

பெற்ருன். திருமாலும் இலக்குமியும் காத்தற் ருெழிலும், வைகுண்ட வாழ்வும் பெற்றனர். அம்பிகை இறைவனின் திருமேனியில் பாதியாகக் கலந்தார். குபேரன் இழந்த கண்களைப் பெற்று இறைவனுக்குத் தோழனுயினன். துச்சருமேளன் என்பவன் ஊர்வசியின் இன்பம் பெற்ருன். கண்ணபிரானின் புதல்வனுகிய சாம்பன் என்பவன், தொழுநோய் தீர்ந்து நலம் அடைந்தான். நளனும், பஞ்சபாண்டவர்களும் இதில் மூழ்கித் தமது பகைவர்களை வென்று இழந்த அரசைப் பெற்ருர்கள். இத் தீர்த்தத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் மூழ்குதல், சிறப்பாக வைகாசி மாசி கார்த்திகை ஆடி என்னும் மாதங்களில் மூழ்குதல் பெருநலம் பயக்கும்'' என்று சுக்கிராச்சாரியர் கூறினர். அதன்படி ததீசி முனிவர் இங்கு வந்து, இஷ்டசித்தீசத்தில் மேற்கு முகமாக எழுந்தருளியுள்ள சிவலிங்கத் திருமேனியை வழிபட்டு வச்சிரயாக்கை பெற்றனர். குபன் என்னும் அரசனையும் அவனுக்குத் துணையாக வந்த திருமாலையும் வென்றனர்.

**கச்சபேசுவரம் :**

இத்தலம் பெரிய காஞ்சிபுரம் இராஜ வீதியில், வடக்கு நோக்கிய கோபுர வாயிலுடன் விளங்குகின்ற ஒரு சிறந்த பெரும் கோயிலாகும். இக்கோயிலின் உள்ளேயேயிருக்கும் இஷ்டசித்தீசுவரத்திற்குத் தெற்கில் கச்சபேசுவரர் எழுந்தருளியுள்ளார். ஒரு காலத்தில் ஊழியின் முடிவில் உலகங்கள் அழிந்த போது இங்குச் சிவபெருமான் சோதிலிங்கமாகத் தோன்றி உலகங்களைப் படைத்தார். பிரமன் சரசுவதியுடன் அவரைப் பூசித்துப் படைத்தற் ருெழிலில் தலைமை பெற்ருன். தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்தபோது மத்தாகிய மந்தரமலை கடலில் அமிழாமல் மிதக்கும்படி, திருமால் ஆமையாக இருந்து தாங்கி, தேவர்கள் அமுதம் பெறத் துணை புரிந்தார். கச்சபம் என்னும் ஆமையின் வடிவம் கொண்டு திருமால் வழிபட்டதனுல் இங்குள்ள இறைவனுக்குக் 'கச்சபேசுவரர்' என்ற பெயர் வந்தது. துர்க்கை அய்யனுர் சூரியன் வைரவர் விநாயகர் முதலியவர்களும் கச்சபேசுவரரை வழிபட்டு அருள் பெற்றனர். இங்குள்ள 'சத்தியமொழி விநாயகர்' வேண்டுவார் வேண்டுவன எல்லாம் தரும் வள்ளலாக விளங்கி வருகின்ருர். கச்சபேசுவரத்திற்கு முள் முருக்கமரம், தலவிருட்சம் ஆகும்.

**சுரகரேசுவரம் :**

இது திருவேகம்பநாதர் சந்நிதித் தெருவில் உள்ளது. மிகப் பழமை வாய்ந்தது. பல்லவர் காலத்தது. தூங்கானை மாட அமைப்பை உடையது. ஒரு சமயம் தேவர்கள் அனைவருக்கும் கொடிய வெப்பு நோயாகிய 'சுரம்' ஏற்பட்டது. அப்போது அவர்கள் அனைவரும் இங்கு வந்து சுரகர தீர்த்தத்தில் மூழ்கித் தமது சுரம் நீங்கப் பெற்றனர். சுராக்கன் என்னும் அசுரனை இங்குச் சிவபெருமான் அழித்தருளினர். சுர நோயினுல் வருந்துபவர்கள் சுரகரேசுவரரை வணங்கினுல், அந்நோய் நீங்கி நலம் பெறுவர்.

**தான்தோன்றிசுவரம் :**

இது சுரகர தீர்த்தத்திற்குத் தெற்கில் உள்ளது. இங்குள்ள சிவலிங்கம் சுயம்பு மூர்த்தமாகத் தானே தோன்றியது. ஆதலின் 'தான் தோன்றி ஈசுவரர்' எனப் பெயர் பெற்ருர். வியாக்கிரபாத முனிவர், வசிட்டமுனிவரின் தங்கையை மணந்து பெற்ற உபமன்யு என்னும் சிறு குழந்தை, வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்தில் காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்து வந்தது. பின்னர் அது தன் தந்தையாகிய வியாக்கிரபாத முனிவரின் ஆச்சிரமத்திற்கு அழைத்துச் செல்லப் பெற்றது. அங்குப் பசுவின்பால் கிடைக்காமல், நெல்லரிசி மாவை நீரில் குழைத்துக் கலக்கிப் பாலாகத் தாய் கொடுத்தாள். குழந்தை அதனை உண்ண மறுத்து, புலம்பி அழுது வருந்தியது. அக் குழந்தையாகிய உபமன்னிய முனிவர், பின்னர்த் தன் தந்தையார் உபதேசித்தபடி, இங்கு வந்து சிவபெருமானை வழிபட்டு, அவரால் திருப்பாற் கடலை அருந்துதற்கு அளிக்கப் பெற்ருர். ''பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற் கடல் அன்று ஈந்த பிரான்'' எனவரும் திருவிசைப்பாப் பாடல் இவ்வரலாற்றையே குறிக்கின்றது.

**மாண்டு கன்னிசுவரம் :**

இக்கோயில் பாண்டவப் பெருமாள் கோயிலுக்குத் தென் கிழக்கில், அரைக்கல் தொலைவில் உள்ளது. மாண்டு கன்னிய முனிவர், இங்கு வழிபட்டு, விண்ணுலக இன்பங்களை மண்ணுலகில் அனுபவிக்கப் பெற்ருர். இங்குள்ள தீர்த்தம் ஐயரம்பையர் தீர்த்தம் என வழங்குகின்றது.

**வன்னிசம் :**

இது, மாண்டு கன்னிசுவரத்திற்கு மேற்கே உள்ளது. இங்குள்ள இறைவனை வழிபட்டு அக்கினி தேவன் தேவர்களுக்குத் தரப்படும் அவிசைச் சுமக்கும் ஆற்றல் பெற்ருன். வன்னி எனப்படும் அக்கினி தேவனுல் நிறுவி வழிபடப் பெற்றமையால், இதற்கு வன்னிசம் எனப் பெயர் வந்தது.

**சவுனக ஈசுவரம் :**

இது வன்னிசத்திற்கு ஒருபர்லாங்கு தொலைவில் உள்ளது. சவுனகர் என்னும் முனிவர் இங்கு வழிபட்டு அருள் பெற்ருர்.

**அமரேசுவரம் :**

இது பெரிய காஞ்சிபுரம் நிமந்தக்கார ஒற்றைவாடைத் தெருவில் உள்ளது. ஒரு சமயம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. அப்போரில் தேவர்கள் வெற்றி பெறுமாறு இறைவன் செய்தருளினன். வெற்றி பெற்ற தேவர்கள், இறுமாப்பு எய்திச் செருக்குற்றனர். அவர்களின் செருக்கை அடக்க, இறைவன் ஓர் இயக்கனுக வந்து தேவர்களின் முன்னே ஒரு துரும்பை நட்டு, அதனை

வெட்டுபவனே அசுரர்களை வென்ற வீரனுவான் என்று கூறினுர். தேவர்கள் அனைவரும் எவ்வளவோ முயன்று பார்த்தும், அத் துரும்பை அசைக்கவும் இயலாதவர் ஆயினர். அந்நிலையில் அம்பிகை வெளிப்பட்டு இறைவனே இயக்கனுக வந்தருளிய செய்தியை உணர்த்தியருளினுள். தேவர்கள் தம் தவறு உணர்ந்து இங்கு இறைவனை வழிபட்டனர். அமரர் (தேவர்கள்) வழிபட்டதனுல் இதற்கு அமரேசுவரம் எனப் பெயர் அமைந்தது. முப்பத்து முக்கோடி தேவர்கள் வழிபட்ட ஈசுவரர் ஆதலின், இவருக்குத் திரிதச ஈசுவரர் என்றும் பெயர் வழங்கும். (திரிதசம்—முப்பத்துமூன்று).

**திருக்கச்சிமேற்றளி :**

இது காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியாகிய பிள்ளையார் பாளையத்தின் நடுவில் இருக்கின்றது. திருமால் தளி என்பது, திருமேற்றளி என வழங்குகின்றது. திருமால் ஒரு காலத்தில் சிவசாரூபம் பெற விரும்பித் தவம் புரிந்தனர். அப்போது அவருக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு 'வைவசுவத மனுவந்தரத்தில், இருபத்தெட்டாம் கலியுகத்தில், சீர்காழியில் திருஞானசம்பந்தன் தோன்றுவான். அவன் காஞ்சிக்கு வந்து எம்மைப் புகழ்ந்து போற்றித் திருப்பதிகம் பாடுவான். அதனைக் கேட்பதனுல் நுமக்குச் சிவசாரூபம் எய்தும்'' என்று அருள் செய்தார். அங்ஙனமே திருமால் சிவசாரூபம் பெற்று மகிழ்ந்த தலம் இது. அப்பர், சுந்தரர்தேவாரப் பதிகம் பெற்ற சிறப்புடையது.

**அனேகதங்காவதம் :**

இது பெரிய காஞ்சிபுரம் புத்தேரித் தெருவின் மேற்குக் கோடியில், கைலாசநாதர் கோயிலுக்குப் போகும் வழியில், அதற்குத் தென்கிழக்கே காற்கல் தொலைவில் உள்ளது. அனேகதம் என்பது யானை. யானை முகத்தை யுடைய விநாயகப் பெருமான், அனேகதபேச்சுரன் எனத் தமது பெயரினுல், இவ்விடத்தில் இலிங்கம் நிறுவி வழிபட்டு அருள் பெற்றுர். இறைவனின் அருளால் இரணியபுரம் என்னும் இடத்தில் இருந்த அசுரர்களைக் கொன்று, அவர்கள்பால் இருந்த ஆற்றலாகிய வல்லபை என்னும் சக்தியை மணந்தார். திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய திருப்பதிகம் பெற்ற அனேகதங்காவதம் என ஒரு தலம் வடநாட்டில் இருத்தலால், வேறுபாடு அறிவித்தற்கு இதனைக் கச்சிஅனேகதங்காவதம் என வழங்குவர். இத்தலத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகம் ஒன்றுண்டு. இக்கோயிலிலேயே இசை உலகில் அண்மைக் காலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கியிருந்த நாயனுப்பிள்ளை என்னும் காஞ்சிபுரம் சுப்பிரமணியபிள்ளை அவர்கள், நாள்தோறும் இறைவனை வழிபட்டுத் தங்கியிருந்து இசைப் பயிற்சி செய்து அதன்கண் பெரும் கலைத்திறன் எய்தப்பெற்றுர் என்பர். ''பீடுபெறப் பெரியோரது இடம், கலிக்கச்சி அனேகதம் காப்பான் இடம்'' எனவரும் தேவாரத் திருமொழியை, இந்நிகழ்ச்சி மெய்ப்பித்ததாகப் பெரியோர்கள் கூறுவர்.

**கயிலாசநாதர் கோயில் :**

இது காஞ்சிபுரத்திலுள்ள கோயில்களிலேயே அனைவராலும் அறியப்பெற்ற, புகழ் மிக்க சிறந்த கோயிலாகும். இஃது அனேகதங்காவதத்திற்கு மேற்கில் காற்கல் தொலைவில் உள்ளது. திரிபுராசுரர்களை அழித்தற் பொருட்டுத் திருமால் தமது கூறுாக ஆதிபுத்தன் என்னும் ஒருவனைப் படைத்து, அவனை நாரத முனிவருடன் அனுப்பி, ''நீவிர் இருவரும் சென்று திரிபுர அசுரர்களின் சிவபக்தியைச் சிதைத்தால், அவர்கள் தமது தவமும் வலிமையும் குன்றுவர். அவர்களைச் சிவபெருமான் அழிப்பர்'' எனக் கூறி அனுப்பினர். அவ்வாறே அவ்விருவரும் செய்ததினுல் திரிபுராசுரர்கள், சிவபெருமானுல் சிரித்து எரிக்கப் பெற்றனர். சிவபக்தர்களாக இருந்த திரிபுராசுரர்களைக் கெடுத்து அழியச் செய்த பாவம், நாரத முனிவரையும் ஆதிபுத்தனையும் பற்றியது. அவர்கள் காஞ்சியை அடைய, இரும்பு மலைபோல் இருந்த தமது பாவம், பருத்தி மலைபோல் மெலிவடைந்தது கண்டு, அக்காஞ்சி நகரின் ஒரு பகுதிக்குப் 'பருத்திக்குன்றம்' எனப் பெயரிட்டு, அங்கு இருந்து கொண்டு, அதற்கு வடகிழக்கில் சிற்பநலம் அமைந்த இக்கோயிலை அமைத்து வழிபட்டுத் தவம் புரிந்தனர். சிவபெருமான் வெளிப்பட்டு, ''எம் அடியவர்களைப் பொய்ந்நூல் போதித்தாயினும், பொருளாசை காட்டியாயினும் மயக்குகின்றவர்கள், நரகில் வீழ்ந்து வருந்துவர். கற்ப கோடி காலத்தும் நீங்காத பாவத்தை அடைவர். நீவிர் அத்தகைய பாவம் புரிந்துள்ளீர்கள். ஆதலின் இத்தலத்தில் வலஞ் செய்யப் புகும் வாயிலையும், வெளிவரும் வாயிலையும் நாம் ஒரு சுருங்கையாகச் செய்வோம். அதிற் புகுந்து நீவிர் என்றும் எம்மை வலம் செய்து கொண்டு இங்கு வழிபட்டு வருவீர்களாயின் இறுதியில் நுமக்கு முத்தியளிப்போம்'' என்று கூறி அருள்புரிந்தனர். அதனுல் நாரத முனிவரும் ஆதிபுத்தரும் இங்கு வழிபட்டனர் என்பது வரலாறு.

இது காஞ்சியில் உள்ள வரலாற்றுப் புகழ் மிக்க, சிற்பத்திறன் செறிந்த பெருங் கோயிலாகும். இராஜசிம்மன் (கி.பி. 680—705) என்னும் பல்லவ அரசன் கட்டுவித்தது. திருநின்றவூர்ப் பூசலார் நாயனுருக்கு அருள் செய்ய, இறைவன் அரசனின் கனவில் தோன்றிப் பிறகு தள்ளி வைத்துக் கொள்ளுமாறு கூறியது, இக்கோயிற் கும்பாபிஷேகத்தையேயாகும். கயிலாசநாதர்கோயில் ''திருக்கயிலையின்அமைப்பையும் அளவையும் அருளால் அறிந்து, அதற்கு ஏற்பக் கட்டப்பட்டதேயாகும்'' என்று அருட்டிரு விபுலாநந்த அடிகளார் விளக்கியுள்ளார். சிற்பக் கலைத்திறனுக்கே ஒரு பெரும் நிலைக்களமாக, இக்கோயில் விளங்குதலை ஆராய்ந்து வியந்து அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். பல்லவர் மரபைப் பழிவாங்க உறுதிபூண்டு வெற்றி கொண்ட இரண்டாம் விக்கிரமாதித்தன் (கி.பி. 733--746) என்னும் சாளுக்கிய மன்னன், இக்கோயிலைக் கண்டு மிகப் பெரிதும் வியந்து, இதனை அழிக்கச் சிறிதும் மனம் வராமல், ஏராளமான நன்கொடைகள்வழங்கிப் போற்றி மகிழ்ந்து சென்றுன் என வரலாறு

கூறுகின்றது. இதனால் இக்கோயிலின் சிற்பக் கலைச் சிறப்பை யாவரும் உணரலாம்.

கயிலாசநாதர் கோயிலில் நிறையக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்ட பல்லவர் சோழர் கல்வெட்டுகளாக இருக்கின்றன. அவற்றுள் இக்கோயிலைக் கட்டிய இராச சிம்மன் (680—705) கல்வெட்டுகளும், அவன் மகனான மூன்றாம் மகேந்திரன், அவன் மனைவி ரங்கபதாகை முதலியோர் கல்வெட்டுகளும் உள்ளன. பல்லவரை வென்று தொண்டை நாட்டை ஆண்ட முதற் பராந்தகன், இராசராசன் (985—1014), இராசேந்திரன் (1012—1044), முதற் குலோத்துங்கன் (1070—1120) ஆகியவரின் கல்வெட்டுகள் பலவாகக் காண்கின்றன. சோழர் காலத்தில் இக்கோயில், மாட வீதிகள், வெளிச் சுற்று, மடவளாகம், மாட வீதி, மடங்கள் முதலியவற்றையும், அளவிடற்கரிய செல்வத்தையும் பெற்றிருந்தது என்று இக்கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

**திருஅட்டபுயகரம் :**

இது செங்கற்பட்டு அரக்கோணம் கிளை இருப்புப் பாதையில், காஞ்சிபுரம் நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் ஆடிசன்பேட்டைத் தேரடிக்கு அருகில் உள்ளது. ஆதிகேசவப் பெருமாள், மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், அலர்மேல் மங்கைத் தாயார், ககன ஆகிருதி விமானம், கஜேந்திர புஷ்கரிணி, சரபன் என்னும் அசுரனுடன் போர் செய்யப் பெருமாள் எட்டுப் புயங்களைத் தரித்த கோலம், கஜேந்திரனுக்குப் பிரத்தியட்சம். பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். அஷ்டபுஜம், அஷ்டபுயங்கம் எனவும் வழங்கும். 'அஷ்டபுஜர் கிருகம்' என்பது அட்டபுயகரம் என மருவி வழங்குகின்றது. கிருகம் என்பதன் சிதைவே, கரம் என அமைந்தது.

**திருத்தண்கா :**

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2 கல்தொலைவில் உள்ளது. விளக்கொளிப் பெருமாள் கோயில் என வழங்கும். சிலர் விளக்கடிக் கோயில் எனத் தவறாக வழங்குவர். விளக்கொளிப் பெருமாள், தீபப் பிரகாசன், திவ்வியப் பிரகாசன். மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், மரகதவல்லித் தாயார், ஸ்ரீகர விமானம், சரசுவதிதீர்த்தம், சரசுவதிதேவிக்குப் பிரத்தியட்சம், வேதாந்த தேசிகர் என்னும் வைணவ சமயச் சான்றோர் திருவவதாரம் செய்த தலம்.

**திருப்பரமேச்சுவர விண்ணகரம் :**

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. வைகுண்டப்பெருமாள் கோயில் என வழங்கும். பரமேச்வரவர்மன் என்னும் பல்லவ மன்னன் அமைத்த விஷ்ணு கோயில் ஆதலின், இதற்குப் பரமேச்சுவர விண்ணகரம் என்று பெயராயிற்று. விண்ணகரம் என்பது விஷ்ணு கிருகம் என்பதன் மரூஉ ஆகும். இக்கோயிலில் பல்லவ வரலாற்றுச்சிற்பங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. பரமபதநாதன்—மேற்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். வைகுந்தவல்லித் தாயார். குமுதவிமானம். கயிரவதீர்த்தம். மேல் தளத்தில் நின்ற திருக்கோல உருவமும் உள்ளது. சனகாதிகளுடைய சாபம் அடைந்த வைகுந்த உலகத்தின் துவாரபாலகர்களாகிய சயர், விசயர் என்னும் இருவரும், பல்லவன் வில்லவன் என்னும் அரச குமாரர்களாய் உதித்து அரசாட்சி செய்து வருங்கால், இங்கு மகாவிஷ்ணுவைப் பூசித்து அருள் பெற்றனர் என்பது வரலாறு. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

> ''பல்லவன் வில்லவன் என்று உலகிற்
> பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற்
> பல்லவன் மல்லையர் கோன் பணிந்த
> பரமேச்சுர விண்ணகரம் அதுவே''

என்பது பெரிய திருமொழிப் பாடற் பகுதி.

**திருவேளுக்கை :**

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2 கல் தொலைவில் உள்ளது. ''வேள் இருக்கை'' என்னும் இரு சொற்கள் வேளுக்கை என மருவியது. வேள்—விருப்பம். இறைவன் விரும்பி எழுந்தருளி இருக்கும் இடம் என்பது பொருள். முகுந்தநாயகர் கோயில் என வழங்கும். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். கனக விமானம்—கனக தீர்த்தம். முசுகுந்த வரனுக்கும் பிருகுமுனிவருக்கும் பிரத்தியட்சம். பேயாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**திருப்பாடகம் :**

இது காஞ்சிபுரத்திலுள்ளது. பாண்டவர் தூதர் கோயில் என வழங்கும். கண்ணபிரான் பாண்டவர்கள் பொருட்டுத் துரியோதனனிடம் அத்தினபுரிக்குத் தூது சென்ற போது, அவன் வஞ்சகமாக அமைத்த ஆசனத்தில் இருந்து விசுவரூபம் எடுத்த நிலையில், மிகவும் பெருமை தோன்ற இருக்கும் தலம். பாடு—பெருமை. பாடு—அகம்—பாடகம். பாண்டவ தூதர். கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருக்கும் கோலம். உருக்குமிணி, சத்தியபாமை, பத்திர விமானம். மச்ச தீர்த்தம். ஜனமேஜய மகாராஜனுக்கும், அரீத மகாமுனிக்கும் பிரத்தியட்சம். பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை ஆழ்வார் மங்களாசாசனம்.

**திருநீரகம் :**

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. ஜகதீசப் பெருமாள் சந்நிதியென வழங்கும். ஜகதீசன்: கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். நிலமங்கைவல்லி நாச்சியார் ; ஜகதீச விமானம். அக்குரூர தீர்த்தம். அக்குரூரருக்குப் பிரத்தியட்சம். இது உலகளந்த பெருமாள் கோயிலின் உள்ளேயுள்ள திவ்விய தேசங்களுள் ஒன்று. என்றும் பதினாறாக நீண்ட ஆயுள்பெற்ற

மார்க்கண்டேயர் பிரளயக் காட்சியைக் காண வேண்டித் தவம் புரிந்து அவ்வாறு அருள் பெற்றது.

**நிலாத் திங்கள் துண்டம் :**

இது காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் உள்ளது. ''நிலாத் திங்கள் துண்டத் தான்'' எனத் திருமங்கையாழ்வாரால் (2059) மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது. மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். நேரொருவர் இல்லாத் தாயார், புருஷ சூக்த விமானம். சந்திர புஷ்கரிணி. சிவனுக்குப் பிரத்தியட்சம்.

**திருவூரகம் :**

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. உலகளந்த பெருமாள் கோயில் என வழங்கும். மாவலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மூவடி நிலம் கேட்டுத் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து மூவுல கங்களையும் அளந்த நிலை. உலகளந்தபெருமாள்—மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக் கோலம். அமுதவல்லி நாச்சியார். சாரஸ்ரீகர விமானம். சேட தீர்த்தம். உரகம் என்னும் ஆதிசேடனுக்குப் பிரத்தியட்சம். உரகம் என்னும் சொல் நீண்டு, ஊரகம் என்று மரு வியது. ஊரகம் என்னும் இந்த ஒரு திவ்விய தேசத்திலேயே திருநீரகம், திருக்காரகம், திருக் கார்வானம் என்னும் வேறு மூன்று திவ்விய தேசங்களும் கூட, இருக்கின்றன.

**திருவெஃகா :**

இது சிறிய காஞ்சிபுரத்தில் உள்ளது. யதோக்தகாரி சந்நிதி என வழங்கும். இத் தலத்து எம்பெருமானுக்கு வேகாஸேது என்று வடமொழியில் பெயர். அதன் ஒரு பகுதியாக ''வேகா'' என்பது ''வெஃகா'' என்று ஆயிற்று. பெருமாள் சரசுவதி தேவிக்குத் தாம் சொல்லிய படி அருள் செய்தமையினாலும், திருமழிசை யாழ்வாரின் சீடராகிய கணிகண்ணர் என்பவர் ''பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்' என்றும், 'பைந்நாகப் பாய் படுத்துக்கொள்' என்றும் சொல்லியவண்ணம் கேட்டு நடந்து அருள் புரிந் தமையினாலும், இவருக்குச் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' எனப் பெயர் ஏற்பட்டது என்பர். பொய்கையாழ்வார் அவதரித்த தலம். பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், மங்களாசாசனம்.

**திருக்காரகம் :**

இது, காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் உள்ள திவ்விய தேசம், கருணைகரன், தெற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், பத்மாமணி நாச்சியார். வாமன விமானம். அக்ராய தீர்த்தம். காரக முனிவருக்குப் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**திருக்கார்வானம் :**

இதுவும் காஞ்சிபுரம் உலகளந்தபெருமாள் கோயிலுக்குள்ளே உள்ளது. நவநீதசோரன்—கமலவல்லி நாச்சியார். மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், புஷ்கல விமானம். கௌரி தடாகம், பார்வதிக்கும் மகாபலி, அசுவத்தாமன் ஆகியோருக்கும், பிரத் தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களாசாச னம்.

**திருக்கள்வனூர் :**

இது காஞ்சிபுரம் காமாட்சியம்மை கோயி லுக்குள் இருக்கின்றது. ஆதிவராகப் பெருமாள். மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக் கோலம். அபயநாயகி நாச்சியார், வாமன விமானம். நித்திய புஷ்கரிணி. அசுவத்த நாராயணனுக்குப் பிரத்தியட்சம். பூமியைச் சுருட்டிப் பாதாளத்துக்கு எடுத்துச் சென்ற இரணியாக்கனை வதைத்துப் பூமியை மீட்டரு ளிய நிலை. திருமங்கையாழ்வார் மங்களாசாச னம்.

**திருப்பவளவண்ணம் :**

காஞ்சிபுரத்தில் உள்ளது. பவளவண்ணப் பெருமாள்—பவளவல்லி நாச்சியார், பிரவாள விமானம்—சக்கர தீர்த்தம்—மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்—அசுவினி தேவர்களுக்குப் பிரத்தியட்சம். திருமங்கை யாழ்வார் மங்களா சாசனம். இக்கோயிலுக்கு அருகில் பச்சைவண்ணர் கோயில் இருக்கின்றது.

—ஆசிரியர்.

# இளங்கோவடிகள்

''செந்தமிழ்ச் செல்வர்''

திரு. கி. வா. ஜகந்நாதன், M.A.

வஞ்சிமா நகரத்தில் அரண்மனையில் அரச வைக் கூடத்தில் சேர அரசன் நெடுஞ்சேரலாதன் அமர்ந்திருந்தான். அவனுடைய இருமருங்கும் அவனுடைய புதல்வர் இருவரும் அமர்ந்திருந்த னர். இளவரசுப் பட்டம் சூடிய செங்குட்டுவன் வலப்பக்கத்திலும், பெருநம்பிப் பட்டம் சூடிய இளங்கோ இடப்பக்கத்திலும், வீற்றிருந்தனர். அவையில் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் பெருங்குடி மக்களும் இருந்தார்கள்.

அப்போது ஒரு நிமித்திகன் வந்தான்; அங்க அடையாளங்களைக் கொண்டு வருங் காலத்தைச் சொல்லும் ஆற்றல் இருப்பதாகச் சொல்லிக் கொண்டான்; பிறகு இளங்கோவைப் பார்த்து ''இவருடைய உறுப்பு நலன்களைக் கண்டால் இவரே மன்னர் பிரானுக்குப் பிறகு அரியணை ஏறும் பேறு பெறுவார் என்று தோன்று கிறது'' என்றான். அதைக்கேட்ட யாவரும் திடுக்கிட்டனர். மூத்தவன் இருக்க இளையவன் அரசனாவது முறையன்றே! அரசனும் சற்றே திகைப்படைந்தான். செங்குட்டுவனுக்கோ கண்கள் சிவந்தன. அவன் தன் தந்தையை நோக்கினான். 'என்ன இது? நீங்கள் யாருக்கு அரசுரிமை வழங்கப் போகிறீர்கள்?' என்று கேட்பது போல இருந்தது அந்தப் பார்வை.

சிறிது நேரம் யாவரும் ஒன்றும் பேசத் தெரியாமல் குழப்பத்தில் ஆழ்ந்தனர். அப் பொழுது கணீர் என்று ஒரு குரல் எழுந்தது. இளங்கோவே எழுந்து நின்று, ''மன்னர் பெரு மானே'' என்று அழைத்த குரல் அது. அரசன் அவரை நோக்கினான். செங்குட்டுவன் பார்வை யும் அவர்மேல் பதிந்தது. மற்றவர்களும் அவரையே பார்த்தார்கள்.

''இதோ, இந்தச் சோதிடர் சொற்களைப் பொய்யாக்கி விடுகிறேன். எனக்கா இந்த அர சாட்சி கிடைக்கும் என்று சொன்னார். நான் இந்தக் கணத்தில் துறவு பூண்பதாகச் சபதம் செய்கிறேன். என் தமையனார் நெஞ்சில் ஐயம் இருந்தால் இப்போதே அது ஒழியட்டும். நான் இன்றுமுதல் துறவி. எனக்கும் இந்த அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை''.

''என்ன இது! என்ன இது!'' என்று யாவரும் திணறிக்கொண்டு கேட்டார்கள். சோதிடன் ஒன்றும் தெரியாமல் விழித்தான்.

இளங்கோ, மேலும் பேசலானார். ''இந்தச் சேரநாட்டரசு எனக்குப் பெரிதன்று. முடிவே இல்லாத பேரின்ப அரசு எனக்குக் கிடைக்கும் படி நான் விரதம் இருந்து நோற்பேன்'' என் றார். அரசர் ''என்ன காரியம் செய்தாய்?'' என்று குழம்பிக் கேட்டார். செங்குட்டுவன் இன்னது சொல்வது என்று தெரியாமல் தடு மாறினான்.

மறுபடியும் இளங்கோ பேசினார். ''நான் செய்வது பிழையாக இருந்தால் பொறுத்தருள வேண்டும். நான் துறவடைந்து ஞானம் பெற் றால் இந்தக் குலத்துக்கே பெருமை. இந்த உறுதிமொழியை மாற்றுவதென்பது இனி இல்லை. இதோ, இப்போதே நான் இந்த அரண் மனையை விட்டுப் புறப்படுகிறேன். இனி எனக்கு இருப்பிடம் மடமோ, கோயிலோவாக இருக் கும்'' என்று சொல்லிப் புறப்பட்டார்.

அன்றுமுதல் அவர் இளங்கோவடிகள் ஆனார். அவருடைய இயற்பெயர் இன்ன தென்று தெரியவில்லை. அரசிளங்குமரனும் வருங்கால மன்னனுமாகிய செங்குட்டுவனுக்குத் தம்பியாதலின் யாவரும் அவரை இளங்கோ என்றே அழைத்து வந்தனர். துறவு பூண்ட பிறகு, இளங்கோ அடிகள் என்ற பெயர் நிலைத்துவிட்டது. வஞ்சிமா நகரத்தின் கிழக்கு வாயிலுக்கு அருகே இருந்த கோட்டத்தில் அவர் தங்கி வாழலானார்.

'குணவாயிற் கோட்டத்து அரசு துறந் திருந்த குடக்கோச்சேரல் இளங்கோ அடிகள்' என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இளங்கோ துறவை ஏற்றுக்கொள்வதற்கு முன் தமிழ்நாடு முழுவதும் சுற்றி, அங்கங்கே உள்ள காட்சிகளையும் மக்களையும் கண்டு வந் தார்; பூம்புகார் நகரத்தையும் மதுரை மாநக ரத்தையும் நன்றாகப் பார்த்தார்; அந்த நகரங் களுக்குச் செல்லும் வழிகளையும் அங்கங்கே வாழும் மக்களுடைய இயல்புகளையும் தெரிந்து கொண்டார்; மதுரை மாநகரத்தில் இருந்த சங்கப்புலவர்களைக் கண்டு அளவளாவினார்; கூல வாணிகன் சீத்தலைச்சாத்தனாரிடம் நெருங்கிப் பழகி அவருடன் நட்புப் பூண்டார்.

இளங்கோவடிகள் துறவு பூண்ட சில காலத் திற்குள் மன்னன் நெடுஞ்சேரலாதன் புகழுடம்பு எய்தினான். அப்பால் செங்குட்டுவனே அரசு கட்டில் ஏறினான். மதுரையிலிருந்து சீத்தலைச் சாத்தனார் அவ்வப்போது வஞ்சிமாநகர் வந்து செல்வார்; செங்குட்டுவனைக் கண்டு இளங்கோ வடிகளோடு சிலநாள் தங்கித் தமிழ் இலக்கியங் களைப் பற்றி உரையாடிவிட்டுச் செல்வார்.

ஒருமுறை சாத்தனார் வந்திருந்தபோது செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றான்.

அவன் சாத்தனுரையும் உடன் அழைத்துக் கொண்டு சென்ருன். மலேயைச் சார்ந்த காடு களில் குறிஞ்சி நில மக்கள் பல கையுறைகளோடு மன்னனே வந்து கண்டார்கள். அவர்கள் ஓர் அற்புதக் காட்சியைப் பற்றிச் சொன்னுர்கள். கண்ணகி ஒரு நகிலே இழந்த வடிவோடு செங் குன்றத்தில் வந்து நின்றதையும், பிறகு அவ ளுடைய கணவனுடன் தேவர் வந்து அவளே விமானத்தில் அழைத்துச் சென்றதையும் கூறி ஞர்கள். அப்போது சேரனுடைய பட்டத்தரசி யும் உடன் இருந்தாள்.

அருகில் இருந்த சாத்தனுர் கண்ணகியின் வரலாற்றையும் கோவலனுக்கு நேர்ந்த துன் பத்தையும் எடுத்துச் சொன்னுர். கேட்ட செங்குட்டுவன் கண்ணகிக்கு வஞ்சிமாநகரில் ஒரு கோயில் கட்டுவதாகத் தீர்மானித்தான்; கண்ணகியின் திருவுருவத்தை வடிக்க இமயத்தி லிருந்து கல் எடுத்து வரவேண்டும் என்றும் உறுதி பூண்டான்.

யாவரும் வஞ்சிமாநகர் வந்தனர். சாத்த ஞர் இளங்கோவடிகளேக் காண்பதற்கு வந்தார். அங்கே குன்றில் வாழும் மக்கள் சிலர் தாம் கண்ட அற்புதக் காட்சியை இளங்கோவடிகளி டம் சொல்லிக் கொண்டிருந்தனர்; ''திருச் செங்குன்றத்தில் மஞ்சள் பூக்கள் பூத்துக் குலுங் கும் வேங்கைமரம் ஒன்றுஉண்டு. அதன்அடி யில் ஒரு பத்தினி நின்றிருந்தாள்; தன் நகில் ஒன்றை இழந்த கோலத்தோடு நின்ருள். அப் போது விமானத்தில் இந்திரன் அவளுடைய கணவனே அமரலோகத்திலிருந்து அழைத்து வந்து, அவளுக்குக் காட்டி, அவளேயும் ஏற்றிக் கொண்டு வானுலகு சென்ருன். இதை எங்கள் கண்களாலே கண்டோம். மிக மிக வியப்பான காட்சி இது. எங்கும் கண்டதும் இல்லே; கேட்ட தும் இல்லே. இதைத் தவமுனிவராகிய தங்க ளிடம் சொல்லிச் செல்லலாம் என்று வந்தோம் என்ருர்கள்.

சாத்தனுர், செங்குட்டுவன் மலேவளம் காணச் சென்றிருந்தபோது அங்கும் குறவர்கள் வந்து இச்செய்தியைக் கூறினர்கள் என்பதை யும், கண்ணகியின் வரலாற்றையும் விரித்துரைத் தார். கண்ணகி, கோவலனுடைய முன்பிறப்புக் கதையையும் எடுத்து இயம்பினர்.

இவற்றையெல்லாம் கேட்ட இளங்கோ வடிகள், நெடுநேரம் சிந்தனேயில் ஆழ்ந்திருந் தார். அவர்தம் அகக்கண்ணில் இந்த வர லாற்றுக் காட்சிகளேயெல்லாம் ஒருமுறை வரி சையாகக் கொண்டுவந்து கண்டார்போல் இருந் தது. பின்பு மெல்லச் சாத்தனுரைப் பார்த்து: ''பாவம்! பாண்டிய மன்னனுடைய முடிவு வருந்தத்தக்கது. அவன் செய்த பிழைக்கு வேறு யாரும் தண்டனே கொடுக்கவில்லே. தான் செய்தது அறமன்று என்பதை உணர்ந்தவுடன் அவன் உயிர் பிரிந்தது. அந்த அறமே அவ னுக்குக் கூற்ருக நின்று ஒறுத்துவிட்டது. அரசிய லில் ஈடுபட்டவர்கள் உணரவேண்டிய உண்மை இது'' என்ருர்.

சாத்தனுர் அப்போது, செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுப்பதாக எண்ணி யிருப்பதைச் சொன்னுர்.

''அப்படியா? அது மிகவும் போற்றத்தக்க செயல். இனி நாள் ஆக ஆக, அந்த வீரபத் தினியை யாவரும் போற்றுவார்கள். புகழ் மிக்க பத்தினியை உயர்ந்தவர்கள் ஏத்திப் பாராட்டுவார்கள் என்பது ஒரு பெரிய உண்மை. க்ண்ணகி, கோவலனுடைய முற்பிறவிக் கதை யைச் சொன்னீர்கள். அதிலிருந்து எல்லாம் வினேயின் விளேவு என்பது தெளிவாகத் தெரி கிறது. ஆகவே, கண்ணகியின் வரலாற்றினுல் மூன்று உண்மைகள் தெள்ளத் தெளிவாகப் புலனுகின்றன. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்ருவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினே உருத்து வந் தூட்டும் என்பதும் அசைக்க முடியாத உண மைகள்''.

சாத்தனுர் அதை ஆமோதித்தார். பின் னும் இளங்கோவடிகள் கூறலானுர். ''இந்த மூன்று கருத்துக்களே அடிப்படையாகக்கொண்டு இந்தக் கதையைக் காப்பியமாக இயற்றலாம். எல்லாவற்றிற்கும் சிலம்பு காரணமாக இருப்ப தனுல் சிலப்பதிகாரம் என்ற பெயரை வைக்க லாம் என்று தோன்றுகிறது. உங்கள் கருத்து என்ன?''

''நன்ருகச் செய்யலாம். முடியுடைவேந் தர் மூவரும் இந்தக் கதையில் வருகிருர்கள். சோழநாட்டிலும் பாண்டிநாட்டிலும் சேர நாட்டிலும் கதை நடந்திருக்கிறது. தாங்களே ஒரு காவியத்தை அருளிச் செய்யலாம்'' என்ருர் சாத்தனுர்.

சாத்தனுருக்கு அந்தக் காவியத்தைத் தாமே இயற்ற வேண்டும் என்ற அவா எழுந் தது. ஆயினும் அந்தக் கருத்தை வெளியிட விரும்பவில்லே. 'இவரையே இயற்றும்படி மரி யாதைக்குச் சொல்லலாம். இவர் சேர குலத் திற் பிறந்தவர். மற்ற மன்னர்களேப் பற்றிச் சொல்ல விரும்பமாட்டார். நம்மையே இயற் றச் சொல்லிவிடுவார்' என்று எண்ணியே அவர் அப்படிச் சொன்னுர்.

இளங்கோவடிகளோ, ''பார்க்கிறேன். நன்ருகச் சிந்தித்து இயற்றலாம் என்ற நம் பிக்கை இருக்கிறது'' என்று சொன்னுர். அது கேட்ட சாத்தனுருக்கு ஏமாற்றம் உண்டாயிற்று. ''நன்ருகச் செய்து முடியுங்கள்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்.

சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று, இமயத்தில் கல் எடுத்துக் கண்ணகியின் உரு வத்தை வடித்துக் கங்கையாற்றில் சிலகாலம் வைத்திருந்து, பிறகு வஞ்சிமாநகர் வந்த டைந்தான்; அங்கே கண்ணகிக்குக் கோயில் எடுத்துத் தான் கொண்டு வந்த படிமத்தை நிறுவிப் பூசை முதலியன நடப்பதற்கு ஆவன செய்தான். பிறநாட்டு மன்னர்களும் அந்தக் கோயிலுக்கு வந்து கண்ணகியை வணங்கி ஞர்கள்.

இளங்கோவடிகளும் கோயில் சென்று கண் ணகியை வாழ்த்தி வணங்கினர். அப்பால் அவர் சிலப்பதிகாரக் காப்பியத்தை நிறைவேற்றினுர்; சிலப்பதிகாரக்கதையைமூன்று காண்டங்களாகப்

பகுத்துக் கொண்டார்; பூம்புகாரில் கோவலன் கண்ணகியை மணம் செய்துகொண்டு வாழ்ந்ததும், பின்பு மாதவியுடன் மனம் செல்ல அவளுடன் சென்றிருந்ததும், பிறகு மனம் வேறுபட்டு அவளிடமிருந்து பிரிந்து வந்து கண்ணகியோடு புறப்பட்டு உறையூரை அடைந்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் உள்ள கதைப்பகுதிக்குப் புகார்க் காண்டம் என்று பெயர் கொடுத்தார்; கோவலன் முதலியோர் காட்டின் வழியே சென்று மதுரையை அடைந்ததும், கண்ணகியை ஆயர் சேரியிலே விட்டுவிட்டுச் சிலம்பு விற்கச் சென்றதும், கொலையுண்டதும், பிறகு கண்ணகி பாண்டியன் முன் வழக்கிட்டதும், மதுரையை எரித்துவிட்டுப் புறப்பட்டு மலைநாட்டை அடைந்ததும், வான விமானத்தில் கணவனேடு ஏறிச் சென்றதும் ஆகியவற்றைச் சொல்லும் பகுதிக்கு மதுரைக் காண்டம் என்று பெயரிட்டார். மூன்ருவது வஞ்சிக்காண்டம். அதில் கண்ணகி வான விமானத்தில் சென்றதைக் குறவர்கள் செங்குட்டுவனிடம் சொன்னது, அவன் கோயில் எடுக்கத் தீர்மானித்து இமயம் நோக்கிச் சென்றது, வடநாட்டு அரசரோடு பொருது வென்றது. இமயத்திலிருந்து கல்கொண்டுவந்து கங்கையில் நீர்ப்படை செய்தது, வஞ்சிமாநகர் வந்து பத்தினித் தெய்வத்துக்குக் கடவுள் மங்கலம் செய்து வழிபட்டது முதலிய செய்திகள் அடங்கியிருக்கின்றன.

முதலில் திங்களுக்கும் கதிரவனுக்கும் மழைக்கும் புகார் நகருக்கும் வாழ்த்துக் கூறிக் காவியத்தைத் தொடங்கினுர்; இடையிலே காடு முதலிய இடங்களிலுள்ள மக்கள் தம்தம் கடவுளரை வழிபழிவதாகச் சொல்லிப் பல துதிகளை அமைத்தார். இந்த வகையில் வேட்டுவவரி என்னும் பகுதியில் துர்க்கையின் துதியும், ஆய்ச்சியர் குரவையில் திருமாலின் தோத்திரமும், குன்றக்குரவையில் முருகனுடைய வாழ்த்தும் வருகின்றன. இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழின் கூறுபாடுகளும் இடையிடையே விரவி வருகின்றன.

இவ்வாறு சிலப்பதிகாரத்தை இளங்கோ அடிகள் நிறைவேற்றினுர். மதுரையில் இருந்த சாத்தனுர் அதற்கு முன்பே மணிமேகலையின் கதையைக் காப்பியமாகப் பாடி முடித்தார். முடித்து வஞ்சிமாநகர் வந்தார். இளங்கோவடிகளும் தாம் சிலப்பதிகாரத்தை எழுதி முடித்திருப்பதைச் சொன்னுர். வஞ்சிமாநகரில் அந்த இரண்டு நூல்களும் அரங்கேறின. சிலப்பதிகாரம் அதுமுதல் தமிழ் மக்களின் பாராட்டுக்குரியதாகி எங்கும் பரவலாயிற்று. சேரன் செங்குட்டுவன் கட்டிய கற்கோயில் இன்று இருக்குமிடம் தெரியவில்லை. ஆனுல் இளங்கோவடிகள் சமைத்த சொற்கோவில் தமிழ்நாடு முழுவதும் பரவி விளங்குவதோடு, பிற மொழிகளிலும் சென்று தமிழின் பெருமையைப் பிறரும் அறியும்படி செய்கிறது.

சிலப்பதிகாரம் ஏனைய காப்பியங்களைப் போலன்றிப் பலவகையில் பல புதுமைகளை உடையதாய்த் திகழ்கின்றது. மணிமேகலை என்னும் காப்பியம் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கையும் சொல்லாமல், வீட்டு நெறி பற்றிய செய்திகளையே தலைமையாகக் கொண்டது. சிலப்பதிகாரத்தில் அந்த நால்வகைப் பொருள்களும் உள்ளன. ஆகையால் இதைப் பெருங்காப்பியம் என்றே சொல்லலாம். தெய்வங்களையும் மன்னர்களையும் தலைவர்களாகக் கொண்ட காப்பியங்கள் பல தமிழில் உள்ளன. அவற்றில் கதாநாயகர்களும் கதாநாயகிகளும் நிகரில்லாச் சிறப்பை உடையவர்களாக விளங்குவார்கள். சிலப்பதிகாரமோ, கண்ணகி என்னும் பெண்ணையே தலைவியாகக்கொண்டு இயங்குவது. அவளைக் கதாநாயகி என்று சொன்னுல் கோவலனைக் கதாநாயகன் என்று சொல்லத்தோன்றும். ஆனுல் அவனை அப்படிச் சொல்வதைவிடக் கதாநாயகியின் கணவன் என்று சொல்வதே பொருந்தும். அரசனுடைய மனைவி அரசியாகலாம். நாட்டை ஆளும் அரசியின் கணவன் அரசனுவதில்லை. பிரிட்டிஷ் அரசியாகிய எலிஸபெத்தின் கணவரை அரசர் என்று சொல்வதில்லையே. அவ்வாறே சிலப்பதிகாரக் கதையில் கண்ணகியே தலைமைப் பாத்திரமாக இருந்து விளங்குகின்ருள். மாதவியும் கோவலனும் கண்ணகிக்குரிய தலைமையைப் பெறவில்லை. எனவே, இந்தக் காப்பியம் கதாநாயகியை மட்டும் பெற்றது என்று சொல்ல வேண்டும். இஃது ஒரு புதுமை.

இந்தக் காப்பியத்துக்குக் கண்ணகியின் பெயரையே வைத்திருக்கலாம். அப்படி வைக்காமல் சிலம்பின் பெயரை வைத்துச் சிலப்பதிகாரம் என்று வழங்குகிறது மற்ருெரு புதுமை.

தமிழ்நாட்டின் பிரிவாகிய சேர, சோழ, பாண்டிய நாட்டின் பெருமைகளை நடுநிலைமையில் நின்று இளங்கோவடிகள் எடுத்துக் காட்டுகிருர்; காவிரிப்பூம்பட்டினம், மதுரைமாநகர், வஞ்சிமாநகர் ஆகிய நகரங்களைப் பற்றிச் சிறப்பித்துப் பாராட்டுகிருர். அன்றியும், தென்னுட்டில் தோன்றிய கண்ணகிக்கு வடிவம் சமைக்கப் பாரத நாட்டின் எல்லையாகிய இமயத்திலிருந்து சிலை வருகிறது.

காவிரித் துறையில் பயின்ற கண்ணகி வையைத் துறைக்கு வந்து, பின்பு சேரநாட்டுப் பேராற்றங்கரை வழியே சென்று வானத்தை அடைகிருள். அவளுடைய படிமம் கங்கை நீரில் படிந்து வஞ்சிமா நகருக்கு வருகிறது. இந்த வகையில் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் கண்ணகியின் வழிபாடு காட்டுகிறது. பிறநாட்டு மன்னர்களும் அவளை வணங்குகிருர்கள். இந்த அமைப்பும் ஒரு புதுமை.

கதையைச் சொல்கின்ற பல பகுதிகள் இயல் இன்பத்தோடு சிறந்து நிற்ப, இடையிடையே வரிப்பாட்டுக்கள் முதலிய இசைத்தமிழ் விரவி வருகிறது. பாத்திரங்களின் கூற்ருக உள்ள சில பகுதிகள், நாடகத் தமிழின் அமைப்போடு விளங்குகின்றன. இவ்வாறு மூன்று தமிழும் பொருந்தி விளங்குவது இந்தக் காப்பியம். மூன்று காண்டம், மூன்று நாடுகளின் பெருமை, மூன்று தமிழின் அமைப்பு ஆகியவற்ருேடு இயங்கும் இந்தக் காப்பியம், மூன்று பெரிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு நிற்கிறது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்ருவதும், உரைசால்பத்தினிக்கு

உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும் அந்த மூன்று உண்மைகள். மிகப் பழைய உரைநடைக்கு உதாரணமாக உரைபெறு கட்டுரை என்ற பகுதி, நூலுக்கு முன்பு அமைந்திருக்கிறது.

புகார்க் காண்டத்தில் கண்ணகியையும் மாதவியையும் கோவலனையும் காண்கிறோம். இந்தக் காண்டத்தில் மாதவியைப் பற்றிய செய்திகளே மிகுதியாக வருகின்றன. கண்ணகி, தன்னுடைய கணவன் தன்னைப் புறக்கணித்தாலும் அதைப் பாராட்டாமல் வீட்டில் இருந்து கற்புநெறியில் சிறந்து நிற்கிறாள். அவளை அடங்கின பத்தினியாக நாம் பார்க்கிறோம். மதுரைக் காண்டத்தில் கண்ணகி, கோவலன் ஆகிய இருவரும் சேர்ந்து கதையை நடத்துகிறார்கள். அதன் இறுதியில் கோவலன் கொலையுண்ண, கண்ணகி பாண்டியனுக்கு முன் வழக்குரைத்துக் கற்புக் கனலால் மதுரையை எரிக்கிறாள். அங்கே அவளை வீர பத்தினியாகக் காண்கிறோம். மாதவியினிடமிருந்து பிரிந்து வந்த கோவலன் இனி நம்முடன் வாழ்வான். இல்லறம் நடத்தலாம் என்று கண்ணகி அவனுடன் மதுரை வந்தாள். பலகாலம் பிரிந்து வாழ்ந்தும் நல்லகாலம் வரும் என்ற நம்பிக்கையோடு இருந்தவளுக்கு அந்தக் காலம் வந்துவிட்டதாகவே தோன்றியது. கோவலனும் அவளிடம் மிகுந்த அன்பு பாராட்டி அவள் சமைத்த உணவை உண்டு மகிழ்ந்தான். இனிமேல் நல்வாழ்வு வாழலாம் என்ற உறுதி உண்டாயிற்று. அந்தச் சமயத்தில் விதி விளையாடிவிட்டது. கோவலன் கொலையுண்டான். உறுதியான நம்பிக்கை சிதைந்தவுடன், அவள் உள்ளத்தின் உள்ளே கனன்று கொண்டிருந்த தீ எழுந்து வெடித்தது. நிலத்துக்குள் பலகாலம் குழம்பும் குழப்பம் ஒருநாள் பூகம்பமாக விளைவதைப் போல இது விளைந்தது. அப்போது கண்ணகி வீரபத்தினியாகி மதுரையை எரித்தாள்.

வஞ்சிக்காண்டம் கதையின் போக்கை மாற்றிக் காப்பியத்தின் சுவையைக் கெடுக்கிறது என்று சிலர் கூறுவதுண்டு. இளங்கோவடிகள்: ‘உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்’ ஆகிய உண்மையை அந்தக் காண்டத்தின் மூலம் விளக்குகிறார். புகார்க் காண்டத்தில் அடங்கிய பத்தினியாக இருந்த கண்ணகி, மதுரைக் காண்டத்தில் வீரபத்தினியாகக் கனன்று எழுந்தாள். அவளே வஞ்சிக்காண்டத்தில் பத்தினித் தெய்வமாகி விடுகிறாள். வீரம் மாறி ஈரம் நிறைகிறது. செங்குட்டுவன் எடுத்த கோவிலில் அவள் தெய்வமாகப் புகுந்தது மட்டுமன்று. அவளுடைய பண்பு உயர்ந்து, தனக்குத் தீங்கு செய்த பாண்டியனைப் பொறுக்கிறாள். பொறுப்பது மாத்திரம் அன்று, அவனை உயர்த்தியே விடுகிறாள். ‘தென்னவன் தீதிலன், தேவர்கோன் தன்கோயில், நல்விருந்தாயினான். நான் அவன் தன் மகள்’ என்று சொல்கிறாள். அவனையே முதலில் வஞ்சி மகளிர் பாடுகிறார்ககள். இங்கே கண்ணகி அருள் நிரம்பியவளாய்த் தெய்வமே ஆகிவிடுகிறாள். இதனை இளங்கோவடிகள் ஆயத்தார் சொல்லும் சொல்லில் விளக்குகிறார்:

‘‘வானவன் எம்கோ மகளென்றாள்; வையையார்
கோனவன் தான்பெற்ற கொடியென்றாள்-வானவனை
வாழ்த்துவோம் நாமாக, வையையார் கோமானை
வாழ்த்துவாள் தேவ மகள்’’

வையையார் கோமானாகிய பாண்டியனை வாழ்த்தினமையால் அவள் தேவமகளாகிவிட்டாள். இவ்வாறு வஞ்சிக்காண்டத்தில் கண்ணகி முழுமை பெற்ற பத்தினித் தெய்வம் ஆகியமையால், இந்தக் காண்டம் இளங்கோவடிகளுடைய கட்டுக்கோப்புக்கு இன்றியமையாததாக இருக்கிறது.

சிலப்பதிகாரத்தில் வரும் அழகிய வருணனைகளும், உரையாடலின் சிறப்பும், படிப்போர் உள்ளத்தில் பரிவை உண்டாக்கும் உத்திகளும், பிற காப்பியப் பண்புகளும் நிரம்பியுள்ளன. அவற்றை எல்லாம் விரிவாகக் கூறப்புகின் இந்தக் கட்டுரை மிக விரியுமாதலின் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

தெய்வம் மனிதனாக வந்து அருள்பாலிக்கும் கதைகளுக்கு நடுவிலே, மனிதப் பிறவி எடுத்த மகள் தெய்வமாகி உயர்ந்து அருள் பாலித்ததைச் சொல்லும் காப்பியமாகிய சிலப்பதிகாரம் தனித்தன்மை பெற்று ஒளிர்கிறது.

# திருக்கழுக்குன்றத்தில் நால்வர் கோயில்


அருட்டிரு அழகர் அடிகளார்,

திருக்குறள் பீடம், குருகுலம், மதுராந்தகம்.


**மலைக்கோயில் :**

தொண்டை நாட்டில் திருக்கழுக்குன்றம் ஒரு மலைத்தலம். நான்கு பிரிவுகளாக மலைகள் ஒரு தொடராய் உள்ளன. அதனால் இதனை 'வேதமலை' என்று சொல்லுவார்கள். வேதங்கள் நான்கு என்பது வெளிப்படை. வேதத்தின் உச்சியில் இறைவன் அறியப்படுவதனால், வேத மலைப் பெருமானும் மலைஉச்சியில் விளங்குகிறான்.

மலையில் விளங்கும் இறைவனது கோயில், அந்த இடத்தை நேரில் பார்ப்பவர்க்கு, முகடு சம நிலமாய் இல்லாமை தெரியும். பாறைகளின்மேல் கோயில் அமைந்துள்ளது. கோயில் கட்டக் கூடிய சமநிலங்கள் மலையில் சில உள்ளன. ஆயினும், அங்கெல்லாம் கோயில் அமையாமல், கட்டக்கூடாத ஏற்றத் தாழ்வான மலையுச்சியில் கோயில் அமைந்துள்ளமை, மிக்க வியப்பு! இயற்கையாகவே இறைவன் தோன்றிய இடமாய் இருந்தால், அந்த இடத்திலேயே கோயில் அமைப்பது முறையாகும்; ஆதலால் அவ்வாறுதான் அமைந்ததென்று நினைக்கவேண்டியிருக்கிறது.!

வேதமலையில் இறைவன் வேதங் கடந்த பெருமானாய் இருப்பதனால், மலைக்கு மேல் கோயில் அமைந்தது. கோயில் இருக்கும் இடத்துக்கு மேல், உச்சியிடம் மலை முழுவதும் இல்லை. கோயில் உள்ள இடமே உச்சி இடம். கோயில் வாயில் கிழக்குப் பார்த்தது. கோயிற் கருவறையில் 'சிவலிங்கம்' உள்ளது; பின்பக்கச் சுவரில் கந்தப்பெருமானுடன் கூடிய அம்மை அப்பர் திருவுருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. எதிரில் பலிபீடமும், கொடிமரமும் முன் மண்டபத்தில் உள்ளன. அங்கு வடகிழக்குப் பக்கம் வேள்விக்கும் மேடை இருக்கிறது. சுவர்கள், சாளரங்களெல்லாம் கோயில் முழுதும் கருங்கற்களால் ஆனவை. கருவறையைச் சுற்றி ஒரு சுற்று உள்ளது; கோயில் நன்றாகப் பழுதின்றி அமைந்திருக்கிறது; திருமுன்னிலை கிழக்கு நோக்கியது.

மலையின் மேல் நந்தி இல்லை. அதற்குரிய நந்தி, திருவாயிலுக்கு நேர்க்கீழே, நால்வர் கோயிலில் உள்ளது. மலையைச் சுற்றிலும், நந்திகளும் பலிபீடங்களும் உள்ளன. தாழக் கோயிலில் பெரிய நந்தி ஒன்று மலையை நோக்கித் திருமுன்னிலைக்குப் பின்புறமாய் ஒரு குளக் கரையில் உள்ளது. அக் குளத்திற்கு 'நந்தி தீர்த்தம்' என்று பெயர்.

கடவுள் வேதமலையைக் கடந்திருப்பதனாலும், நந்தியெம்பெருமானுக்கு வேதத்தை அறிவுறுத்தினார் என்பதனாலும், நந்தியெம் பெருமானை எதிரில் வைத்தே அறிவுறுத்த வேண்டியிருத்தலாலும், எதிரிலுள்ள நால்வர் கோயிலில் நந்தி அமைந்தது. நால்வர் கோயிலில் அமையவேண்டிய காரணம், நால்வர் அருளிய தேவார திருவாசகங்களும் 'மறை' என்று போற்றப்படுதலால் என்பது. அறிவுறுத்துபவர் மேல் நிலையிலும், கேட்பவர் கீழ்நிலையிலும் இருந்தே மன ஒருமையுடன் கேட்க வேண்டியிருத்தலால், நந்தி கீழே அமைவதாயிற்று. நால்வர் பெருமக்களும், எதிரில், தாழவே இருந்து வேதத் திருப்பதிகங்களை ஓதியிருக்கின்றனர்.

**நால்வர் :**

நால்வரும் மலையின்மேல் ஏறவில்லை. மலையைச் சுற்றி வருவதற்குப் பாட்டை உள்ளது. திருத்தணி, பழநி முதலிய தலங்களில் எல்லாம், மலையைச் சுற்றி வர அண்மையிலேதான் பாட்டைகள் அமைந்தன. திருக்கழுக்குன்றம் வேதமலையாதலால் மலையின்மேல் நால்வர் பெருமக்கள் ஏறாமல், மலையை மரியாதையுடன் சுற்றிவந்து, திருமுன்னிலைக்கு எதிரில் நின்று திருப்பதிகங்கள் பாடினார்கள். ஆதலால் அவர்கள் காலத்துக்கு முன்பே மலைப்பாட்டை மிகப் பழைய காலத்திலேயே அமைந்துவிட்டது.

நால்வர் பெருமக்கள் வலம் வந்து நின்று திருப்பதிகங்கள் பாடிய இடத்திலே தான், நால்வர் கோயில் தனியாக அமைந்திருக்கிறது; நந்தியும் அங்கே அமைந்து விட்டது: மாணிக்கவாசகப் பெருமான் திருப்பெருந்துறையிலிருந்து ஏந்தி வந்த இறைவன் திருவடியும் நால்வர் கோயிலில் உள்ளது. அதற்குக், கோபுரம் அமைந்திருக்கிறது. ஆக நந்தியும் திருவடி நிலையும், நால்வர் கோலமும் சேர்ந்ததே இறைவன் திருமுன்னிலையாய், நால்வர் கோயிலாய் இருக்கிறது.

மலைமேல் இறைவன் திருமுன்னிலை என்பது அன்றாட வழிபாட்டுக்காக அமைந்ததேயன்றி, அடியார்களின் வழிபாட்டுக்கு அன்று; அடியார், வழிபாட்டுக்கு நால்வர் கோயிலே திருமுன்னிலையாக அமைந்திருக்கிறது. இவ்வாறு தமிழகத்திலும் இந்தியாவிலும் எங்கும் அமைப்பில்லை; கோயில்களிற் பெரும்பாலும் அம்பலவாணர்

திருமுன்னிலைக்கு எதிரில் நால்வர் திருவுருவங்கள் நிறுவப்படும். திருக்கழுக்குன்றத்தில் மலைக் கடவுளுக்கு முன் நால்வர் கோயில் தனியாகத் தாழ்வரையில் அமைந்திருக்கிறது; இது, திருக்கழுக்குன்றத்தின் தனிச் சிறப்பு!

நந்திக்குக் குறுக்கே யாரும் செல்லக்கூடாது. காரணம், அருளுரை பகரும் இடம்; நந்திக்குப் பின்புறமே திருவடிக்கோபுரமும் இருக்கிறது. இறைவன் 'பசுபதி' ஆனதனால், பசுவாகிய நந்தி உயிர்களுக்கெல்லாம் தலைமையாய் விளங்குகிறது. அதனால், திருவடி அதன்பின் அமைந்தது!

வழிபடுவோர் முதலில் மலைவலம் வருவர்; வந்து, நால்வர் கோயிலில் மலைவலத்தை முடிப்பது வழக்கமாய் இருக்கிறது. வழிபடுவோர் இறைவன் திருமுன்னிலையாகிய நால்வர் கோயிலில், திருவடிக் கோபுரத்துக்குப் பின்புறமும், நால்வர் பெருமக்களுக்கு முன்பும் நின்றிருந்து வழிபாடு செய்வர். அதற்காகவே அண்மையில் அன்பர் பெருமக்கள் அங்கே சிறந்த மண்டபம் ஒன்று திருப்பணி செய்து அமைத்திருக்கின்றனர்.

திருக்குழுக்குன்றத்திலேயே, வேதமலைப் பெருமானுக்குத் திருமுன்னிலையாய் இருப்பது நால்வர் திருமுன்னிலையாகிய நால்வர் கோயிலே.

**திருப்பணி :**

இத்தகைய நால்வர் திருக்கோயிலுக்கு ரூ. 20,000 செலவில் மட்டும் திருப்பணி தொடங்கியது. அதில் இரும்புத்தூண்களும் தூலங்களும் பொருத்தி, மேல்கூரைக்குத் தகரத் தகடு வேய்ந்து முன் மண்டபம் அமைத்தாயிற்று. இன்னும் 10,000 ரூபா செலவில், 7,000 ரூபா திருப்பணிக்கும், 3,000 ரூபா திருக்குடமுழுக்குக்கும் செல்லும். நந்தியும் திருவடிக் கோபுரமும் தூக்கி அமைக்கவும், நால்வர் திருமுன்னிலையை நன்கினிது அமைக்கவும், விமானச் சிலைகள் பழுதுபட்டவற்றைச் சரிப்படுத்தவும், நால்வர் அமுத வாக்குகளிற் சிலவற்றைப் பொறித்து வைக்கவும், திருப்பணிகள் உள்ளன. விழாவுக்காக நால்வருக்கு வெண்கலத் திருவுருவச் சிலைகளும் அமைக்க வேண்டும்.

**திருநாட்கள் :**

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்கள் நால்வர் திருநாட்கள் வருகின்றன. ஆண்டு தோறும் அவை முதல் நான்கு மாதங்களாக வருவது, முதலில் சமய குரவர்களே வழிபாடு செய்வதற்குரியவர் என்பதை நினைவூட்டுகின்றது. அடுத்து ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை என்னும் ஆறு மாதங்கள். சமயத்தின் உட்பிரிவுகள் ஆகிய கணபதி, அம்மை, முருகர், ஒளிக்கடவுள், அம்பலவாணர், சூரியன் முதலியவர்களின் வழிபாடுகள் வருகின்றன; யாரை வழிபட்டாலும் முழுமுதற் கடவுளையும் சேர்த்தே வழிபாடு செய்வது முறை! ஏனென்றால், கடவுளின் பாகங்களே இவர்கள்; திருக்கோயில்களிலும் இதற்குரிய கடவுளமைப்பு உண்டு; தனியாக யாரும் அமைவதில்லை. அதன்பின் மாசி மாதத்தில் முழுமுதற் கடவுளைச் சிவராத்திரியிலும், அம்மையைப் பங்குனி மாதத் திருஉத்திரத்திலும் சிறப்பாக வழிபாடு செய்வது மரபு.

இங்ஙனம் வழிபடுவோர், பங்குனித் திருவுத்திரத்தில் அம்மையப்பர்க்குத் திருமண விழா நடத்தித் தாமும் கூட்டாகத் திருமணங்கள் செய்துகொண்டு வாழ்க்கை நடத்துவர். மாசி, பங்குனி மாதங்கள் இரண்டும், முழுமுதற் கடவுளாகிய அம்மையப்பர் வழிபாட்டுக்கு உரியவை; இதோடு ஆண்டு முடிவடைகிறது. சமய அன்பர்கள் இவ்வொழுங்கினை நினைவு கூர்வர்; சமய அன்பர்களுக்கு, முதலில் சமய குரவர் திருநாள் வழிபாடு முக்கியமானது என்பது, முதல் நான்கு மாதங்களில் மாதந்தோறும் முதலில் அமைந்த இவ்வழிபாட்டு நிலைகளிலிருந்து நன்கு தெரிகிறது.

ஆண்டமைப்பு இவ்வாறு இருந்தும், மக்கள் பெரும்பாலும் இதனைக் கவனிப்பதில்லை; குருமார் அருள் பெறுமலே ஆண்டவன் திருவருள் பெறச் சிலர் முந்துகின்றனர்.

> ''சமயாதீதப் பழம் பொருளைக்
> கைவந்திட மன்றுள் வெளி காட்டும்
> இந்தக் கருத்தை''

என்று, தாயுமான அடிகள், சமய நெறி கடந்த கடவுளைத் திருவம்பலத்துள் அறியலாம் என்று தெளிவித்தல் உணர்தற்குரியது.

சமய உட்பிரிவுகளில் கார்த்திகை மாதம் ஒளிமாதம் என்பதும், மார்கழி மாதம் அவ்வொளியைத் திருவம்பல ஒளியாகக்காணவேண்டும் என்பதும், முக்கியமாய் இருக்கின்றன; அத்தகைய முக்கியங் கருதியே திருக்கோயில்களில் சமய குரவரில் மாணிக்கவாசகர், திருவம்பலத்தின் பீடத்திலேயே அம்மை அப்பரோடு ஒருங்கு சேர்ந்திருத்தல் காணலாம். மார்கழி மாதம் 'திருவாதிரை' விழாவும், மாணிக்க வாசகரின் 'திருவெம்பாவை' விழாவும் முதன்மையாய் இருப்பதும் கவனிக்கத்தக்கது! அம்பலவாணர் திருமுழுக்கு இம்மாதத்திற் சிறப்பு. ''ஆதிரை நாளால் அதுவண்ணம்'' என்பது திருமுறை! ''மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப்போகிறதையே'' என்று, நந்தனர் மிக ஆவலாகக்கூறுவதாக, நந்தனர்கீர்த்தனையும் பாடும்.

இங்ஙனமெல்லாம், நால்வர் வழிபாடு மக்களுக்கு ஆண்டு முதலில் இன்றியமையாததென்பது இனிது விளங்கும். அதற்குத் திருக்கழுக்குன்றத்தில் நால்வர் திருமுன்னிலையும், நால்வர் கோயிலும் நன்றாக விளங்க வேண்டியிருக்கின்றன.

**கடமை :**

நாடு முழுதுமிருந்து எல்லாமக்களும் ஆண் பெண் குழந்தைகள் அனைவருமாக, நால்வர் திருவருளைப் பெறுவதற்கு நால்வர் திருநாட்களில் திருக்கழுக்குன்றத்தில் ஒருங்கு சேர்ந்து

வழிபாடு செய்வது முக்கியம். திருக்கழுக்குன்றத்திலேதான் நால்வர் திருமுன்னிலை தெய்வத் திருமுன்னிலையாக (வேதமலைப் பெருமான் திருமுன்னிலையாக) விளங்குகின்றது. குருவருளால் திருவருள் பெறுவதென்பது நன்ருக அமைந்துள்ளவகை, இந்தத் தலத்தில் மிகச் சிறப்பு.

அவரவர் இடங்களிலும் ஊர்களிலும் ஏனைத் தலங்களிலும் நால்வர் வழிபாட்டை உருகிச் செய்யலாமாயினும், 'குருவருளால் திருவருள்' என்னும் உண்மைக்குத் திருக்கழுக்குன்றத் தலம் தகுதியாயிருக்கிறது. ஏனைய மாதங்களில் வரும் நால்வர் நாட்களிலெல்லாம் அன்பர்கள் அவரவர் இடங்களில் நால்வரை வழிபட்டு, ஆண்டுக்கு ஒருகால் சித்திரை முதல் ஆடிவரையில் வரும் நால்வர் திருநாட்களில், திருக்கழுக்குன்றம் நால்வர் கோயிலுக்கு வந்து, வழிபடுதல் சிறப்பாகும். தெய்வத் திருமுன்னிலையும் நால்வர் திருமுன்னிலையும் ஒன்ருய் இருப்பதோடு, நால்வர் கோயில் தனிக் கோயிலாகவும், மலைத் தாழ்வரையில் நேரே அமைந்திருக்கிறது! திருக்கழுக்குன்றம் பிணி தீர்த்து அருள் சேர்க்கும் மலைத்தலம் என்பதும் கவனித்தற்குரியது.

> ''குருவழி யாய குணங்களில் நின்று
> கருவழி யாய கணக்கை அறுக்க''
>
> —திருமூலர் 2655.

திருக்கழுக்குன்றம் நிறைவாக உதவும். திருக்கழுக்குன்றத்துக்கு வரமாட்டாதவர் அவரவர் இடங்களிலும் தலங்களிலும் வழிபட்டுக் கொள்ளலாம். மேலும், திருக்கழுக்குன்றம், நால்வர் திருப்பதிகங்களும் பெற்றது. நால்வர் பாடல்களை அங்கே நால்வர் கோயிலில் நால்வர் திருமுன்னிலையில் இருந்து பாடுதலும் இசையரங்கு நடத்துதலும் மிகச் சிறப்பு.

**விழா வகைகள் :**

நால்வர் திருநாள் விழாக்களில் சித்திரை மாதத்தில் அப்பர் திருநாளில் நாடெங்கும் உள்ள சமயத்தொண்டர்கள் 'தொண்டர்விழா' வாகத் திருக்கழுக்குன்றத்தில் ஒருங்கு கூடி வழிபாடு செய்யலாம். கூட்ட விழாவும் எடுக்கலாம்; அடுத்த ஆண்டு வரையில், தாம்தாம் செய்ய வேண்டிய திருத்தொண்டுகள் பற்றிச் சூள் ஏற்றுக் கொள்ளலாம். விழாவுக்கு முன், முழுமுதற் கடவுளின் திருக்கொடி ஏற்றுதல் இன்றியமையாதது.

வைகாசித் திங்களில், ஞானசம்பந்தர் திருநாளில், அவர் இசைவல்லவரானதனுல், எல்லாரும் ஒருங்குகூடி ஞானசம்பந்தரை வழிபட்டு 'இசை விழா' நடத்தலாம். ஆண்டுக்கு ஒருநாள் திருக்கழுக்குன்றத் தலத்தில் இசை வல்லுநர் ஒருங்கு சூழ்ந்து, அந்த ஆண்டுமுழுதும் அவரவர் பயின்ற புதுப்புது இசை முறைகளைப் பாடி வழுத்தலாம். சிறந்த இசை வல்லுநர் அனைவரும், அவரவரே முன்வந்து வழிச்செலவு, கைச் செலவு முதலிய எல்லாச் செலவுகளையும் ஏற்று, இறைவன் காணிக்கையாக ஆண்டவன் மலைதாழ் வரையில், நால்வர் கோயிலில் தம் இசைகளை மிழற்றினுல், ஏனைய மாதங்களில் ஆண்டுமுழுவதும் நாட்டில், வருவாய் பெருக்கிக் கொள்ளலாம். மெய்யன்புடையவர்க்கு எல்லா நலங்களும் வாய்க்கும். முன்வரிசையிலுள்ள இசைவாணர் பலரும் இவ்விழாவில் அவரவர் பொறுப்பிலேயே ஈடுபடுதல் நல்லது; வரவேற்புக்கும் உண்டி இருப்பிடங்களுக்கும் குறைவிராது. உறுப்பினராகத் தம்மை ஒரு குழுவாக்கிக் கொள்ளுதலும், அரசிற் பதிவு செய்து கொள்ளுதலுங்கூட உதவியாயிருக்கும். இசைவாணர்க்கு நால்வர் திறத்திலும், அவர்கள் மறை வாக்குகளிலும் உருக்கம் முதன்மை.

ஆனி மாதம் மாணிக்கவாசகர் திருநாளில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் நான்கு நாட்கள் சிறப்பாக விழா நிகழ்த்துகிறது; 32 ஆண்டாக மேற்கொண்டு, ஊக்கமாக நடத்தி வருகிறது. அது 'ஓதுவார் விழா' வாக மலையைச் சுற்றிலும் பல ஊர்ப் பாராயணக் குழுக்களை வரவழைத்து நடத்தி வருகிறது. மற்றத் திருநாட்களையும் அவ்வாறே அங்கங்குமுள்ள அடியார் திருக்கூட்டங்கள் நடத்த முன்வரலாம்.

ஆடி மாதம் சுந்தரர் திருநாளில், 'சிவாச்சாரியர் விழா' நடத்தப்படுகிறது; எல்லாச் 'சிவாச்சாரியர்களும்' ஒருங்குகூடி, விழா நிகழ்த்தி மகிழலாம். 'முப்பொழுதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்' என்று சுந்தரமூர்த்தி நாயனுரே அருளிச் செய்கின்ருர்; அச்சிறப்பில், நாடு முழுவதும் மக்கள் திரண்டு அவ்விழாவை மேம்படுத்தலாம். ஆரூரர், 'திருத்தொண்டத் தொகை' பாடியவர்; அதில் தில்லை வாழந்தணருடன் ஏனை அடியார்களும் போற்றப்படுகின்றனர். அடியார் பெருமக்கள் விழாவாக, ஆரூரர் திருநாள் விழாவை நடத்துதல் நன்று. திருநாட்களைக் கொண்டாடுதலும் விழாக்கள் நடத்துதலுமெல்லாம், மக்கள் முன்னேற்றத்துக்கேயாதலின், பல துறை வல்லுநர்க்கும் பொறுப்புக்கள் மிகுதியாயிருக்கின்றன. நால்வர் திருப்பதிகங்களில் மனித குலத்துக்கும் ஏனைச் சிற்றுயிர்த் தொகுதிக்கும் தேவையான எல்லாச் சீர்திருத்தங்களும் திருக்குறட் பொது மறையிற் போல நிரம்பியுள்ளன.

திருக்கழுக்குன்றத்தில் இப்போதும் நால்வர் திருநாட்கள் நடைபெற்று வருகின்றன என்ருலும், நாடு முழுதும் ஒருங்கு திரண்டு நால்வகை விழா நாட்களாக மிகச் சிறப்பாய் நடைபெறுதல் இன்றியமையாதது. இவை 'நாட்டு விழா' வாகும்; 'உரிமை விழா' என்பதும் பொருந்தும். நால்வர் கோயில் திருப்பணி, இதனுல் எவ்வளவு முதன்மையானது என்பது சொல்லாமலே விளங்கும்.

**தக்கார் ஒருவரே கூட :**

சமயப் பெரியோர்களில், தக்கசெல்வர்கள் எவ்வளவோ பேர் இருக்கிருர்கள். செல்வம் மிக்க திருக்கோயில்களும் திருமடங்களும் நாட்டில் ஏராளமாய் உள்ளன. நாடும் அரசும் இத்திருப்பணி பற்றிக் கவனிப்பது நல்லது. நடைபெற வேண்டிய திருப்பணி, திருக்குட முழுக்கு உட்பட மிகச் சிறிய தொகையாகிய

ரூபா 10,000/-க்குள்ளேதான், இப்போது நடைபெற வேண்டியிருக்கிறது. அன்பும் உருக் கமும் வாய்ந்த தக்க செல்வர் ஒருவரே, இதனை நிறைவேற்றிவிடலாம். அல்லது திருக்குட முழுக்கை ஒருவரும், மற்றத் திருப்பணிகளை ஒருவருமாக ஏற்கலாம். நந்தி, திருவடிக் கோபுரத் திருப்பணிகளை ஒருவர் ஏற்க அன் புடன் முன்வந்திருக்கிறார். நால்வர் அமுத மொழிகளை 1,000 ரூபா செலவில் பொறித்து வைப்பதற்குக் குருகுலம், திருக்குறள்பீடம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. மற்றத் திருப்பணி களும் திருக்குட முழுக்குந்தான், அன்பர்கள் ரூ. 10,000 செலவில் ஏற்றுஆற்ற வேண்டும். மெய்யன்பர் சிற்சிலர் சில்லறைத் தொகை களாகப் பேரன்புடன் அனுப்பி வருகிறார்கள். அவை முழுதும் 'நால்வர் விழாத் திருவுருவங்கள்' செய்வதற்குப் பயன்படலாம்.

முகவரி :

இத்திருப்பணிக்காகத் தொகை அனுப்ப வேண்டிய முகவரி: ''திரு. என். தணிகாசலம், பொருளாளர், நால்வர் கோயில் திருப்பணிக் குழு, 33 குளத்துத் தெரு. நால்வர்கோயில் பேட்டை, திருக்கழுக்குன்றம், (வழி) செங்கற் பட்டு.''

மேலும் இத்திருப்பணித் தொடர்பாக அணுக வேண்டிய முகவரி: ''திரு. தி. வை. க. சம்பந்தமுதலியார், செயலாளர், நால்வர் கோயில் திருப்பணிக்குழு, மந்தைவெளித்தெரு, நால்வர்பேட்டை, திருக்கழுக்குன்றம் (வழி) செங்கற்பட்டு.''

சமய குரவர் நால்வர்க்குச் சமயப் பெரி யோர் எவ்வளவோ திருப்பணிகள் செய்யலாம். பற்பல சமயத்தவரும், தத்தம் குருமார்களைப் போற்றிக் கொள்ளும் முறை, பெரிதும் வியக் கத்தக்கதாயிருக்கிறது. குருமார் கோயில்களைப் பொற்கோயில்களாகவும் செய்விக்கிறார்கள். குருமார் வாய் மொழிகளை, நூறாயிரக்கணக் கான நூல்களாகப் பதிக்கிறார்கள். ஆண்டுக் கொருநாள் உலகமெலாம் கூடி உருக்கமாய் யாத்திரை செய்கிறார்கள். உலகம் முழுதும் தத்தம் கொள்கைகளை நன்கு பரவச் செய் கிறார்கள். சமயங்களிற் பெரும்பாலானவை, குருமார் சமயங்களாகவே இருக்கின்றன. குரு மார் தங்கிய நிழல்மரம், மரத்தின் கிளைகள் கூடப் போற்றப்படுகின்றன. உடம்பின் உறுப்புக்கள், பற்கள் முதலியவை எவ்வளவோ பாராட்டப்படுகின்றன; தலைவர்களின் உரு வங்கள் மிக விழிப்பாகப் பாதுகாக்கப்படுகின் றன.

நல்லவற்றிற்குச் செலவழிக்கத்தான் செல் வங்கள் ஈட்டுவது, எல்லார்க்கும் கடமையாய் இருக்கிறது.

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு''

திருஞானசம்பந்தர் முதலிய நால்வர், மக் கட்குச் சமய குரவர் என்பதை அனைவரும் நினைந்து, அவர்களின் திருக்கோயில் திருப்பணி களில் கூடிய விரைவில் அனைவரும் ஈடுபடுவார் களாக!

*

# நால்வர் பாடல்கள்

தோடுடையான் ஒரு காதிற் தூய குழைதாழ
ஏடுடையான் தலைகலனாக இரந்துண்ணும்
நாடுடையான் நள்ளிருளேம நடமாடும்
காடுடையான் காதல் செய்கோயில் கழுக்குன்றே.

—சம்பந்தர்.

மூவிலை வேற்கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக் காடுடையானை முதலானானை
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோனை
ஆலாலம் உண்டுகந்த அம்மான் தன்னைப்
பூவினின் மேல் நான் முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

—நாவுக்கரசர்.

கொன்று செய்த கொடுமையாற் பலசொல்லவே
நின்று பாவவினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர்பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

—சுந்தரர்.

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு மான்உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கி லாததோ ரின்ப மேவருந் துன்ப மேதுடைத்து எம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளையாமல் என்வினை யொத்தபின்
கணக்கி லாத் திருக் கோலம் நீவந்து காட்டி னாய் கழுக்குன்றிலே.

—மணிவாசகர்.

# "அருமையில் எளிய அழகே போற்றி"

## முன்னுரை :

''அருமையில் எளிய அழகே போற்றி'' என்பது, திருவாசகத்தில், 'போற்றித் திரு அகவல்'' என்னும் பகுதியில் அமைந்துள்ள, ஒரு சிறந்த வரியாகும். திருவாசகம் என்னும் செந்தமிழ்த் தெய்வ மாமறையின் சிறப்பு, யாவரும் அறிந்ததொன்று. அதன் ஒவ்வொரு திருப் பாடலும், அப்பாடலின்கண் வரும் அழகிய சொற்கள் சொற்றொடர்களும், எத்துணையோ உயர்ந்த பல பொருள் நுட்பங்களைப் பொதிந்து கொண்டு திகழ்பவை என்பதும் அனைவருக்கும் உடன்பாடு. அம்முறையில், இவ்வரியும் பல சிறந்த பொருள் நுட்பங்களைப் பொதிந்து கொண்டு உணர்த்தும் முறையில் அமைந்து திகழ்கின்றது.

## கடவுள் இலக்கணம்:

இவ்வரியைக் கடவுள் இலக்கணம் கூறும் ஒரு சிறந்த இனிய நூற்பா என்றே கூறலாம். கடவுளின் எல்லையற்ற பற்பல நல்லியல்புகளை எல்லாம் இவ்வரியானது ஒருங்கினிது தொகுத்துச் சுருக்கிச் செவ்விதின் உணர்த்தவல்லதாக விளங்குகின்றது. அன்பர் அல்லாதவர்களுக்கு அருமை உடையவராக, உணர முடியாத நிலையில் கடவுள் விளங்குகின்றார். அன்பர்களுக்கோ அவர்கள் விரும்பும் முறைகளிலெல்லாம் எளிவந்து இன்னருள் புரிகின்றார். அத்தகைய அவர்தம் இயலும் செயலும் அழகுமிக்கோங்கிப் பிறங்குகின்றன. கடவுளிலக்கணத்தின் இவ்வுண்மையினையே, திருவாசகத்தின் சிறந்த இவ்வரியானது பொதுவாக உணர்த்துகின்றது. எனினும், தொட்டனைத்தூறும் மணற்கேணி போல, இவ்வரியினை உன்னிஉன்னி உணருந்தோறும் பல சிறந்த அரும்பெரும் பொருள்கள், இவ்வரியின் அடிப்படையில் நமக்குப் புலனாகின்றன

## மூவகை நிலைகள் :

(1) கடவுள் தன்னியல்பில் எல்லாவற்றிற்கும் எல்லோருக்கும் அப்பாற்பட்டு மிக மேலானவராக விளங்குகின்றார். இதனைக் கடந்தநிலை (Transcendence) என்பர். அவரே எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களின் உள்ளத்திலும் பிரிவற இயைந்து நின்று திகழ்கின்றார். இதனைக் கலந்தநிலை அல்லது அந்தர்யாமித்துவம் ( Immanence ) என்பர். கடவுள் தம்மை வழிபடும் அன்பர்களுக்கு அவர்கள் விரும்பும் திருவுருவங்களில் தோன்றிக் காட்சி தந்து, அவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு மகிழ்வித்து அருள்புரிகின்றார். இதனைக் கவர்ந்த நிலை ( Appearance ) எனலாம். 'என் உள்ளம் கவர் கள்வன்' என வரும் திருஞானசம்பந்தர் திருமொழியும் இங்கு நினைவுகூரத் தகுந்தது. இங்ஙனம் கடவுளுக்குரிய கடந்தநிலை, கலந்தநிலை, கவர்ந்தநிலை என்னும் மூன்றுவகை நிலைகளையே, முறையே அருமை எளிமை அழகு என்னும் சொற்களால், மாணிக்கவாசகர் குறிப்பிட்டு அருளினர் போலும் எனக் கருத இடமுண்டு.

## முப்பெரும் பண்புகள் :

(2) மேலை நாட்டுச் சிந்தனையாளர்கள் அனைவரும் மிக விதந்தெடுத்துப் போற்றி வியந்து புகழ்ந்து, உண்மை ( Truth ), நன்மை ( Goodness ) அழகு ( Beauty ) என்னும் மூன்றையும் எல்லாவற்றிற்கும் மேலான மிகச் சிறந்த பண்புநலங்களாகக் குறிப்பிடுவர் (1). உலகத்தில் எல்லாவற்றிற்கும் மேலானதாய்ச் சிறந்து திகழ்வது உண்மையே. உண்மை எதுவோ அதுவே நன்மையாகும். நன்மை எங்கே எதில் உள்ளதோ, அங்கே அதில் அழகும் இருக்கும். உண்மையும், நன்மையும், அழகும் ஆகிய இவை மூன்றும், தம்முள் ஒன்றினொன்று பிரிவற இயைந்து நிற்பனவாகும். இம்மூன்றும் உலக மக்கள் அனைவராலும் விரும்பிப் போற்றப்படுவன. அவை அவர்களுக்குப் பெரிதும் இன்றியமையாதனவாய் எல்லையில்லா நலங்களை விளைவிப்பன. மேலைநாட்டு நூல்கள் சிறப்புற வியந்து போற்றும் இம்மூன்றையும், நம்நாட்டு நூல்களும் சத்தியம்-சிவம்-சுந்தரம் (2) எனக் குறிப்பிட்டுப் போற்றா நிற்கும். இம்மூன்றின்கண் அடங்காத உயர்ந்த பண்பு நலங்கள் எதுவுமே யில்லை. எனவே இவற்றையே கடவுள் இலக்கணம் குறிக்கும் சிறந்த மூன்று பண்புகளாக

(1) " Among all the meaningful values of the Superorganic world there is the supreme integral value—the veritable summum bonum........It is the indivisible unity of Truth, Goodness and Beauty............"

—PITRIM A. SOROKIN,
*This is my Philosophy, (symposium)* P. 184.

(2) The objective aspects of the Pure Ego are the True (Satyam) the Beautiful (Priyam), the good (Hitam); or Santam, Sundaram, Sivam, the Restful, the Lovely, the Auspicious."

—DR. BHAGAVAN DAS,
*Atma-Vidya, The Science of the Self.*

நாம் கொள்ளலாம். இம் மூன்றினையுமே, அருமை எளிமை அழகு என்னும் மூன்றும் குறித்து நிற்பனவாக, நாம் கொள்ளுதல் கூடும். உண்மை நமக்கு ஒருவகையில் அருமையானதே, அது நமக்கு நன்மை பயக்கும்பொழுது அருமை தவிர்ந்து எளிமையாகி விடுகின்றது. அந்நிலையில் அதன் அழகை நாம் உளமார உணர்ந்து வியந்து போற்றுகின்றோம்.

**சச்சிதானந்தம் :**

(3) கடவுட் பெரும் பொருளின் இயல்பினைக் கவிஞர்களும் ஞானிகளும் பலவகையாகச் சிறப்பித்து விதந்து, வியந்து, எத்துணையோ வெவ்வேறு பலவகைகளில் போற்றிப் பாடுவர். ஆயினும் அவர்கள் அனைவருமே, கடவுட் பெரும் பொருள் சத்து-சித்து-ஆனந்தம் என்னும் மூன்றன் வடிவாகத் திகழ்கின்றது என்பதனை, ஒருமுகமாக ஒத்து உடன்பட்டுப் புகழ்ந்துரைப்பர்.

''நம் இந்திய நாட்டுப் பழம்பெரும் சான்றோர்களும், தத்துவ ஞானிகளும், தவநெறிச் செல்வர்களும், உலகையும் கடவுளையும் பற்றி ஆராய்ந்து அறிந்து உணர்ந்திருந்த கருத்துக்கள் அனைத்தையும், சச்சிதானந்தம் என்னும் சுருக்கம் மிக்க சொற்றொடர் ஒன்றே தெளிவுற விளக்கி நிற்கின்றது!(3)

உள்பொருளாகத் திகழும் கடவுட் பொருள் ஒன்றே, சத்து சித்து ஆனந்தம் என்னும் முப்பெரும் பண்பும் கூறும் உடையதாக மிளிர்கின்றது. இம்மூன்றினையும் ஒருவகையில் அருமை எளிமை அழகு என்னும் சொற்கள் குறிப்பனவாகக் கொள்ளுதல் இயலும். சத்து என்னும் சொல் உள்ளது, உண்மை என்னும் பொருளை உணர்த்தும். உண்மை அருமை வாய்ந்தது என்பது யாவரும் ஒப்புவர். சித்து என்பது அறிவு. 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்றபடி, அறிவிற்கு ஏனைய எல்லாப் பொருளும் எளிமையாவதுடன், அறிவுடையோர் ஏனையோர்க்கு எளிவந்து இரங்கி இன்னருள் புரிவர். ஆதலின் எளிமை என்பது, இங்குச் சித்து என்பதனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆனந்தம் என்பது அழகால் விளைவது. அழகைக் காணும் யாவரும் ஆனந்தம் அடைவது திண்ணம். எனவே சச்சிதானந்தம் என்னும் அழகிய அரும் பெரும் தொடரின் கருத்தினையே, அருமை எளிமை அழகு என்னும் சொற்கள் முறையே குறிக்கும் என்றும் சொல்லலாம்.

**மூவகைத் தொடர்பு :**

(4) சைவ சித்தாந்தம், இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பினை ஒன்றுதல் வேறுதல் உடனுதல் என மூவகை நிலைகளாகக் கூறும். உடலின் உயிர்போல் கலப்பினால் இறைவன் உயிர்களுடன் அவ்வுயிர்களேயாய் நிற்கும் நிலை ஒன்றுதல்; கண்ணில் அருக்கன் போலப் பொருட்டன்மையால் உயிர்களும் இறைவனும் தனித்தனியே நிற்கும்நிலை வேறுதல்; கண்ணொளியின் ஆன்மபோதம் போல உயிர்க்குயிராதற்றன்மையால் இறைவன் னுயிர்களோடு ஒன்றித்து இயைந்து நிற்கும்நிலை உடனுதல்; உயிர்களிற் பிரிந்த இறைவன் வேறாய் நிற்கும் நிலை அருமை; கலப்புத் தன்மையால் இறைவன் உயிர்க்குயிராகும் தன்மையால் இறைவன் உயிர்களோடும் அவற்றின் நுகர் பொருள்களோடும் உடனாய் நிற்கும் நிலை, அழகு ஆகும். ஓர் அழகுப் பொருளை நாம் கண்டு இன்புறுங்கால் அவ்வழகுப் பொருளினும் இறைவன் விளங்கியிருக்கின்றான். அவ்வழகினைக் கண்டு நாம் இன்புறுதற்கு நமக்கும் துணை செய்கின்றான். இவ்வாறு இரண்டிடத்தும் இறைவன் உடனாக நிற்கவேண்டி இருத்தலின், அழகு என்பது ஈண்டு உடனுதல் நிலையைக் குறிப்பதாகக் கொள்ளப் பெரிதும் ஏற்புடைத்தேயாகும்.

**சோமாஸ்கந்தம் :**

(5) இனி, அருமை எளிமை அழகு என்னும் மூன்றினையும், சத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்றினோடும் தொடர்புடையனவாக நாம் முன்னர்க்கொண்ட முறைமையினின்று வேறொரு கருத்துக் கொள்ளவும் இடனுள்ளது. சச்சிதானந்தம் என்னும் தொடர், சோமாஸ்கந்தம் என்னும் சிவபிரான் திருவுருவைக் குறிப்பதாகக் கொள்வதும் பெரியோர்கள் மரபு.

சோமாஸ்கந்தமூர்த்தம், தமிழ்நாட்டுக்கே தனிப்பெரும் சிறப்பாக உரியது. இந்திய நாட்டின் வேறு பிற எந்தப் பகுதிகளிலும் காணப்படாமல், தமிழ்நாட்டில் மட்டுமே தனிப்பெரும் சிறப்பியல்பாகச் சோமாஸ்கந்தர் திருவுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. பழமை வாய்ந்த சிவாலயங்களில் சிவலிங்கத்திற்குப் பின்புறமுள்ள கருவறைச் சுவரில், சோமாஸ்கந்தர் திருவுருவம் அழகுற அமைக்கப் பட்டிருத்தல் காணலாம். உலகியல் வாழ்க்கை நலம்பெற வளர்ந்து செழித்தற்கு ஒருவனும் ஒருத்தியும் முறைப்படி மணந்து கோடலும், இனிய நல்ல மக்கட்பேறு எய்துதலும் இன்றியமையாதன. கணவனும் மனைவியும் குழந்தையும் ஆகிய முப்பொருட்டன்மை திகழ்வது, குடும்ப வாழ்வின் அரும்பெரும் சிறப்பு.

சிவபெருமான், குழந்தையாகிய ஸ்கந்த மூர்த்தியைத் தமக்கும் உமாதேவியார்க்கும் நடுவே இருக்கச் செய்து எழுந்தருளியிருக்கும் திருவுருவமே சோமாஸ்கந்த மூர்த்தம் எனப்படும். (ஸ உமா ஸ்கந்த) சோமாஸ்கந்த மூர்த்தத்தை அன்புடன், வழிபட்டு வருவோர், கணவனும் மனைவியுமாக இல்லறநெறி நின்று இணையிலா இன்பம் துய்த்து, நன்மக்கட்பேறும் குலவளர்ச்சியும் பெற்று, இம்மையிற் சிறந்து வாழ்வார் என்பது சைவச் சான்றோர் நூல்களின் கொள்கை.

---

(3) "The view of this world which India has taken is summed-up in one compound Sanskrit word, Satchidanandam. The meaning is that Reality—which is essentially one, has three phases.

The first is **Sat** : it is the simple fact that things are the fact which relates us to all things through the relationship of common existence.

The second is **Chit** : it is the fact that we know, which relates to all things through the relationship of knowledge.

The third is **Ananda** : it is the fact that we enjoy, which unites us with all things through the relationship of love."

—DR. RABINDRANATH TAGORE,
The Message of the Aranyakas

இத்தகைய சோமாஸ்கந்த மூர்த்தம், சச்சிதானந்தம் என்னும் அரிய தொடரின் ஆழ் பொருளை அறிவுறுப்பதேயாகும். இறைவன் சத்து; இறைவி சித்து; முருகன் ஆனந்தம் என விளங்குதலைச் சமய ஞான நூல்கள் சாற்றுகின் றன.

''மல்லல்வளம் கனிந்தபுகழ்க் கமலேசர்
திருவுருவும், வாம பாகத்து
அல்லமர்பைங் குழலுமையாள் திருவுருவும்,
இருவருக்கும் அமுதம் ஆன
சொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவும்;
அவ்வுருவாம் குணங்கள் மூன்றின்
நல்உரு ஆதலின் அன்றோ? இவர் அகில
காரணராய் நவில்கின் றாரே''

—குமரகுருபர சுவாமிகள்

''பொருள்உள சத்து; நிரந்தரம்
பொருவரும் அதனை அணைந்தவிர்
அருள்உறு சித்து; நிரம்பிடும்
அதிக மதர்ப்பெனும் இன்பமும்
ஒருமுகம்உற்ற சொலின்கண்; முன்
உளது சிவப் பொருள்; நள்ளது
திருவுரு சத்தி; நல்அந்தரம்
திகழ்வது சுப்பிர மண்யமே''

—பாம்பன் சுவாமிகள்

வேதாகம உபநிடதங்கள் எல்லாம் விதந்து கூறும் சத்து சித்து ஆனந்தம் என்னும் முப் பெரும் பண்புகளின் திருவுருவமாக விளங்கு வதே சோமாஸ்கந்த மூர்த்தம் என்றும்; இஃது ஒருவகையில் கிறித்துவ சமயத்திற் கூறப்படும் பரமபிதா-தேவ குமாரன்-பரிசுத்த ஆவி என் னும் முப்பொருள்களின் இயல்புக்கும் ஒத்த தன்மையுடையதாகக் காணப்படுகிறது என்றும் பெரியோர்கள் கூறுவர். (4)

இத்தகைய சோமாஸ்கந்த மூர்த்தத்திற் சிவபிரானைக் குறிப்பது அருமை; அம்பிகை யைக் குறிப்பது எளிமை; முருகனைக் குறிப்பது அழகு என்ற சொல். முருகன் என்னும் சொல் அழகன் என்னும் பொருளை உணர்த்துவதாதல் வெளிப்படை. எனவே அருமை எளிமை அழகு என்னும் மூன்று சொற்களும் முறையே, சிவ பிரான் அம்பிகை முருகன் என்னும் மூவர் உருவ மும் ஒருங்கே இயைந்த சோமாஸ்கந்த மூர்த் தத்தைக் குறித்து; அவரைப் போற்றி வழிபடும் முறையில் அமைந்துள்ளது எனலாம்.

## முடிவுரை:

இங்ஙனம் நாம் சிந்தித்து ஆராயுந்தோறும் வெளிப்படக்கூடிய சிறந்த பல நுட்பக் கருத்துக் களை, "அருமையில் எளிய அழகே போற்றி'' என் னும் அழகிய தொடர் அறிவுறுத்தி நிற்கின்றது. இனைய பல இனிய தொடர்களையும், சிறந்த பாடல்களையும் கொண்டுள்ள திருவாசகச் செந் தமிழ்த் தெய்வ மறையினை நாம் அனைவரும் தினமும் ஓதி உய்யக் கடவோமாக.

—ஆசிரியர்

(4) "Our idea of God is Sat-chit-Andandam, symbolised in the form of Somaskanda (Sa-Uma-Skanda) and this is the same as God the Father, God the Mother or Holy ghost, and God the Son, and I have quoted in some other place the definition of this terms from Bishop Westcott, God as pure being or Spirit, God as Light that links to him all humanity, and God as Love".

—J. M. NALLASWAMY PILLAI,
*Studies in Saiva Siddhantha*, P. 139.



திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரி அம்மன் திருக்கோயிலின் விழா நிகழ்ச்சி யில் தமிழக ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்களும், சென்னைத் துணை யாணையர் திரு. எம். சூர்யராஜ், B.A.,B.L., அவர்களும், தவத்திரு. சுவாமி இராமதாசர் முதலிய பெருமக்களும் கலந்து கொள்ளுதல்.

# அடைக்கலம்

(டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனாதிபதி, M.A., Ph.D.,)

தத்துவப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.

வேறெதனையும் அல்லது வேறெவரையும் நாடாது இறைவனையே புகலிடமாகக் கொள்வோர் சமயச் சான்றோர். துன்பத்தை விலக்கி இன்பம் அடைவதற்காக உலகியல் பொருள்களையோ பிற உயிர்களையோ அவர்கள் நாடுவதில்லை. செல்வம் நிலையாதது ; செல்வாக்கு எப்போதும் ஒருபடித்தாயிருப்பதில்லை. மக்களுடைய அரவணைப்பு உறுதியானதன்று. எனவே இறைவனையே உறுதுணையாக நாட வேண்டுமென்பது அவர்கள் கண்ட உண்மை, கடைப்பிடிக்கும் உண்மை.

தம்மை இறைவனிடம் ஒப்படைக்க வேண்டிய கலமாகக் கருதி, அவனிடம் தம்மைத் தந்து விடுவது மக்கள்பால் எளிதாக நிகழ்வதன்று. ஆயினும் நிகழ வேண்டுவதொன்று. இவை அனைத்துச் சமயங்களும் வற்புறுத்தும் ஓர் உயரிய உண்மை. மக்களுக்கு ஏற்படும் துன்பம் இறைவனால் உண்டாக்கப்படுவதன்று. இறைவனின் திருவருளுடன் ஒத்துச் செல்லாமல் தன் முனைப்புடன் புலனின்பத்தை நாடி வாழ்வதாலும், ஒரு பிறவியுடன் தொடங்கி முடிந்து விடாமல் பல பிறவிகளில் இது தொடர்ந்து வருகிறது. எப்பிறவியிலும் எழுமைக்கும் இறைவனே நம்மை ஆள்பவன், அவன் திருவருட் பாங்கின்படியே நாம் நடக்க வேண்டும் என்னும் உண்மை புலப்பட்டு, அதன்படி நாம் ஒழுகும்போது துன்பம் நீங்குகிறது. இன்பம் பிறக்கிறது.

இறைவனுக்கு உரியவர்களாக நம்மைக் கருதாமல் நாமே முழு உரிமையுடையவர்கள் என்று கருதி ஒழுகுவது வாழ்க்கையில் நிகழும் பெரும் பிழை. 'எற்றைக்கும்ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்பது, இப்பிழையை நீக்க உதவும் உண்மை. இறைவனுக்கு முற்றூட்டாகவும், முழு உரிமைப் பொருள்களாகவும் நாம் இருக்க வேண்டும் என்பதனை நினைவூட்டும் வகையில் அப்பர் பெருமானுடைய திருவாக்கு உளது :

'இடைக்கலம் அல்லேன், எழுபிறப்பும்
உனக்கு ஆட்செய்கின்றேன்'

என்று அவர் கூறுகின்றார். எழுமைக்கும் ஆட்செய்ய வொட்டாது தடுக்கும் இடர்ப்பாடுகளை வெல்வதற்கு ஒரு படைக்கலம் தேவைப்படும் அன்றோ? அப்படைக்கலம் இறைவன் திருப்பெயரின் ஐந்தெழுத்தாகும். எனவே, 'படைக் கலமாக உன் நாமத்தஞ்செழுத்து என் நாவிற் கொண்டேன்' என்று அவர் அதனையும் நமக்குத் தெளிவுறுத்துகிறார். இடைவிடாது நாத்தழும்பேறும் வகையில் இறைவன் திருப்பெயரைக் கூறி வரும்போது, உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்றும் இறைவன் திருவருட் குறிப்பின் வழி இயங்கி வரும். துன்பங்கள் நிகழும்போது இறைவனைக் குறைகூறி அவனைப் புறக்கணிப்பது உலகினர் தன்மை. ஆனால் மெய்யடியார்கள் அவனை ஒருபோதும் மறப்பதில்லை. தன்னிடம் இருந்து அவர்களை விலக்கக் கருதுவது போல அவர்களுக்கு இறைவன் இடுக்கண் விளைவித்தாலும், அவனை அவர்கள் மறப்பதில்லை; வணங்கத் தவறுவதுமில்லை. 'துடைக்கினும் போகேன்' என்று தம் உறுதியை அப்பர் புலப்படுத்துகிறார். நாவில் ஐந்தெழுத்தைக் கொள்வதோடு அமையாமல் உள்ளத்தால் வணங்கி, உடலிலும் தம் அடிமைத் திறத்தை உணர்த்துவதற்காகக் கையாளப் பெறும் முறை, 'தொழுது வணங்கித் தூநீறணிதல்' இவ்வாறு உள்ளம் உரைசெயல் ஆகிய மூன்றையும் இறைவனிடத்தில் தந்து விடுவது, தம்மையே அவனிடம் தந்திடுவது அடைக்கலம் புகுதலாகும்.

படைக்கல மாக உன்நாமத் தெழுத்தஞ்சென்
நாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப் பும்உனக்
காட்செய் கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்
தூ நீ றணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்
றம்பலத் தரனே.

அடைக்கலத்தின் திறத்தையும் சிறப்பையும் உணர்த்தும் வகையில் மாணிக்கவாசகரும், வேதாந்த தேசிகரும் அருளிச் செய்துள்ள அடைக்கலப் பத்து, சைவ வைணவச் சமயத்தவருக்கு வழி காட்டியாக அமைந்துள்ளது. ஒப்பியல் முறையில் ஒரே தலைப்பிலுள்ள இவ்விரு பதிகங்களைக் கற்பதில் இவ்விரு சமயங்களின் அடிப்படைத் தத்துவம் விளக்கமாவதுடன் எச்சமயத்தவராயினும் திருவருட் செல்வர்கள் ஓர் இனத்தவரேயாகின்றனர் என்றும் உண்மையும் புலப்படுகிறது. **

# திருமூழிக்களத்து விளக்கு

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், M.A., Ph.D.

''பின்னானார் வணங்கும் சோதி திருமூழிக் களத்தானாய்!'' என்று திருமங்கை யாழ்வாரால் போற்றிப் புகழப் பெற்றவன் திருமூழிக்களத்து எம்பெருமான். பரத்துவம்; வியூகம், அவதாரம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் ஆகிய எம்பெருமானுடைய ஐந்து நிலைகளில் முதல்நான்கிலும் சம்பந்தம் பெறாதவர்கள் (அந்வயிக்கப்பெறாதவர்கள்) 'பின்னானார்' என்று குறிப்பிடப் பெறுபவர்கள். அவர்கட்காகத் திருமூழிக்களம் முதலான அர்ச்சாவதார நிலங்களிலே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான் எம்பெருமான்: திருமூழிக்களம் என்றது எல்லாத் திவ்விய தேசங்கட்கும் உபலட்சணமாய் நிற்பதாகக் கொள்ளல் வேண்டும். ஏனைய நான்கு நிலைகளிலும் அநுபவிக்கக் கூடிய எல்லாத் திருக்குணங்களும் நிறைந்திருப்பது இந்த அர்ச்சாவதாரத்தில்தான்.

இந்த அர்ச்சாவதாரம் என்ற உருவம் எக்காலத்தவர்க்கும் எத்தேயத்தார்க்கும் காட்சி அளிக்கும்; அவரவர் விரும்பிய நலனையும் ஈந்து நிற்கும். 'மனம் வாக்குக் காயங்கட்கு எட்டாத பரம்பொருளுக்கு ஓர் உருவத்தையும் ஓரிடத்தையும் நிலைநாட்டி வழிபடுதல் யாங்ஙனம் பொருந்தும்? என ஐயுறலாம். ''ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலா'' இறைவனுக்கு 'ஆயிரம் திருநாமம் பாடுவது' எதற்காக என்று வினவலாம். அருவாய் நிற்கும் ஆண்டவன் உலக உயிர்கள் உய்யும்பொருட்டு அவற்றின் மீது கொண்டுள்ள தண்ணளியால் உருக்கொண்டு எழுந்தருளியுள்ளனர் என்பது சமயக் கொள்கை. நம் மனமும், புலன்களும், செயல்களும் ஒரு வரையறைக்குட்பட்டவை. ஆதலின், அதற்கு ஏற்ப எல்லாவற்றையும் கடந்து நிற்கும் கடவுளை வகுத்துக் கொண்டாலன்றி நாம் அக்கடவுளிடம் அன்பு செலுத்தவோ அவனது அருளைப் பெறவோ இயலாது. பரந்து செல்வதும், கட்டுக்கடங்காததும், காற்றிலும் கடுகியோடுவதுமான மனத்தை ஓரிடத்தில் நிறுத்தித் தியானிக்க ஓர் உருவம் இன்றியமையாதது. உருவம் இன்றேல் மனம் ஒருப்படுதல் இல்லை. ஊனக்கண் காணாக் கடவுளிடம் மனத்தைக் குவியச் செய்து தியானத்தில் நுழைக்க உருவம் இன்றியமையாது வேண்டப்பெறுவது.

பிற சமயத்தினரைக் காட்டிலும் வைணவர்கட்கு உருவத்தில் ஊற்றம் அதிகம். இதுவே பக்தியைக் காட்டிலும் சிறந்த பிரபத்தியைச் (சரணாகதியை) சேதனன் கடைப்பிடித்தற்குப் பொருத்தமான இடம் என்பதும், இதில் மேற்கொள்ளும் பிரபத்தியே தவறாமல் விரைவில் பயனளிக்கும் என்பதும் அவர்கள் உறுதியாகக் கொண்ட நம்பிக்கை. ஆழ்வார்கள் அனைவருமே அர்ச்சைக்கு மங்களாசாசனம் செய்திருப்பதுவே இதற்குத் தக்க சான்றாகும். அர்ச்சையின் பெருமையைப் பிள்ளை லோகாச்சாரியரும்,

''பூகத ஜலம்போலே அந்தர்யாமித்துவம்; ஆவர்ண ஜலம்போலே பரத்துவம்; பாற்கடல் போலே வியூகம்; பெருக்காறுபோலே விபவங்கள்; அதிலே தேங்கிய மடுக்கள்போலே அர்ச்சாவதாரம்''

என்று குறிப்பிட்டிருப்பது ஈண்டுக் கருதத்தக்கது. பூமிக்குள் ஆழத்தில் அடங்கிக் கிடக்கும் நீரைப் போன்றது அந்தர்யாமித்துவ நிலை; அண்டத்திற்குப் புறத்தே பெருகிக் கிடக்கும் ஆவரண நீர் போன்றது பரத்துவ நிலை; அண்டத்திற்கு உட்பட்டிருந்தும் கிட்ட அரிதாக இருக்கும் பாற்கடல் போன்றது வியூக நிலை; எப்பொழுதோ வெள்ளமிட்டோடின பெருக்காறுகள் போன்றவை விபவ அவதாரங்கள்; பெருக்காறு பெருகி வெள்ள மிட்டோடின போது அதிலே தேங்கி நின்ற நீர் நிலைகள் போன்றவை அர்ச்சாவதாரங்கள். நீர்விடாய் மிக்குத் துடிக்கும் ஒருவனுக்கு முதல் நான்கு நிலைகளிலுமுள்ள நீர் உடனே பயன்படாது; மடுக்களிலுள்ள நீரே உடன் விடாய் தீரப் பயன்படும். அங்ஙனமே, முதல் நான்கு நிலைகளிலும் உள்ள எம்பெருமான்கள் அப்பொழுதே ''கண்டே களிக்கின்றது இங்கு என்று கொல் கண்கள்?'' என்று ஆழ்வார் கூறியவாறு கண்டு பற்ற வேண்டுமென்று ஆசைப்படும் முமுட்சுகளுக்குப் பயன்படுவது இல்லை; திருக்கோயில்களிலும் அடியார்களின் திருமாளிகைகளிலும் எழுந்தருளியுள்ள அர்ச்சாவதாரமே, அவர்கட்குப் பெரிதும் பயன்படக் கூடியது.

திருமூழிக்களம் என்பது மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. ஏனைய மலைநாட்டுத் திருப்பதிகள் போலவே இதுவும் இயற்கை வனப்பு கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. இந்தத் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைத் திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். திருமங்கையாழ்வார் ''முனியே! திருமூழிக்களத்து விளக்கே!'' என்றும், ''மூழிக்களத்து விளக்கினை'' என்றும் போற்றுவர். நம்மாழ்வாரும், ''திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடர்க்கு'' என்றும், ''திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடரை'' என்றும் கூறியுள்ளார். இரண்டு ஆழ்வார்களுமே இந்தத் தலத்து எம்பெருமானைச் சுடர்ப் பொருளாகவே அருளிச் செய்திருப்பது கருதத்தக்கது. எம்பெருமானுடைய அனந்த கல்யாண குணங்களுள் சௌலப்பியம் என்னும் குணம் சிறந்தது. அந்தத் திருக்குணம் இருட்டறையில் விளக்குபோல் ஒளிர்வது அர்ச்சாவதாரத்தில்தான். அதுவும் சாதாரண மக்கட்கும் காட்சி தரும் இடமாகிய திருமூழிக்களத்தில்

அக்குணம் மிகவும் ஒளிபெற்று விளங்குதலால் ஆழ்வார்கள் இருவரும் 'விளக்கு' என்றும், 'ஒண்சுடர்' என்றும், 'சோதி' என்றும் கூறியுள்ளனர் என்று கருதலாம். ஆசாரிய இருதயம் என்னும் நூல், இத்தலத்து எம்பெருமானிடம் சௌகுமார்யகுணம் (அழகு) -கூடு பூரிக்கும்' என்று குறிப்பிடுகின்றது.

எர்ணுகுளத்தில் தங்கி திருக்காட்கரை சென்று, திருக்காட்கரை அப்பனைச் சேவித்தோமல்லவா? அங்கிருந்தபடியே 'திருமூழிக்களத்து விளக்கினையும்' காண ஆசைப்படுகிறோம். சாதாரணமாக யாத்திரை செய்பவர்கள் முன் பின் தெரியாத இடங்கட்குச் செல்லுங்கால் கிட்டத்தட்ட அந்தத் திவ்வியதேசம் இருக்கும் இடத்தைக்குற்றுமதிப்பாகத் தெரிந்துகொண்டு விட்டாலும், தங்குமிடத்திலிருந்து கொண்டு ஒருவருக்கு நான்கு பேர்களை விசாரிக்க வேண்டும். சரியாகத் தெரிந்து கொண்ட பிறகுதான் அந்த இடத்திற்குப் புறப்படுதல் வேண்டும். இல்லாவிடில் பல தொல்லைகள் விளையும். சரியான காலத்தில் பேருந்து வசதிகள் இரா ; அந்த இடத்தில் உணவு வசதி, தங்கும் வசதிகள் இருப்பதில்லை. காலமல்லாக் காலத்தில் பேருந்து கிடைத்து ஏறிச்சென்றாலும் திருக்கோயில் திருக்காப்பிடப் பெற்றிருக்கும். திருக்காப்பு நீக்கும் (திறக்கும்) வரையிலும் காத்திருக்க வேண்டியிருக்கும். சேவை முடிந்து திரும்புங்கால் பேருந்து வசதி இருப்பதில்லை. மாலைக் காலமாக நேர்ந்து விட்டாலோ சொல்ல வேண்டியதில்லை ; இட வசதி, உணவு வசதி முதலியவையின்றி அவதிப்பட வேண்டிவரும். நன்றாக விசாரித்ததில் எர்ணுகுளம்-ஷோரனூர் இருப்புப் பாதையிலுள்ள ஆல்வே நிலையத்தில் இறங்கி அங்கிருந்து பேருந்து மூலம் செல்ல வேண்டும் என்பதை அறிகின்றோம். ஆல்வே சற்றுப் பெரிய ஊராதலின் அடிக்கடி பேருந்து வசதிகள் கிடைக்கும். எர்ணுகுளத்தினின்றும் சரியாகக் காலை 7.30 மணிக்குப் புறப்படுகின்றோம். ஆல்வேயில் இறங்குகின்றோம். புகைவண்டியில் போகும்போதும் பேருந்தில் செல்லும்போதும் இரு புறமுள்ள சோலைகள், நெல் வயல்கள், கமுகு-தென்னந் தோப்புக்கள் முதலிய இயற்கை வனப்புக்களை எல்லாம் கண்டு களித்த வண்ணம் செல்லுகின்றோம். அழகு கூடு பூரிக்கும் மூழிக்களத்தின் வழியெல்லாம் அழகின் காட்சிகள் தாம். பாரதிதாசனின் ''அழகின் சிரிப்பு'' என்ற நூலிலுள்ள கவிதைகளின் காட்சிகள் யாவும் நம் நினைவிற்கு வருகின்றன. இந்தப் பகுதிகட்கு வந்துதான் அந்தக் கவிதைகளைப் பாடினரோ என்று கூட எண்ணுகின்றோம். எண்ணற்ற உயிர்கட்கு எல்லையற்ற இன்பங்களைப் படைத்துப் புரந்து இன்புறும் 'அலகிலா விளையாட்டுடை' ஆண்டவனின் பெருங்கருணைத் திறத்தினை எண்ணி எண்ணி வியந்து நிற்கின்றோம். இந் நிலையில்,

''எத்தனைகோடி இன்பம்
வைத்தாய்-எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!''

என்ற பாரதியாரின் வாக்கும் நம் நினைவுக்கு வருகின்றது. அதை நினைந்தவுடன் தொடர்ந்து,

''சித்தினை அசித்துடன்
இணைத்தாய்-அங்கு
சேரும்ஐம் பூதத்து
வியன்உலகு அமைத்தாய்
அத்தனை உலகமும்
வண்ணக் களஞ்சியம்
ஆகப் பலப்பலநல்
அழகுகள் அமைத்தாய்''

என்ற அடிகளும் தொடர்ந்து நம் மனத்தில் குமிழியிட்டு எழுகின்றன. சித்து அசித்து ஈசுவரன் என்ற மூன்று தத்துவங்களும் இயைந்து நிற்கும் அதிசயம் நம் கருத்தினைக் கவர்கின்றது. சித்தாகிய உயிரை அசித்தாகிய உடம்புடன் இணையச் செய்து அந்த உயிரை இயக்கும் இறைவனின் செயலையும், அந்த உயிர்கள் கைபுனைந்து இயற்றி அசித்தினைப் பயன்படுத்தி எத்தனையோ கோலங்கள் புனைந்து தமக்கு வேண்டிய விதவிதமான வசதிகளையெல்லாம் அமைத்து இந்த உலகினைக் 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனுக்கும்' ஏற்ற வண்ணக் களஞ்சியமாக ஆக்கிக் கொள்ளும் அற்புதத் திறத்தினையும் வியந்து போற்றுகின்றோம். 'விசிட்டாத்துவைத தத்துவத்தை' விளக்கி நிற்கும் கவிதையை நன்கு சுவைத்து மகிழ்கின்றோம். இம் மனநிலையில் ஆல்வேயை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றோம்.

ஆல்வேயிலிருந்து சுமார் பத்துக் கல் தொலைவிலுள்ளது திருமூழிக்களம். சாலையின் மீதே ஊர் அமைந்துள்ளது. பேருந்தினின்றும் இறங்கினவுடன் கால் ஃபர்லாங்கு தூரம் நடந்து திருக்கோயிலை அடைகின்றோம். நம்மாழ்வாருடன் திருக்காட்கரை அப்பனின் சீலகுணத்தில் ஈடுபட்டு அதில் ஆழங்கால் பட்டோம் அல்லவா? இங்ஙனம் நம்மாழ்வார் ஆழங்கால் பட்டவுடன் அப்பெருமானை நேரில் காண ஆசைப்பட்டுப் பிராட்டியின் நிலையிலிருந்து பராங்குச நாயகியாகத் தூது விட்டது நம் நினைவிற்கு வருகின்றது. நாரை, குருகு, கொக்கு ஆகிய பறவை இனங்களையும், வண்டு, தும்பி ஆகிய பூச்சி இனங்களையும் மேகத்தையும் அவர் தூது விட்டதை நினைந்து பார்க்கின்றோம். எம்பெருமானின் அழகையும் குணங்களையும் பற்றாசாகக் கொண்டு அவன் பால் தூது விட்டதையும், அதுவும் தாமான தன்மையை விட்டுப் பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு பராங்குச நாயகியாகத் தூது அனுப்பியதையும் சிந்திக்கின்றோம். அந்நிலை அவருக்குத் தானாக வந்து சேர்கின்றது; அதில் அவர் பரவசப்பட்டுக் கிடக்கின்றார். புருடோத்தமனான எம்பெருமானது பேராண்மைக்கு முன் உலகமடங்கலும் பெண் தன்மையாக இருப்பதையும் சீவான்மாவுக்குப் பாரதந்திரியமே (எம்பெருமான் வயத்திலிருத்தலே) வடிவாக இருப்பதையும் எண்ணுகின்றோம். வைணவ சமயப்படி ஆசாரியர்களே பறவைகளாகக் கருதப்படுகின்றனர் என்பது ஈண்டுக் கருதத்தக்கது. இனி ஆழ்வார் தூது விட்டதை நினைவு கூர்வோம்.

தன்னுடைய சோலையில் இரை தேடித் திரியும் நாரையைத் தூது போகுமாறு வேண்டுகின்றாள் பராங்குச நாயகி.

''செங்கால மடநாராய்!
திருமூழிக் களத்துஉறையும்
கொங்குஆர்பூந் துழாய்முடிஎம்
குடக்கூத்தர்க்கு என்தூதாய்
நும்கால்கள் என்தலை மேல்
கெழுமீரோ நுமரோடே''

என்று வேண்டுகின்றாள். திருவிருத்தத்தில் தூது அனுப்புவதற்கு வண்டுகளை அழைக்கும் பொழுதே,

''எம்மீசர் விண்ணோர் பிரானார்
மாசில் மலரடிக்கீழ் எம்மைச்
சேர்விக்கும் வண்டுகளே''

என்று கூறினாரல்லவா? எம்பெருமானுடைய திருவடியின்யின் கீழ்த் தம்மைச் சேர்ப்பிக்க வல்ல ஆற்றல் வாய்ந்த ஆசிரியர்களையே தூதர்களாய்க் கொண்டதை அங்கு நன்கு காட்டியருளினார். அப்படிப்பட்ட ஆசாரியர்கள் தம் சுற்றத்துடன் தம் தலையின்மீது திருவடிகளை வைப்பதே பெறற்கரிய பேறு என்பதை இத் தூதுப் பதிகத்தில் அருளிச் செய்கின்றார். 'செங்கால மட நாராய்!' என்று கால்களைச் சிறப்பித்துச் சொல்லுவதால், ஆசாரியன் திருவடிகளே தஞ்சம் என்ற தொனிப் பொருளைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

எம்பெருமான் தனது அடியார் குழாங்களுடன் திருமூழிக்களத்தில் கலந்து பரிமாறிக் கொண்டிருக்கும் நிலையில் ஒருக்கால் தன்னை (பராங்குச நாயகியை) மறந்திருத்தல் கூடும். அஃதன்றித் தன்னைப் புறக்கணிப்பதற்குக் காரணமில்லை அந்நிலையிலிருக்கும் அவரைப் பார்த்துச் செய்தி சொல்ல வேண்டும் என்று குருகினங்களை வேண்டுகின்றாள் ஆழ்வார் நாயகி,

''நுமரோடும் பிரியாதே
நீரும்நும் சேவலுமாய்
அமர்காதல் குருகினங்காள்!
அணிமூழிக் களத்துஉறையும்
எமராலும் பழிப்புண்டு
இங்கென்? தம்மால் இழிப்புண்டு
தமரோடுஅங்கு உறைவார்க்குத்
தக்கிலமே கேளீரே!''

என்ற பாசுரத்தின் மூலமாக. எம்பெருமான் உகந்த அடியார் குழுக்களுடன் தானும் வந்து அடிமை செய்வதற்குத் தகுதியில்லையா என்று கேட்குமாறு நாரையின் ஒரு பிரிவாகிய குருகினங்களைப் பணிக்கின்றாள். ''அவன் தன் அடியார்களுடன் கூடிக் குலவுவதுபோல் நீங்களும் உங்கள் உறவினருடன் கூடி வாழ்கின்றீர்கள். அவன் இருக்கும் நிலை உங்கள் திறத்தில் பலித்துள்ளது. அங்ஙனமே என் திறத்திலும் பலிக்க வேண்டாவோ?'' என்கின்றாள். எம்பெருமான் அடியார்களுடன் கூடி வாழ்வது போலவும், குருகு தன் இனத்துடன் கூடி வாழ்வது போலவும், தானும் தன் காதலனாகிய எம்பெருமானுடன் வாழும்படி செய்ய வேண்டாமா என்பது குறிப்பு. ''குறைவாளர் காரியம் குறைவற்றார்க்குத் தீர்க்க வேண்டாவோ? உண்டார்க்குப் பட்டினி கிடந்தார் பசி பரிகரிக்கப் பிராப்தமிறே'' என்பது ஈடு.

அடுத்து, கொக்கினங்களையும் குருகினங்களையும் வேண்டுகின்றாள் பராங்குச நாயகி; எம்பெருமானிடம் இரண்டில் ஒன்று கேட்டு வந்து சொல்லுமாறு குறிப்பிடுகின்றாள். பாசுரம் இது:

''தக்கிலமே கேளீர்கள்;
தடம்புனல்வாய் இரைதேரும்
கொக்கினங்காள்! குருகினங்காள்!
குளிர்மூழிக் களத்துஉறையும்
செக்கமலத்து அலர்போலும்
கண்கைகால் செங்கனிவாய்
அக்கமலத்து இலைபோலும்
திருமேனி அடிகளுக்கே''

இந்தப் பதிகத்தின் உயிரான பாட்டு இது. தம்மை அடைந்த அடியார்களுடன் உண்டான சேர்க்கையின் இனிமையால் பிரிந்தார்க்கு உயிர் தரிக்க வொண்ணாதபடியிருக்கும் தம்முடைய வடிவழகை மறந்து தன்னை நினையாதிருத்தல் கூடும் என்பது அவளது உட்கிடக்கை. இவ்வடிவழகைப் பிரிந்தார் எங்ஙனம் உயிர் தரிப்பர் என்பதனை அறிவித்து விட்டால் உடனே புறப்பட்டு வந்து விடுவார் என்பதாகக் கூறுகின்றாள். எனவே, அவரது வடிவழகை அப்பறவைகட்குக் குறிப்பிடுகின்றாள். அவருடைய உறுப்புக்கள் எல்லாம் செந்தாமரை போல் இருப்பதால், அவருடைய திருமேனி தாமரையின் இலைபோல் உள்ளது என்கின்றாள். தாமான தன்மையில் எம்பெருமானுக்கும் தடாகத்திற்கும் ஒற்றுமை காட்டி அவனை 'வாசத் தடம்' என்று கூறினவரன்றோ? ஆழ்வார். எம்பெருமானை முதன் முதலாகக் காண்பவர்களோடு அவருடைய திருக்கண்கள் முதலுறவு பண்ணும்; அத்திருக்கண்ணுக்குக் தோற்றவர்களை அவருடைய திருக்கைகள் சேர்த்து அணைத்துக் கொள்ளும்; கைகள் அணைக்குங்கால் அந்த ஊற்றின்பத்திற்குத் தோற்றார் அவருடைய திருவடிகளில் விழுவர். திருவடிகளில் விழுந்தாரை நல்ல சொற்களை நல்கி அவர்களைத் தரிப்பிக்கும் அவனுடைய புன்சிரிப்பு இங்ஙனம் உறுப்புக்களின் வனப்பையும் வடிவழகையும் காட்டி அடிமை கொண்டார் அவர். அவ்வடிவழகிற்குத் தோற்றுப் பசலையைத் தரித்திருப்பார் அவருக்குத் தகாதவரோ என்று கேட்குமாறு பணிக்கின்றாள் ஆழ்வார் நாயகி.

'தக்கிலமே கேளீர்கள்' என்பதற்கு நம்பிள்ளை ஈடு. ''நாம் ஒன்றிலே துணியும்படி கேட்டுப் பாருங்கள். அவர் இன்னும் இது வேணுமென்றிருந்தாராகில் பிராணன்களை வருந்தி நோக்கிக் கொண்டு கிடக்கவும், வேண்டா மென்றிருந்தாராகில் நாமும் ஒன்றிலே துணியும்படி அறுதியாகக் கேட்டு விடுங்கோள்' என்பதாக. அவர் இன்னும் -இவள் வேண்டும்' என்று இருந்தாராகில் பின்னின சடையினாலும் தூக்கிலிட்டுக் கொள்ளத் துணிந்த பிராட்டியைப் போல் ஏதாவதொரு வழியில் துணிவதாக உறுதி கொண்டு 'விருப்பம் உண்டா? இல்லையா?' இந்த இரண்டில் ஒன்று அறுதியிட்டுக் கேட்டுவரும்படி வேண்டுகின்றாள்.

மேலும் தூது செல்ல ஆயத்தமாக உள்ள குருகுக் கூட்டத்திலுள்ள ஓர் இளங்குருகினை விளித்து இவ்வாறு பேசுகின்றாள் :

''பூந்துழாய் முடியார்க்குப்
பொன்னுழிக் கையார்க்கு
ஏந்துநீர் இளம்குருகே!
திருமூழிக் களத்தார்க்(கு)
ஏந்துபூண் முலேபயந்து
என்இணைமலர்க்கண் நீர்ததும்ப
தாம்தம்மைக் கொண்(டு) அகல்தல்
தகவுஅன்றுஎன்று உரையீரே''

எம்பெருமானுடைய வடிவழகு நினேக்க நினேக்க ஆழ்வாரை உருக்கி விடுகின்றது என்பது இப் பாடலில் தெரிவிக்கப்படுகின்றது. ''அன்னர் திருமுடியிலே திருத்துழாய் மாலே சாத்திக் கொண்டிருக்கும் அழகு ஒன்று மட்டிலும் போதுமே ; அதற்கு மேல் கையும் திருவாழியும் ஆன அழகு 'சுடராழியும் பல்லாண்டு' என்று ஆலத்தி வழிக்க வேண்டும்படியன்றோ உள்ளது? இவ்வழகுகளே நினேத்ததனுலன்றோ நான் பசலே நிறம் அடைந்தும் கண்ணீர் சோர்ந்தும் நிற் கின்றேன். இந்நிலேயை அவருக்குப் புலப்படுத் துங்கள்'' என்று தெரிவிக்கின்ருள் பராங்குச நாயகி. ''எம்பெருமான் என்னே விட்டுப் பிரிந்து போகும்பொழுது தன்னுடைய திரு மேனியை இங்கு வைத்து விட்டன்ருே போய் இருக்க வேண்டும்? அந்தத் திருமேனியையும் கொண்டு அகன்ருரே. தமக்கு உரிமைப்பட்ட பொருளேக் கொண்டுபோவது நியாயமா? பக்தர் கட்கல்லவா அவர் உடம்பு இருப்பது?'' என்று உரைக்குமாறு பணிக்கின்ருள். ''இங்ஙனம் செய்வது தகுதியன்று'' என்று தெரிவிக்குமாறும் வேண்டுகின்ருள். 'தமக்கு உரிமைப்பட்ட பொருள்' என்பதை ''தனக்கே ஆக எனேக் கொள்ளும் ஈதே'' என்று மூதலித்தவ ன்ருே இவர்?

இந்நிலேயில் வானத்தில் உலாப்போகும் சில மேகங்களேக் காண்கின்ருள் ஆழ்வார் நாயகி; உடனே அவற்றைத் தூது போகுமாறு வேண்டுகின்ருள்.

''திருமேனி அடிகளுக்குத்
தீவினேயேன் விடுதூ தாய்
திருமூழிக் களம்என்னும்
செழுநகர்வாய் அளிமுகில்காள்!
திருமேனி அவட்குஅருளீர்
என்றக்கால் உம்மைத்தன்
திருமேனி ஒளி அகற்றித்
தெளிவிசும்பு கடியுமே?''

வடிவழதையே அடையாளமாக் கொண்டு விளங்கும் எம்பெருமானுக்குத் 'திருமேனி அடி கள்' என்று ஒரு திருநாமம் சாத்துகின்ருள் பராங்குசநாயகி. வடிவழகினுல் ஆன்மாக்கள் அனேத்தையும் தோற்பித்து அடிமை கொள்ப வருக்கு இது பொருத்தமான பெயரன்ருே? எதிரிகளேயும் அவ்வடிவம் கவரும் அல்லவா? கண்ணன் தூது போகுங்கால், அவனுக்கு அவை யில் எவரும் மரியாதை செலுத்தலாகாது என்று ஆணேயிட்டிருந்தான் துரியோதனன். கண்ண பிரான் ஆங்கு எழுந்தருளுங்கால் அவையில் இருந்த அரசர்கள் அனேவரும் கண்ணனின் சோதி வடிவு கண்டு பரவசராய் எழுந்து மரி யாதை செலுத்தினர். துரியோதனனும் துடை நடுங்கி எழுந்துவிட்டு உடனே தன் உறுதி தடு மாறியதற்கு வருந்தி 'என்னே இத்திருமேனி அழகு!'' என்று கண்ணனே ஊற்று நோக்கினுனும். இதனேப் பெரியாழ்வார் குறிப்பிடுகின்ருர். ''அப்படிப்பட்ட திருமேனியை இழந்து உங்கள் காலில் விழும்படியான 'தீவினேயேன்' ஆயி னேனே'' என்கின்ருள். எதிர்மறை இலக்கணே யால் 'நல்வினேயேன்' என்பது குறிப்பு. பரமன் அடியார்களின் திருவடிகளில் வீழ்தல் நல்வினேப் பயனன்ருே? நான் விடு தூதாய் நீங்கள் திரு மூழிக்களத்திற் சேகி அத்திருமேனியடிகளே நோக்கி, 'திருப்புளியடியிலே கிடக்கின்ற ஒருத்தி உம்முடைய திருமேனியில் ஆசை வைத்து நை கின்ருள்; அவளுக்கு உமது திருமேனியைக் கொடுத்தருள்வீர்' என்று சொல்லுவீர்களாக' என்று குறையிரக்கின்ருள். இச்சொல்லுதவி புரியின் அவர்கள் புதிய பொலிவினேப் பெற்றுத் தெளிவிசும்புப் பேறும் பெறுவர் என்கின்ருள்.

மேலும், மேகத்தை நோக்கி இவ்வாறு பேசுகின்ருள் :

''தெளிவிசும்பு கடிதுஓடித்
தீவிளேத்து மின்இலகும்
ஒளிமுகில்காள்! திருமூழிக்
களத்துஉறையும் ஒண்சுடர்க்குத்
தெளிவிசும்பு திருநாடாத்
தீவினேயேன் மனத்துஉறையும்
துளிவார்கள் குழலார்க்குஎன்
தூதுஉரைத்தல் செப்புமினே''

இங்கு மேகங்களே ஆசாரியர்களாகக் கொள்ளல் வேண்டும். விண்ணில் விரைவாகச் சஞ்சரித்தலும், கொள்ளிவட்டம்போல் மின்னல் விளங்கப் பெறுதலும் முகில்களின் இயல்பு. ஆசாரியர்கட்கும் லீலாவிபூதி நித்தியவிபூதி என்ற இடங்களில் சஞ்சரிக்க வல்லமையுண்டாத லாம் 'தெளிவிசும்பு கடிதோடுகை' அவர்கட்கும் பொருந்தும். நன்ருக மழை பொழியும் சமயத் தில்தான் மேகத்தில் மின்னல் தோன்றும். அங் ஙனமே சிறப்புப் பொருள்களே அருளும் நிலேயில் ஆசாரியர்களும் இருப்பர். மேலும் மேகத்தை 'ஒளிமுகில்' என்று விளித்து, எம்பெருமானேயும் 'ஒண்சுடர்' என்று குறிப்பிட்டிருப்பதிலும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஆசாரியர்கள் எம்பெரு மானினின்றும் வேறுபட்டவரல்லர் என்றும், இருவரும் எல்லாவற்றிலும் ஒப்புடையவர் என்றும் காட்டற்காகவே இங்ஙனம் கூறப் பெற்றதாகக் கொள்ள வேண்டும்.

பரமபதத்தில் காட்டும் பெருவிருப்பத்தை எம்பெருமான் தன் பக்கம் காட்டுவதாக ஆழ் வார் நாயகி கொள்வதால், 'தெளிவிசும்பு திரு நாடாகத் தீவினேயேன் மனத்துறையும்' என்று குறிப்பிடுகின்ருள். நெஞ்சில் எழுந்தருளியிருந் தும் அவனேக் கண்ணுல் காண முடியவில்லேயே என்று நைகின்ருள். துன்புறுபவர்களேக் காப்ப தற்கென்று திருமுடியில் தனி மாலேயிட்டிருக்கும் எம்பெருமானுக்குத் தன் விண்ணப்பத்தைத் தெரிவிக்குமாறு வேண்டுகின்ருள். ஈண்டு ஆரு யிரப்படியின் அருளிச் செயல் சுவை மிக்கது ; ''அவளுக்கு அருளீர் என்ன அமையுமோ? இன் னருக்கு அருளீர் என்ன வேண்டாவோ என்னில், யாவள் ஒருத்தியுடைய நெஞ்சை உமக்குத் திரு நாடாகக் கொண்டு நீர் உறைகின்றீரோ அவ ளுக்கு அருளீர் என்று சொல்லிக் கொள் என்

கின்ருள்'' என்பதை எண்ணி எண்ணி மகிழ் வோமாக.

சீதாப் பிராட்டியை ஆயிரக்கணக்கான வானரங்கள் தேடுவதைப் போலவே, கண்ணில் கண்டவற்றை எல்லாம் ஏவுகின்ருள் ஆழ்வார் நாயகி. அனுப்பப்பெற்ற சில பறவைகள் தன் காரியத்தைத் தலைக்கட்டும் என்று பொறுக்கக் கூடிய நிலையிலில்லை அவள். அடுத்து, சில வண்டுகளைப் பார்த்து,

''தூ துரைத்தல் செப்புமின்கள்
தூ மொழிவாய் வண்டினங்காள்!''

என்று வேண்டுகின்ருள். அவள் விரும்பாரா கிலும் வண்டுகளின் பேச்சு இனிமையாக இருப் பதால் வரவேற்கப்பெறும் என்பதாகக் குறிப் பிடுகின்ருள். இனிய பேச்சினல் எம்பெருமானை யும் வசப்படுத்திக் கொள்ள வல்லவர்கள் ஆசாரியர்கள் என்பது குறிப்பு. வண்டுகள் செல்லக் கூடிய இடமோ 'போது இரைத்து மது நுகரும் பொழில்' சூழ்ந்துள்ள திருமூழிக் களம் ஆகும். மலர்கள் பூத்து மண்டிக் கிடக்கும் சோலைகளாதலால் வண்டுகள் மகிழ்ச்சி பொங்க மது பானமும் பண்ணலாம் படியான இடம் என்பதையும் குறிப்பிடுகின்ருள்.

''மாதரைத்தம் மார்பகத்தே
வைத்தார்க்கு என்வாய்மாற்றம்
தூ துஉரைத்தல் செப்புதிரேல்
சுடர்வளையும் கலையுமே''

வண்டுகள் செய்தியைச் சொல்லுமளவே வேண்டப்படுவது; அவற்றின் சொற்களைக் கேட்டுக் கொண்டிருக்கவும், கேட்டுப் பாராட் டுவதற்கும் அருகே பெரிய பிராட்டி இருப்ப தால் பரிந்துரைத்தலுக்கும் (புருஷ காரம்) குறைவில்லை என்கின்ருள். உலக அன்னையாகிய பெரிய பிராட்டியார் சீவான்மாக்களின் துன் பத்தை எடுத்துரைத்து எம்பெருமானின் கருணை வெள்ளமிட்டோடக் காரணமாக இருப்பாள் என்பது வைணவக் கொள்கை. ''என்ன சொல்ல வேண்டும் தெரியுமோ? என்னுடைய கைவளையும் சேலையும் பற்றிச் சொல்லுவீர்க ளாக'' என்று பணிக்கின்ருள். அவை இரண்டும் தளர்ச்சியுற்றமையைக் கூற வேண்டும் என்ப தாகவும் கொள்ளலாம்; அல்லது, அவை தன்னு டையவையாகும் என்பதாகவும் கொள்ளலாம். அறிவித்த அளவிலே, அவர் வரவு தப்பாது என்பது குறிப்பு.

அடுத்து, இன்னெலி செய்து கொண்டு பறக்கும் வண்டினங்களையும் தும்பிகளையும் பார்த்துப் பேசுகின்ருள். அவையோ அவள் இருக்கும் சோலையில் வயிருர மது நுகர்ந்து மகிழ்ச்சி பொங்கிய நிலையிலுள்ளவை. அவரோ தம் அழகுக்கு ஆபத்து நேராத வண்ணம் திண் ணிதான மதில் சூழ்ந்த திருமூழிக்களத்தில் உள்ளார். காப்பதற்கென்றே தனி மாலையிட்டுக் கொண்டு இருக்கின்ருர். அவருடைய காயாம் பூ மேனியின் வடிவழகில் தனக்குள்ள விருப் பத்தைச் சொல்லுமாறு பணிக்கின்ருள். இவ் விடத்தில் ஆருயிரப்படி அருளிச் செயல்: ''வண்டினங்காள்! தும்பிகாள்! உன் அழகைக் காணப்பெருதே அவள் இழந்துபோம். இத்தனை யோவென்று சொல்லிக்கொள என்கின்ருள்'' என்பதாக.

இங்ஙனம் வண்டினங்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்பொழுது குருகினங்கள் அடங் கிய பறவைக் கூட்டம் ஒன்று வருகின்றது. அவற்றைப் பார்த்துப் பேசத் தொடங்குகின் ருள் பராங்குச நாயகி.

''ஒருநாள்ஓர் தூயமாற்றம்
படர்பொழில்வாய்க் குருகினங்காள்!
எனக்கொன்று பணியீரே''

என்று தனக்காகத் தூது போய் வரும்படி வேண்டுகின்ருள். யாரிடம் போய் வரவேண்டும் என்பதைக் குறிப்பிடுங்கால்,

''சுடர்வளையும் கலையுங்கொண்டு
அருவினையேன் தோள்துறந்த்
படர்புகழான்''

என்கின்ருள். தன்னுடைய வளையலையும் சேலை யையும் கவர்ந்து கொண்டு சென்றவர் அவர். ஆதரித்து வந்து என்னைக் கலந்தவர் தன்னை விட்டுப் போகும்படியான பாபத்தைப் பண்ணி னவன் என்பதை 'அருவினையேன்' என்று குறிப் பிடுகின்ருள். அவருடைய புகழோ சொல்லி முடியாது. பரந்த புகழையுடையவர். அங்ங னம் கவர்ந்து சென்றவர் கண்காணு இடத்திற்கு ஓடிவிடவும் இல்லை.

''திருமூழிக்
களத்துறையும் பங்கயக்கண்
சுடர்ப்பவள வாயன்''

அவர் அண்மையிலேயே, திருமூழிக்களத் தில் நித்தியவாசம் செய்கின்ருர் என்பதை யும் குறிப்பிடுகின்ருள். அவரது நோக்கையும் முறுவலையும் அநுபவித்தவர் எங்ஙனம் ஆற்றி யிருக்க முடியும் என்பதனை எடுத்துக்கூற வேண்டும் என்பது குறிப்பு

சிறிது நேரத்தில் ஆழ்வார்நாயகி சில அன்னங்களைப் பார்க்க நேரிடுகின்றது. அவற் றைப் பார்த்து வேண்டுகின்ருள். அவருடைய பெருமைக்கு இங்ஙனம் ஒருத்தியைக் கலங்க வைப்பது தகுதியன்று என்பதை உணர்த்துமாறு செப்புகின்ருள்.

''தகவுஅன்று என்றுஉரையீர்கள்
தடம்புனல்வாய் இரைதேர்ந்து
மிகஇன்பம் படமேவும்
மெல்நடைய அன்னங்காள்!
மிகமேனி மெலிவுஎய்தி
மேகலையும் ஈடுஅழிந்துஎன்
அகமேனி ஒழியாமே
திருமூழிக் களத்தார்க்கே''

'தகவு அன்று என்று உரையீர்கள்' என்பது இதயத்தில் வைக்கும்படியான சொல் என்பது ஆழ்வார் நாயகி திருவுள்ளம். எம்பெருமானது பிரிவினல் உடலும் மெலிந்து மேகலையும் தாங் காதபடி சீர்குலைந்தது. இனி தன் 'அகமேனி' ஒழிவதற்கு முன் தன் நிலையைத் தெரிவிக்குமாறு

அன்னங்களை வேண்டுகின்றாள். எல்லா ஆன்மாக்களும் எம்பெருமானுக்கு உடலாக இருப்பினும் (சரீர-சரீரிபாவனை) தன் ஆன்மாவை 'அகமேனி' என்று சிறப்பிக்கின்றார் ஆழ்வார். இவ்வுலகில் எம்பெருமானுக்குக் கிடைத்தற்கரிய 'மகாத்மா' அன்றோ ஆழ்வார்? ஈண்டு ஆசாரியர்களே அன்னமாக விளிக்கப்பெறுகின்றனர் என்பது அறியத்தக்கது. தங்கட்குப் பேரின்பம் பயக்கும் நுண்பொருள்களைத் தேடுவதில் நோக்குடையவர்களாதலாலும், அவர்கள் 'மென்னடைய அன்னங்கள்' எனப்பட்டனர்.

இங்ஙனம் ஆழ்வார் பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக்கொண்டு பேசிய அநுபவத்தை நினைந்தவண்ணம் திருமூழிக்களத்தில் கிழக்கு நோக்கி வணங்கிக் களிக்கின்றோம். நம்மாழ்வார் பெற்ற அநுபவத்தையும் பெற முயல்கின்றோம். நம்மாழ்வார் அநுபவமே சீதாப் பிராட்டியார் பெற்ற அனுபவமாகும். இதை ஆழ்வாரே,

''ஒழிவின்றித் திருமூழிக்
களத்துஉறையும் ஒண்சுடரை
ஒழிவில்லா அணிமழலைக்
கிளிமொழியாள் அலற்றியசொல்''

என்று குறிப்பிடுவதைக் காணலாம். இதனையொட்டியே ஆறாயிரப்படி அருளிச்செயலும் 'எம்பெருமானைப் பிரியில் தரிக்க மாட்டாத ஸ்வபாவையாயிருப்பாளொரு பிராட்டி அவளைப் பிரிந்து அலற்றின பாசுரத்தாலே, தத்ஸத்ருசஸ்வபாவரான (பிராட்டிக்குச் சமமான இயல்புடைய) வண்குருகூர்ச் சடகோபன் எம்பெருமானைப் பிரிந்தலற்றின இப்பத்து'' என்று குறிப்பிடுகின்றது. இராமகிருஷ்ண முதலாய அவதாரங்கள் எடுத்த பிறகு இறுதியில் தன் சோதிக்கு எழுந்தருளும் நிலை ஏற்படுகின்றது; அர்ச்சாவதாரம் அப்படியின்றி, 'சம்சாரத்தின் கிழங்கு எடுத்தாலல்லது பேரேன்' என்றிருக்கும் இருப்பேயாதலால் 'ஒழிவின்றி உறையும்' என்று சிறப்பிக்கின்றார். இந்தப் பத்துப் பாசுரங்களையும் எப்பெருமான் சந்நிதியிலேயே ஓதி 'நோயறுக்குமே' என்று கூறியவாறு சம்சாரமாகிய நோயினைத் தீர்க்கும் உணர்வினைப் பெறுகின்றோம். பெறவே,

''காண்கின்ற ஐம்பூதங்
கட்கும்இரு சுடர்க்கும்
சேண்கலந்த இந்திரற்கும்,
தேவர்க்கும், மாண்கரிய
பாழிக் களத்தூர்க்கும்
பங்கயத்து நான்முகற்கும்
மூழிக்களத்தான் முதல்''

என்ற பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாசுரமும் நம் நினைவிற்கு வருகின்றது. அந்த நினைவுடன், 'மூழிக்களத்தானே முதற் கடவுள்' என்ற எண்ணத்துடன், மனநிறைவு பெற்று நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

158618
800 009


## நூல்கள் அறிமுகம்

(1) திருவேட்டீஸ்வரர் புராணம்: அண்மையில் 5-9-76 அன்று, சென்னைத் திருவல்லிக்கேணி திருவேட்டீஸ்வரன்பேட்டைக் கோயிலின் கும்பாபிஷேக விழாவினை ஒட்டி வெளியிடப் பெற்றது. இப்புராணம் விருத்தப்பாவால் இயன்றது. பாயிரம் நீங்கலாக 9 படலங்கள் கொண்டது. மொத்தம் 424 பாக்கள் அடங்கியது. இந்நூலின் மூலத்தை நன்கினிது ஆராய்ந்து வெளியிட்டிருப்பதுடன், இதற்குச் சிறப்பான குறிப்புரையும் உரைநடையும், சைவ சித்தாந்தப் பெரியார், இராவ்சாகிப் திரு. நல் முருகேச முதலியார் B.A., அவர்கள் செல்வின் இயற்றிப் பதிப்பித்து அளித்திருக்கின்றார்கள். அரியதோர் ஆராய்ச்சிப் பகுதியும் நூலில் முதற்கண் அவர்களால் எழுதப் பெற்றுள்ளது. ஸ்ரீலஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகள், சிவத்திரு ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் இந்நூலுக்கு ஆசியுரை அளித்துள்ளனர். திருப்பணிக் குழுவின் தலைவரும், முன்னாள் அறநிலையத்துறையின் ஆணையருமாகிய திரு. ஆ. இராதாகிருஷ்ணன், M.A., B.L., அவர்கள், இந்நூல் வெளியீட்டிற்குப் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்ததுடன் பதிப்புரையும் வரைந்திருக்கின்றார்கள். இத்தலபுராணத்தினைக் கும்பாபிஷேக விழாவின்போது, நமது அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I. A. S. அவர்கள் வெளியிட்டு, இதன் முதற் பிரதியை முன்னாள் முதல்வர் திரு. எம். பக்தவச்சலம் அவர்களுக்கு வழங்கினார்கள். மிகவும் சிறந்த இனிய நல்ல திருத்தமான பதிப்பு. அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும். விலை 5. கிடைக்குமிடம்: நிர்வாக அலுவலர், அருள்மிகு திருவேட்டீஸ்வரன் கோயில், திருவல்லிக்கேணி, சென்னை-5.

—ஆசிரியர்.



28.12.1976 அன்று காஞ்சிபுரம் குமரக் கோட்டம் அருள்திரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற மாநாட்டில் இந்துசமய அறநிலைய ஆணையர் தலைமை தாங்கி பரிசளித்தார். சென்னை துணை ஆணையர் திரு. ந. சூர்யராஜ் விழாவினை துவக்கி வைத்தார். காஞ்சிபுரம் உதவி ஆணையர் திரு. K. நடராஜன் சிறப்புரை ஆற்றினார். ஆலய தக்கார் திரு. V. K. R. K. கோவிந்தராஜ முதலியார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு. A. பெரியதம்பி முதலியார் (திருப்பணிக்குழுத் தலைவர் அருள்திரு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்) மற்றும் திருப்பாவை திருவெம்பாவை மத்ய குழுச் செயலர் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.



28.12.1976 அன்று காஞ்சிபுரம் குமரக்கோட்டத்தில் நடந்த பாவை மாநாட்டில், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள் தலைமை தாங்கி பரிசளிக்கிறார். அருகே சென்னைத் துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ், B.A., B.L., மற்றும் செயல் அலுவலர் திரு. எ. சுப்பிரமணியன், M.A., B.L., ஆகியோர் உள்ளனர்.

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.